ஒக்ரோபர்

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

மங்கையரின் தோழி

ஒளி 05 இதழ் 08

பக்கங்கள் : 80 (68 + 12)

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புத படைப்பு | விலை ரூபா 100

இலவச இணைப்பு → அறிவுக் களஞ்சியம் (12 பக்கம்)

தரம் - 04 பயிற்சிப் பரீட்சை - திருத்தற் சேவை



மின்னும் தாரகைகள் 22


புத்தகங்களுக்குள் வாழும் பூவை 14

வாசிப்புமாத சிறப்புத்தேடல்

நினைவாற்றலுக்கு சவால் விடும் பாலகன்

உலக கொடி நாயகன் 07







பற்றுறுதி தளராத படைப்பாளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


08 நாமும் சிறார்களும்

11 கனவுகளைக் காதலியுங்கள்

18 உயிரைச் சிதைத்த உறவு

28 முதியோர் எம் முதுசங்கள்

46 மாலை சூட காத்திருக்கும் மங்கையர்

48 எதிரியும் எதிரியின் நண்பனும்

53 ஔவையாரும் மார்க்கும்

54 ஆட்டிசம்

64 வளையல் ஓசை

65 மனமே கலங்காதே








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளிஅரசி

மங்கையரின் தோழி

**வெளியீட்டாளர்** மாஸ்மீடியா சேவிஸ்

இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04

**ஆசிரியர்கள்**

பிரதம ஆசிரியர் : திருமதி யசோதை சரவணபவன்
ஆசிரியர் : திரு. இ. ஜனதன்
இணை ஆசிரியர் : திருமதி பா. ஜயிலா

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| திரு. ச. லலீசன் | அச்சுவேலி |
| நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் | கொழும்பு |
| திருமதி தேவா மாதவன் | கொழும்பு |
| இரா. நிசாந்தன் | வட்டக்கச்சி |
| ஸகீட். எச். சப்றின் | மருதமுனை |
| கவிஞர் பிறேம்ராஜ் | கொழும்பு |
| திருமதி சூர்யா சிவரூபன் | வட்டுக்கோட்டை |
| எஸ். எல். மன்சூர் | அட்டாளைச்சேனை |
| செல்வி பாலாஜினி | பளை |
| து.திலக் (கிரி) | சுவிஸ் |
| காரை. எம். பி. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |

**ஆலோசகர்கள்**

திருமதி கோகிலா மகேந்திரன் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. த. ஜெயசீலன் (கவிஞர், மாநகர சபை ஆணையாளர்)
திரு. செ. செல்வராசா (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. செ. மகேஷ் (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்)
திருமதி சிவமலர் சுந்தரபாரதி (அதிபர்)
மைமூனா அகமட் (ஓய்வுபெற்ற நீதியரசர்)
திரு. சி. நற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் (சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர்)
திரு. ஏ. ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. எஸ்.சரவணபவானந்தன் (கோட்டக்கல்வி அதிகாரி )
திரு. ஏ.ஜே.ஞானேந்திரன் (சிரேஷ்ட எழுத்தாளர் - சுவிஸ்)
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (ஊடகவியலாளர்)

**சட்டஆலோசகர் :** திரு. ரட்ணம் ரகுராஜா

**தபால் முகவரி**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**தொடர்புகளுக்கு :**

தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369,0714273035
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0714273035

**இதழ் வடிவமைப்பு**

எம்.ஜீவநீதன்

## பிரதம ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

## வணக்கம் வாசகநெஞ்சங்களே!

குழந்தைகள் தினம், முதியோர் தினம், ஆசிரியர் தினம் என வாழ்வியலின் முக்கிய பரிமாணங்கள் கொண்டவர்களுக்கான தினங்கள் ஒரே மாதத்தில் வருவது மிகச்சிறப்பாகும். அது மட்டுமன்றி இம்மாதம் வாசிப்பு மாதமாகவும் இருப்பது கூடுதல் சிறப்பு.

குழந்தைகள் இனிமையைத் தருபவர்கள், ஆசிரியர்கள் அறிவைத்தருபவர்கள், முதியோர் எம் ஆணிவேர்கள். இவர்கள் அனைவருமே போற்றுதலுக்கும் ஆராதித்தலுக்கும் உரியவர்களே.

ஆனால் நாம் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். குழந்தைகளாக இருக்கையில் ஆசிரியம் போற்றவும் முதியோரைப் பேணவும் சொல்லிக் கொடுத்து வளர்த்து விட்டால் முதியோர் இல்லங்கள் அவசிய மற்றுப் போய்விடும். ஆசிரியத்தின் அபரிமிதம் ஒரு நாளும் குறைவுபடாது.

குழந்தைகள் பல வேறான மனஉணர்வுகளைக் கொண்டவர்கள். இவர்களின் மன உணர்வுகள் தேங்கியிருக்கும் தன்மை கொண்டதல்ல. வானவில்லின் பல வர்ணம் போல கலவையானது, அது மாறிமாறி வந்துபோகும் தன்மைகொண்டது. அவர்கள் சூழலைப் புரிந்து அதற்கேற்றபடி நடக்கத் தொடங்கும் வரை அவர்கள் குழந்தைத்தனம் கொண்டவர்களே.

அவர்களை நெறிப்படுத்தவும் ஆரோக்கியமான மனநிலையுடன் வாழவைக்கவும் மிக முக்கிய பங்காற்றுபவை புத்தகங்களே ஆகும். உருவத்தை காட்டுவது கண்ணாடி என்றால் உள்ளத்தைக்காட்டுவது நிச்சயம் புத்தகங்களே தான். கூட்டுக்குடும்ப வாழ்க்கை எம்மிடையே இருந்த காலத்தில் தாத்தாவும் பாட்டியும் ஏனைய முதிர்ந்த உறவுகளும் நடமாடும் புத்தகங்களாக இருந்தவர்கள். இன்றைய காலத்தில் அந்த உறவுகள் வீட்டை விட்டு தள்ளிவைக்கப்பட்டு விட்டதால் வாழ்க்கை பற்றிய புரிதல்களை அளிக்கக்கூடியனவாக புத்தகங்களே உள்ளன.

வாசிப்பு அருகிவிட்டது என வார்த்தைகளில் சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை. வாசிப்பு நேசிக்கப்பட வேண்டும் என்றால் தாயும் தந்தையும் துணையாகவேண்டும். எந்த வீட்டில் தாய் தகப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களை வாங்கிக் கொண்டுவருகின்றார்களோ, எந்த தாய் தகப்பன் புத்தகங்கள் வாசிப்பதை பிள்ளைகள் பார்க்கின்றார்களோ எந்த தாய்தகப்பன் பிள்ளைகள் முன்னிலையில் புத்தகங்களைப் பற்றியோ படைப்புகள் பற்றியோ பேசுகின்றார்களோ அந்த வீட்டில் நிச்சயம் வாசிப்பின் தாகம் இயல்பாகிவிடும்.

வீட்டில் உணவு உண்ணும் போதோ அல்லது அனைவரும் கூடியிருக்கும் வேளைகளிலோ புத்தகங்கள் பற்றியும் எழுத்தாளர்கள் பற்றியும் படைப்பதன் மகத்துவம் பற்றியும் பேசிக் கொண்டிருந்தால் வாசிப்பு மீதான விருப்பு பிள்ளைகளுக்கு உண்டாகிவிடும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

புத்தகம் மனித இயல்புகளை மாற்றிவிடும் தன்மை கொண்டது என்பதற்கு பல சான்றாளர்கள் உள்ளனர். புத்தகங்கள் என்பதற்காக பள்ளியில் கொடுப்பதை மட்டும் புத்தகம் எனக்கருதிவிடக்கூடாது. குழந்தைகள் வாசிப்பதற்கான புத்தகங்கள் நிறைய உள்ளன. அவற்றை வாங்கிவந்து பிள்ளைகளிடம் கொடுத்து வாசிக்கச் செய்வது குழந்தை வளர்ப்பில் பெற்றோர் கடைப்பிடிக்கும் மிக உன்னதமான ஒரு வழிகாட்டுதலாகும். மனித நெறிப்படுத்தலுக்கு புத்தகங்கள் மிக அவசியம்.

இது வாசிப்பு மாதமும் என்பதால் வாரம் ஒரு புத்தகமாவது வாங்கி உங்கள் பிள்ளைகளின் வாசிப்பு தாகத்திற்கு நீரூற்றுங்கள் பெற்றோர்களே.

பிரதம ஆசிரியர்

---

## இம்மாத சிந்தனைக்கு:

**குறள்**

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

**பொருள்**

வீட்டில் பொருட்களைக் காத்து அவற்றைச் சேமித்து பாதுகாப்பதெல்லாம் விருந்தினர்களை உபசரிப்பதற்காகவே ஆகும். விருந்தோம்பல் என்பது சிறப்பான ஒன்றாகும்.

## ஒளிஅரசி சந்தா விபரம்

**அன்பு வாசகர்களே!**

ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளவேண்டுமா? கீழுள்ள வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பிலிட்டு வைப்புத்துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது 071 4273035 என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.

| | |
|---|---|
| கட்டணத்தொகை | உள்நாடு - ரூ. (85X12=1020) + (30X12=360) =1380 |
| வங்கியின் பெயர் | ஹற்றன் நஷனல் வங்கி. |
| வைப்பிலிடவேண்டிய பெயர் | mass media services |
| வங்கி கணக்கு இலக்கம் | 009010383405 |
| வெளிநாடு | 50$ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அன்புள்ள நித்திலா அறிவது,**

உன் மடல் கண்டேன். மன மகிழ்ச்சி அடைந்தேன். இணையம் அனைவரையும் ஆட்கொண்டுவிட்ட இக்காலத்தில் அஞ்சல் வழித்தொடர்பு கொள்ள வேண்டும் என்ற உன் எண்ணத்தினை நான் பாராட்டுகிறேன்.

உன்னைப் போன்ற பழமையை மறவாத புதுமையை நேசிக்கும் பக்குவம் எல்லா மனிதர்களிடமும் இருந்துவிட்டால் பல பிரச்சினைகள் இல்லாதுபோய்விடும் என்பது திண்ணம்.

இப்போது அங்கு கடுங்குளிர் என அறிந்தேன், அப்படியா? குளிரோடு வாழும் இயந்திரமயமான வாழ்க்கையில் ஊரார் கூடும் சில நிகழ்வுகளே மகிழ்வைத் தருகிறது எனவும் ஊரைப் பற்றிய எண்ணங்களே மனதை நிறைத்திருப்பதாகவும் எழுதியிருந்தாய். உண்மைதான் நாம் வாழ்ந்த மண்ணும் அதன் நினைவுகளும் இன்னும் உள்ளத்தை பசுமையாய் நிறைத்திருப்பது உண்மை.

ஆனால் அப்போதைய காலமகிழ்வு இப்போது இல்லை. அங்கே பிள்ளைகள் வாசிப்பது அரிது என்றும் இங்கு அப்படி இல்லைத்தானே எனவும் வினா எழுப்பியிருந்தாய். நீ நினைப்பது தவறு. இங்கும் வாசிப்பு அருகிவிட்டது.

காரணமென்று எதைச்சொல்வதென்று எனக்குப் புரியவில்லை, நாங்கள் சிறார்களாய் இருந்த காலத்தில் நூலகத்தோடும் விளையாட்டோடும் தான் எங்கள் பொழுதுகள் கழிந்தன. இப்போது கையில் போனோடும் அருகில் லப்போடும் தான் உள்ளனர். இணையத்தில் உள்நுழைய பல வழிகள் திறக்கப்பட்டுள்ளன. கைகாசு இப்படித்தான் கரைகின்றது. அது நன்மை தருகின்றது என்றாலும் எம் பிள்ளைகள் தீமையையே அதிகம் நாடுகின்றனரோ என எண்ணத் தோன்றுகின்றது.

வாசிக்க மறுக்கின்றனர், கண்வழிக் காட்சிக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர். அது நன்மையொடு தீமையும் கொடுக்கிறதே. எங்களுடைய காலத்தில் நிறைய நல்ல விடயங்களை வாசித்தோம், அதன் காரணமாய் நற்பண்புகள் உள்ளத்தில் மலர்ந்தன. இன்று வாசிப்பு அருகிவிட்டது, நல்ல எண்ணங்கள் மனதை நிறைப்பதும் குறைந்துவிட்டது. தேவையற்ற எண்ணங்களும் குரூர சிந்தனைகளும் இதயத்தில் நுழைந்தால் வன்முறைகளும் அதிகரிக்கத்தானே செய்யும். பக்தியின் செயற் பாடுகளில் கூட களியாட்டங்கள் அதிகரித்திருக்கின்றது.

பிள்ளைகளை வாசிக்கச் செய்வதில் பெற்றவர்களின் பங்கு அதிகம் இருக்கவேண்டும், பின்னர் அதிபர், ஆசிரியர்களும் இவ்விடயத்தினை கருத்திலெடுக்கவேண்டும். கல்வி மட்டுமே வாழ்க்கை என்ற எண்ணக்கோட்பாடு பலரையும் ஆட்டிப் படைப்பதால் பாடசாலைக் கல்வியே முழுவதும் என எண்ணுகின்றனர் எமது பெற்றோர் சிலர்.

வாசிப்பினால் பூரணம் அடைந்துவிட்டால் மிருகத்தனங்கள் அழிந்துவிடும், எண்ணமும் சிந்தனையும் செம்மையுறும். நற்பண்புகள் தானாகவே மலர்ந்துவிடும். இதனைப் புரிந்துகொண்டு வழிநடத்தினால் பல கொடிய சம்பவங்கள் இல்லாது போகும் என்பது எனது எண்ணம். சரி, உன் கேள்வியின் பதிலோடு இம்மடலை நிறைவுசெய்து உன் பதிலுக்காய் காத்திருக்கின்றேன்.

அன்புடன் காவியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் அரும்பு

# "உலகக்கொடி நாயகன்" செல்வன் அன்பழகன் அனுராகன்



தொகுப்பு
மட்டுவில் ஜனா

தனித்தன்மை, திறமை, விடாமுயற்சிஎன்பன இருந்தால் ஒருவர் சாதனையாளராக திகழ்ந்து நட்சத்திரமாக ஜொலிக்க முடியும்.

அந்த வகையில் தரம் 3 இல் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்கும் செல்வன் அனுராகன் பல்வேறு திறமைகள் பொதிந்த ஒரு சிறுவர் அறிஞராக தன்னை நிருபித்துள்ளார். இவர் கல்வியிலும், இதர துறைகளிலும் சாதித்து வருகின்றார்.

இவரை ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக அறிமுகப்படுத்துவதில் ஒளிஅரசி பெருமையடைகின்றது.

இந்தக் குழந்தை நட்சத்திரம் 300க்கும் மேற்பட்ட உலகநாடுகளின் பெயர்கள், கொடிகள் என்பவற்றை துல்லியமாக அறிந்து வைத்திருப்பதுடன், அதனை வரைந்து வேறுபாடுகளையும் விளக்கும் திறனை கொண்டுள்ளார். குறிப்பாக உலகவரைபடத்தையும், புவியியலையும் மூளையில் கணணிபோன்று ஞாபகப்படுத்தி பதிவு செய்து வைத்துள்ளார். ஒரு நாட்டின் பெயரைச் சொன்னால் அதன் கொடியை வரைந்து, உலகப்படத்திலும் குறித்துக்காட்டுவார்.

அத்துடன் தரம் 1 - 3 வரை ஒவ்வொரு தவணையிலும் 1ஆம் நிலையையே வகுப்பில் வகித்து வருகின்றார். இதைவிட தரம் 1 இலும் தரம் 3 இலும் மாகாண மட்டத்தில் வரைதல் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இதைவிட தரம் 3 இல் இடம்பெற்ற ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சுற்றாடல் பாடத்தை அதிகம் பிடிக்கும் எனக் கூறும் இந்தக் குழந்தை நட்சத்திரம் ''உங்களது எதிர்கால இலக்கு எது?'' என கேட்டபோது ''சேவை செய்யும் வைத்தியர்'' என கூறுகின்றார். இந்த குழந்தை நட்சத்திரத்தின் திறமையை இங்கு பதிவு செய்யும் ஒளிஅரசி இவருக்கு ''உலகக்கொடி நாயகன்'' எனும் ஒரு சிறப்பு அடைமொழியை வழங்கி கௌரவிக்கின்றது.

இம்மாணவனின் திறமைக்கு வழிகாட்டியாக திகழும் அதிபர் நா.மகேந்திரராஜா, வகுப்பாசிரியர் திருமதி நிர்மலா ரவிச்சந்திரன், தரம் 01, 02 ஆங்கில ஆசிரியை திருமதி நி.பிரியங்கா , சக பாடசாலை ஆசிரியர்களான திரு.ச.நிமலன், செல்வி பா.சித்திராதேவி, திரு.சீ.சுரேஸ்குமார் உட்பட பாடசாலை ஏனைய ஆசிரியர்களுக்கும், பாடசாலை சமூகத்திற்கும் பெற்றோர்களான திரு.திருமதி வே. அன்பழகன் (பிரபல புலமைப் பரிசில் ஆசான்) ஆகியோருக்கும் ஒளிஅரசியின் வாழ்த்துக்கள் உரிதாகட்டும்.

இவரின் திறமைகளை வெளிப்படுத்தி **IBC** இணைய தொலைக்காட்சியில் ஒரு நேர்காணல் அண்மையில் இடம்பெற்றது. இதனை நேரில் பார்க்க விரும்புவோர் **OliArazi** எனும் முகப்பு பக்கத்தில் சென்று பார்வையிடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Children's Day

# நாமும் சிறார்களும்

உலகசனத்தொகையில் கணிசமான தொகையினர் சிறுவராவர். ஒவ்வொரு ஆண்டும் ஒக் டோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ் வாறானதொரு தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கான காரணம் சிறுவர்களுக்கெதிராக அரங் கேற்றப்படுகின்ற துஷ்பிர யோகங்ளையும் அநீதிகளையும் இயன்றளவு குறைத்து அவர் களுக்கானசகலவிதமான உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதேயாகும். இன்றைய உலகம் எதிர் நோக்கும் மிக முக்கிய சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றாக சிறுவர் மீதான துஷ்பிர யோகம் விளங் குகின்றது. இன்றைய மனித சமுதாயமானது நாகரிகத்தின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை சிறுவர்களுக்கெதிராக மேற் கொள்ளப்படும் வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.



எந்த ஒரு மனிதனும் தனக்குரிய உள்ளார்ந்த சமகௌரவத்துடனும் மதிப்புடனும் பெறுமதியுடனும் வாழ்வதற்கு அவன் பெறவேண்டி யது,தூயசிந்தனையுடைய தார்மீக உரிமைகளையே ஆகும்.

இவ் உரிமை ஆண், பெண், சிறுவர்கள் என அனைத்துலக மனித உரிமைகள் பிரகடத்தில் கூறப் பட்டுள்ளது. சிறுவர்கள் என்போர் 18 வயதிற்குட்பட்ட ஆண்பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய வர்கள். இவர்கள் தமது எதிர்கால நலனுக்காக நிகழ்காலத்தில் தனித் துவமாகவும்

திரு.கந்தப்பு பரமேஸ்வான்
ஆசிரியர்

**பொய்மையற்ற, தீர்க்க சிந்தனையுள்ள, தற்துணிவுள்ள சிறுவர் சந்ததியினரே நாட்டிற்கு ஒளிகொடுக்கும் அற்புத பொக்கிஷங்களாகும்.**

சுயமாகவும் முடிவெடுப்பதற்கு வலுவற்றவர்களாக காணப்படுகின்றனர். இத் தகைய சிறார்களை பாதுகாப்பாகவும் அன்பான அரவணைப்பின் மூலமும் வளர்த்தெடுக்க வேண்டிய தார்மீக கடமை எம்முன்னே உள்ளது.

குழந்தை பிறக்கும் போது சுதந்திரமாகவே பிறக்கின்றது. பின்னர் பல்வேறு இன்னல்கள், பிரச்சினைகள், அடிமைத் தனங்களுக்குள் வாழ்ந்து வருவதைக் காணமுடிகின்றது. இதன் மூலம், பிள்ளையின் உரிமைகள் முழுமையாக மறுக்கப்படுவதை உணரமுடிகிறது. இன்று உலக அளவில் அனைவரினதும் வாயில் உச்சரிக்கப்படும் சொல்லாக உள்ளது சிறுவர் துஷ் பிரயோகம் என்பதே. இத்தகைய துஷ்பிரயோகங்கள் அனைத்து நாட்டிலும் அதிகரித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வதை அண்மைக்கால சிறுவர் துஷ்பிரயோகச் செய்திகள் எடுத்துரைக்கின்றன. துஷ்பிரயோகங்களாவன,

★ உடலியல் ரீதியான துஷ்பிரயோகம்.

★ உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்.

★ பாலியல்ரீதியான துஷ்பிரயோகம்.

★ உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்.

★ புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகம்.

★ குடும்ப வன்முறை

★பிள்ளைகளை அடிமைப்படுத்திவைத்திருத்தல்

★பொருளாதார நலனுக்காக பயன்படுத்தல்

★பயமுறுத்தல், தனிமைப்படுத்தல் போன்றவையாகும்.



இத்தகைய துஷ்பிரயோகங்கள் எமது நாட்டில் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களாக பல காணப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட யுத்தசூழல், வறுமை, அசாதாரண சூழ்நிலைகள், சட்டரீதியான செயற்பாடுகள் சரியாக முன்னெடுக்கப்படாமை என்பனவாகும். இவைகளை சந்தர்ப்ப களமாக அமைத்துக்கொள்ளும் தீயசக்திகள் தத்தமது தேவைகளுக்கு சிறுவர்களைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக இளைஞர்களும், நெருங்கிய உறவினர்களும் பாடசாலை ஆசிரியர்களும் அயலவர்களும் இவ்வாறான தீயசக்திகளாக இருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.



1989 இல் ஐ.நா. சபையில் வெளியிடப்பட்ட சிறுவர் உரிமைகளைப் பற்றிய கொள்கையானது சிறுவர்களைப் பாதுகாத்தல் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவு ஏற்பாடுகளைக்கொண்டுள்ளது. இலங்கையிலும் இதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 1998ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ( NCPA) இலங்கையில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. இச்சபையின் கீழ் சட்டரீதியான மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு இயங்கிவருகின்றது. இக்குழுவில் அந்தந்த மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசஅதிபர் தலைவராகவும் உறுப்பினர்களாக மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், மகப்பேற்று நிபுணர், குழந்தை மருத்துவ அதிகாரி, சட்டவைத்திய அதிகாரி, சட்ட ஆலோசகர், மேலதிக கல்விப்பணிப்பாளர், உளமருத்துவ அதிகாரி, சிறுவர் பாதுகாப்புச் சபை பிரதிநிதி, ஊழியர் பிரதிநிதி ஆணையாளர் என சிறுவர் சார்பான நலன்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறைகொண்ட சகலதுறைகளைச்சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தவர்களும் இயங்கிவருகின்றனர்.

குறிப்பாக உலகில் உள்ள அனைத்து சிறுவர்களும் இவற்றுள் ஏதாவதொரு துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுத்தேவருகின்றனர் என்பதனை ஆய்வறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பல ஏற்பாடுகள் இன்றைய நவீன உலகில் காணப்பட்டாலும் கூட அவற்றையும் மீறி சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப் பட்டு வருகின்றனர். மேற்படி சிறுவர் துஷ்பிரயோக வடிவங்களை நீக்குவதற்காக உலகின் பல அரசுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்கள் போன்றவற்றால் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மேற்படி அனைத்து நிறுவனங்களினதும் சேவைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவது அத்தியவசியமாகும். இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு உலக சிறுவர்தினத்தை சிறப்பாக திட்டமிட்டுப் பயன்படுத்தலாம்.



மேலும் சிறுவர் தினம் சம்பந்தமாக குறிப்பிட்ட தினத்தில் மாத்திரம் மும்முரமாக செயற்படுவதில்எந்தப் பயனும் இல்லை. வருடத்தில் ஏனைய நாட்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அனைத்து தரப்பினரதும் கவனத்திற்கு உட்பட வேண்டியது அவசியமாகும். இந்நன்நாளில் நாம் அனைவரும் சிறார்களின் நலன்களிலும் பாதுகாப்பிலும் அதின அக்கறையுடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். அவர்களது தேவைகள் விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுதல், பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல், அவர்களுக்குவேண்டிய ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கல், போன்றவற்றை சிந்தையில் நிறுத்திச்செயற்படுவோம்.

எமது நாட்டின் எதிர்கால தலைவர்களாகவும் நல்ல பிரஜைகளாகவும் உரிமையுடன் வாழ்வதற்கு உரித்துடையவர்களாக இவர்களை உறுதிசெய்வதன் மூலம் சிறுவர் பாதுகாப்பினை மேம்படுத்திக்கொள்வதுடன் இன்று சிதறிக்கிடக்கின்ற எம் சின்னஞ்சிறிய உள்ளங்களை ஒன்றிணைத்து தீயசெயற்பாடுகளிலிருந்து காப்பாற்றி நாட்டின் வளர்ச்சிக்கும் கௌரவமான சமுதாய முன்னேற்றத்திற்கும் ஏற்றவர்களாக்குதலே சிறுவர் உரிமைகள் வலுவுடன் இருப்பதை உறுதிசெய்துகொள்ள உதவும் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலிகையூர் ரேகா

# கனவுகளைக் காதலியுங்கள்

இந்த உலகம் ஆற்றல் வாய்ந்தது. நாம் எண்ணும் நல்லவற்றை ஏதோ ஒரு வடிவில் நம்மிடம் கொண்டு வந்து சேர்த்து விடுகின்றது. அது நம்மை வந்தடைவதற்கான வழிகளை நாம் தேர்ந்தெடுப்பதில்தான் நமது திறமையும் வெற்றியும் உள்ளது. சிறந்த இலட்சியங்களைக் கனவு காணும் ஒருவனால் சிறந்த பலனைப் பெற முடியும். இந்த உலகில் அனைவருமே சாதிக்கப் பிறந்தவர்கள்தான். சாதிக்குப் பிறந்ததாயும், சாவிற்குப் பிறந்ததாயும் எண்ணிக் கொண்டே தம் வாழ்நாளைக் கழித்துவிடும் பலருக்குக்கனவுகள் கனவாகவே போய்விடுகின்றது. நாம் எதைக் கனவு காண்கின்றோம், எங்கு சென்றடைய விரும்புகின்றோம் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். காலமோ, சூழ்நிலைகளோ அல்ல.

நமக்குத் தேவையானது எதுவென்பதைத் தீர்மானிக்கத் தெரிந்திருந்தால் அதைச் சென்றடைவதற்கான வழியும் நமக்குத் தெரிந்துவிடும். தமது கனவுகள் குறித்த தெளிவு பலருக்கு இருப்பதில்லை. அவர்கள் தூக்கத்தில் கனவு காண்பதோடு நிறுத்திக் கொள்கின்றார்கள். இலட்சியக் கனவுகள் பற்றி அவர்கள் நினைப்பதில்லை. அப்படியே நினைத்தாலும் சிக்கல்களை மட்டும் உள்ளத்திலிருத்தித் தங்களால் முடியாது என்பதில் தெளிவாக இருக்கின்றனர். முயன்றால் முடியாதது எதுவுமில்லையென்பதை அவர்கள் முயன்று பார்க்கக்கூட நினைப்பதில்லை. கனவும் அதன் மேலான காதலும் இணைந்தால் இவ்வுலகில் அதைவிடத் தலை சிறந்த இணை ஏதுமில்லை. உயிர்கள் மேலான காதலை விடவும் கனவுகள் மேலான காதல்தான் வாழ்வைச் சரியான திசையிற் பயணிக்க வைப்பவை.

நமது உள்ளம் எதெல்லாம் நடைபெற வேண்டுமெனக் கனவு காண்கின்றதோ அது ஒரு நாள் உறுதியாக நிறைவேறும். நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது கனவுகளை நோக்கிப் பயணப்படுவதுதான். அந்தப் பயணத்தில் தடைகள் பல வரலாம், காலம் வேறு திசையில் மாற்றி விடலாம், வாழ்க்கைக் காட்டில் வழி தெரியாமல் தவித்து நிற்கலாம், இந்தக் கனவுகள் உங்கள் சூழ்நிலைக்குப் பொருத்தமற்றவை என இந்த உலகம் குழப்பி விடலாம். உங்களால் முடியுமென்ற தன்னம்பிக்கை மட்டும்தான் உங்கள் கனவுகள் மேலான காதல் உடைந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளக்கூடியது. தெளிவான குறிக்கோள், சென்றடைய வேண்டிய இலக்கு, முழுமையான சிந்தனை,செயற்றிட்டம் ஆகியன சரியாக இருப்பின் நம் கனவுகள் நோக்கிய பயணத்தை வெற்றிப் பயணமாக எண்ணி நம்பிக்கையோடு முன்னேறிச் செல்ல முடியும். உறுதியான சிந்தனைகள்தான் உலக வரலாற்றில் இடம் பிடிக்கும். சிறந்த வாழ்க்கை நோக்கத்தைக் கொண்டிருப்பதுதான் நம்மை மற்றவர்களிடமிருந்து உயர்த்துகின்றது. நம் அனைவருக்கும் கனவுகள் வேண்டும். அப்துல் கலாம் ஐயா சொன்னது போல நம்மைத் தூக்கத்தில் ஆழ்த்துவது கனவுகளல்ல, நம்மைத் தூங்க விடாமற் செய்வதே கனவுகள். எனவே நம்மைத் தூக்கத்தில் ஆழ்த்தும் கனவுகளை விடத் தூங்க விடாமல் செய்யும் கனவுகளைக் காதலிக்கத் தொடங்க வேண்டும். அந்தக் காதல் வெற்றியடைவதென்பது நம்மால்

முடியுமென்ற உள்ளத் திடத்தில்தான் உள்ளது. இடையில் வரும் சவால்களைக் கண்டு நமது கனவுகளை மாற்றிக் கொள்வோமானால் அது பாதியிலேயே முடிந்து விடும். பலரது கனவுகள் அப்படித்தான் காணாமலே போய்விடுகின்றது . எந்தச் செயல்களானாலும் வெற்றி பெறுவதும் தோல்வியில் முடிவதும் நமது திறமைகளையும் தாண்டி நம்மால் முடியுமென்ற தன்னம்பிக்கையில்தான் உள்ளது. தடைகளைத் தாண்டிக் கனவு காணுங்கள். உங்கள் கனவுகள் குறித்துத் தெளிவாக இருப்பின் எதிர்மறைச் சிந்தனைகளுக்கு அங்கு நேரம் இருக்காது. வெற்றியை நோக்கிய சிந்தனைகள்தான் இருக்கும், அவை உங்களை வெற்றியை நோக்கி வழி நடத்தும். உங்களுக்கென்ற கனவு இதுவரை இல்லையா, இந்த நொடியிலிருந்து கனவு காணுங்கள். அதைக் காதல் செய்யுங்கள். உங்கள் கனவுகள் கை கூடட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் தேசமே பொன்பாறை...


வவுனியா மண்ணது
விண் போற்றும் அழகது
வன்னியன் ஆண்டது
வலிமையே கொண்டது
போர்முனை கண்டது
வெற்றிகள் பெற்றது
விடியலை பெற்றிட
வேங்கைகள் ஈன்றது
பள்ளிகள் கொண்டது
பல கலை பெற்றது
தொல்லைகள் சூழ்ந்தாலும்
துரத்தியே வென்றது
ஓமந்தை ஊரது
ஒற்றுமை நிறைந்தது
வா மந்தை ஒன்றது
நிறை செல்வம் தந்தது
பலமோட்டை ஊரது
பகைதனை கண்டது
வேங்கைகள் நின்றதே
விரட்டியே கொன்றது
நெளுக்குளம் ஊரது
நிறையவே உள்ளது
வெற்றிகள் சூடியே
வேட்கை கொண்டது
புதுக்குளம் ஊரது
புதுமைகள் நிறைந்தது
கல்வி சிறந்துமே
காலங்கள் கடந்தது
பூந்தோட்டம் ஊரது
புதுக்கதை சொல்லுது
புனிதமும் நிறைந்ததே
மனிதமும் கொண்டது
தாண்டிக்குளம் ஊரது
தடைகளை உடைத்தது
விளையாட்டில் வல்லது
தரணியை மிகுந்தது
செட்டிகுளம் ஊரது
செழுமை கொண்டது
வளங்கள் சிறக்கவே
வலிமையும் கண்டது
சேமடு ஊரது
செந்தமிழ் நாடது
சேட்டைகள் செய்தே
சேநிலம் வென்றது
ஓலுமடு ஊரது
ஒழுக்கம் கொண்டது
கலைகள் என்றதும்
கரங்கள் எழுந்தது
பெரியமடு ஊரது
நிறையவே நீர் உள்ளது
அன்பினில் உயர்ந்தது
அகிலத்தை வென்றது
மன்னார் உள்ளது
மதங்களை கண்டது
கிளிநொச்சி உள்ளது
சிறுத்தைகள் கொண்டது
முல்லையும் உள்ளது
நெல்லையும் தந்தது
யாழும் உள்ளது
யாவரும் நல்லது
கோணமலை உள்ளது
கோபுரம் மிகுந்தது
மட்டக்களப்பு மண்ணது
மறவர் தந்தது
அம்பாறை ஊரது
வெண் பாறை கொண்டது
தேசமே ஒரு பொன் பாறை போன்றது



தமிழ் [illegible]தனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சோளம் தினை தக்காளி தோசை

**தேவையான பொருட்கள் :**

சோளம் ஒரு கப்

தினை ஒரு கப்


அரிசி மாவு அளவாக

தக்காளி 4

**செய்முறை :** சோளம், தினை தலா ஒரு கப் எடுத்து, சிறிது நேரம் ஊறவைத்து அரைத்துக்கொள்ளவும். இந்த மாவை தோசைமாவுடன் கலந்து, எட்டு மணி நேரம் புளிக்கவிடவும். இதனுடன் நான்கு தக்காளியைப் பொடியாக நறுக்கி தேவையான அளவு சேர்த்து, தோசையாக ஊற்றி வார்க்கவும்.

**மருத்துவ குணங்கள் :** சோளம், தினையில் அதிக அளவில் இரும்புச்சத்து உள்ளது. கர்ப்பிணிகள், குழந்தைகள் தினமும் சாப்பிடலாம். ரத்தச்சோகையைத் தடுக்கும்.

## அப்பளப்பூ குழம்பு



**தேவையான பொருட்கள்**


| | | |
|---|---|---|
| அப்பளப்பூ | - | 10 |
| பாசிப் பருப்பு | - | கால் கப் |
| தக்காளி | - | 1 |
| சின்ன வெங்காயம் | - | 6 |
| மிளகாய்த் தூள் | - | 2 டேபிள் ஸ்பூன் |
| தேங்காய்த் துருவல் | - | கால் கப் |
| மஞ்சள் தூள் | - | ஒரு சிட்டிகை |
| உப்பு, எண்ணெய் | - | தேவையான அளவு |
| கடுகு | - | ஒரு டீஸ்பூன் |
| கறிவேப்பிலை | - | ஒரு கொத்து |
| பெருங்காயம் | - | ஒரு சிட்டிகை |

**செய்முறை :** தேவையான அப்பளப்பூவை எடுத்து தயாராக வைக்கவும். வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயை பொடியாக நறுக்கி, தேங்காய், பெருஞ்சீரகம் மற்றும் சீரகத்தை சிறிது நீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். கடலைப்பருப்பினை 2 கப் தண்ணீர் சேர்த்து குக்கரில் 3 விசில் விட்டு நன்றாக வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். தனியாக அப்பளப்பூவை எண்ணையில் பொரித்து எடுத்து வைக்கவும்.

சட்டியில் எண்ணெய் விட்டு, கடுகு உளுந்து மற்றும் கறிவேப்பிலை தாளிக்கவும். சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கி, பின் வேகவைத்த கடலைப்பருப்பினை சேர்த்து, அரைத்த மசாலை மஞ்சள் தூள் சேர்த்து தண்ணீர்விட்டுகலந்துவிடவும். குழம்புநன்றாககொதித்தபின், பொரித்தஅப்பளப்பூவை சேர்க்கவும். குழம்பு கெட்டியாகும் வரை அடுப்பை சிம்மில் வைக்கவும். சுவையான அப்பளப்பூ குழம்பு ரெடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்தகங்களுக்குள் வாழும் பூவை

கோபிகை



வாசிப்பு மனிதனைப் பூரணப் படுத்துகின்றது வாசிப்பை நேசிப்போம் என்பது போன்று வாசிப்பின் மகத்துவம் சொல்லும் கருத்துக்கள் ஏராளம் உள்ளன. வாசிப்பு என்பது ஒவ்வொருவரினதும் வாழ்க்கையில் ஏதோ ஒரு தாக்கத்தை உண்டு பண்ணுவதாகவே உள்ளது. வாசிப்பை நேசிப்பவர்களைக் கண்டிருந்த நான் முதல் முதலாக வாசிப்பை சுவாசிக்கும் பூ ஒன்றை சந்தித்த தருணத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

வானம் தீ சுமந்து நகர்ந்த ஒரு மதியப் பொழுதிலேயே அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். சின்னப் புன்னகையால் வரவேற்ற அந்த முகத்தில் ஒருவித ஆளுமையும் நிலவென மிளிர்ந்த அந்த முகத்தில் ஆழ்ந்த அமைதியும் தெரிந்தது, மின்னலென பிரகாசித்த விழிகளுக்குள் அறிவின் தேடல் கொப்பளித்தது. அது வாசிப்பின் வரப்பிரசாதம் என்பது அவருடனான உரையாடல் மூலம் தெரிந்தது. அவர் எம்மோடு பகிர்ந்து கொண்டவை எம் வாசகர்களுக்காக.

இவர் அகிலினி நந்தகுமார். சாதாரணதரம் கற்கும் மாணவி. எப்போதும் தன்னருகில் ஒரு புத்தகத்தையாவது வைத்திருக்கும் வாசிப்பு பிரியை. சிறு வயதில் சின்னச்சின்ன கதைகளை வாசிக்க ஆரம்பித்ததும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மாட்டின் லூதர்கிங் அவர்களின் பேச்சு ஒன்றினைக் கேடதும் வாசிப்பதில் அதீத ஆர்வம் கொள்ளவைத்தது என்கிறார்.

இன்று வாசிப்பே தன் உலகம் என எண்ணுமளவிற்கு வாசிப்பில் மூழ்கியிருக்கும் அகிலினி படிப்பிலும் கெட்டிக்காரி.

எழுத்துத்துறை பின்புலம் என எதுவுமற்ற அகிலினியின் பெற்றோர் வாசிப்பில் நாட்டம் கொண்டவர்கள் என்பதும் பிறந்ததினம், பண்டிகை போன்ற விசேட தினங்களின் போது புத்தகங்களையே பரிசாக வாங்கிக் கொடுக்கும் நற் பழக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமையும் அகிலினியின் இத்தகைய வாசிப்பு ஆர்வத்திற்கு காரணமாகும்.

தான் முதல்முதலாக வாசித்த புத்தகம், பேராசிரியர் ஏ. சோதி எழுதிய அறிவுள்ள காக்கைகள் என்பதே எனக்கூறும் இவரிடம்,

**☞ வாசிப்பதால் கல்வி பாதிப்படையும் எனப்பலர் கருதுகின்றனரே, அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்றபோது,**

வாசிப்பது கல்வியைப் பாதிக்கும் என்று நான் கருதவில்லை. நாம் பாடப் புத்தகங்களில் ஒரு விடயத்தின் அடிப்படையையோ அல்லது அது பற்றிய சிறிய தகவலையோதான் காண்கின்றோம். ஆனால் அதனைப்பற்றி விரிவாக அறிந்துகொள்ள வாசிப்பது அவசியம் என்கிறார்.

இதுவரை முப்பது கவிதைகளையும் இருபது சிறுகதைகளையும் ஏழு ஆங்கில நாவல்களையும் எழுதியுள்ள இவர், பாடசாலை நூலகமும் தனது வாசிப்பு ஆர்வத்திற்கு அதிகமாகத் தீனிபோடுகிறது என்றார்.

**☞ வாசிப்பது மனித வாழ்வியலை மாற்றிப்போடுகிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



(சற்றும் யோசிக்காது அகிலினியிடம் இருந்து பதில் வந்தது,) ஆபிரகாம் இலிங்கன் பாடசாலை சென்று கல்வி கற்பதற்கே வசதி அற்றவராக இருந்தார். பல மைல் தூரம் நடந்து சென்றே நூல்களை இரவல் வாங்கி படித்து வந்தார். அவரது வாசிப்பின் மீதான தீராத விருப்பே பின்நாளில் அவர் ஜனாதிபதியாக மாற உதவியிருக்கிறது, என்றார்.

☞ **எழுத்து அல்லது புத்தகம் பற்றி இரண்டே வரியில் ஒரு கருத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்?**

புத்தகம் ஒன்றின் பக்கங்களிடையே யதார்த்தமான மனிதர்கள் வாழ்கின்றார்கள்.

☞ **இவ்வளவு சிறிய வயதிற்குள் இவ்வளவு எழுதியிருக்கின்றீர்களே, படிப்பையும் வாசிப்பையும் எப்படி திட்டமிட்டுக்கொள்வீர்கள்?**

கற்பிக்கும் போதே அந்தப்பாடத்தைக் கிரகித்துக் கொள்வேன். ஏனைய நேரங்களை வாசிப்பதற்குப் பயன்படுத்துவேன், வார இறுதி நாட்களில் அதிகநேரம் கிடைப்பதால் அந்த நேரங்களையும் படிப்பதற்காக ஒதுக்கிவிடுவேன். எழுதுவதற்கென்று நேரங்களைத் திட்டமிட்டு ஒதுக்குவதில்லை, மனதில் உதிப்பதை உடனேயே எழுதிவிடுவேன்.

☞ **தமிழ் மட்டுமன்றி ஆங்கில நாவல்கள் வாசிப்பதிலும் விருப்புடைய அகிலினியிடம் நீங்கள் வாசித்த நாவல்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த நாவல் எது ?**

அருந்ததிறோய் எழுதிய **THE GOD OF SAMLL THINGS** என்ற நாவல் எனக்கு மிகவும் பிடிக்கும், வாழ்வியலில் யதார்த்மாக நடக்கும் ஒரு கதையை வித்தியாசமான எழுத்துப்பாணியில் சொல்லியிருக்கும் விதம் எனக்கு பிடித்தது என்றார்.

☞ **உங்கள் கனவுகள் பற்றி?**

என் கனவென்பது, **நான் பொறியியலாளராக வரவேண்டும் என்பதாக இருந்தாலும், நான் ஒரு எழுத்தாளராக வரவேண்டும் என்பதும்** என் வாழ்நாட் காலத்தில் நூறிற்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதி விடவேண்டும் என்பதும் எனது கனவே.

☞ **உங்களைப்போன்ற மாணவர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது**?

பாடசாலைக் கல்வியோடு நின்றுவிடாது வேறு பல நல்ல நூல்களையும் தேடி வாசிப்பது எமது எதிர்கால வாழ்விற்கு உதவியாக அமையும். அதுதவிர படைப்பாளரால் சமூகத்தை மாற்றமுடியும். எழுத்துக்களும் புத்தகங்களும் சமூகத்தை மாற்றும் திறன் கொண்டவை. சமூகத்தின் நெளிவுகளை சமூகம் அறியவேண்டிய விடயங்களை ஒரு படைப்பாளி தனது படைப்புகளின் மூலம் இலகுவாக சமூகத்திற்குள் கொண்டு செல்ல முடியும். எனது வீட்டில் வாசிப்பதற்கு அதிக ஆதரவு இருந்தது. இதுவரை மற்றவர்களின் கனவுகளைச் சுமந்த எனக்கு, புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்த பின்னரே நான் யார், எனக்கான இலட்சியம் என்ன என்பது போன்ற விடங்கள் புரிந்தன. வாசிப்பு தேடவைக்கிறது, வாசிப்பு தெளிவைத் தருகிறது.

**வாசிப்பினால் நீங்கள் பெருமையடைந்த சந்தர்ப்பம் பற்றி?**

சில மாதங்களின் முன் யாழ் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடந்த நிகழ்வொன்றில் பல படைப்பாளர்களும் பங்கு பற்றியிருந்தனர். அந்நிகழ்வில் நானும் பங்குபற்றி உரையாற்றும் வாய்ப்பு கிடைத்தது, அதனை எனது வாழ்வில் மிகப்பெருமையான விடயமாகவே கருதுகிறேன்.

மிகச்சிறந்த கருத்துக்களை எம்மோடு பகிர்ந்த அகிலினி தான் எழுதிய கவிதைகளில் தனக்குப் பிடித்த கவிதை ஒன்றையும் பிரசுரத்திற்காகத் தந்திருந்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதையல்**

நரகம் என்பது உண்மையானால்
நான் அங்கு அழையா விருந்தாளியாய்
செல்ல விரும்புகிறேன்.
மகிழ்ச்சி, கருணை , அன்பு போன்றவை
எங்கு பதுமைகளாக மலர்கின்றனவோ
அங்கு
சொர்க்கத்தின் இருப்பிடத்திற்கு
மரணத்தின் கண்களுக்கு மட்டுமே
புலப்படும் உண்மைக்கு
என் மரணமுகமூடியைக் களைந்து
என் மெய் வதனத்தைத் தேடி
நீரின் ஊற்றுக்குள் ஓர் ஒளி
வண்ண பிம்பங்களின் ஓசை
ஓயாத கடல் அது
அன்பின் ஆழ்கடல்.
நீ அற்புதங்களின் காயல்,
அதிசயங்களின் பிரபஞ்சம்
இன்று பிறந்த ஒரு விண்மீன்
அறிவுலகினுடைய மேதை
விடைபெறுகின்றேன்.



**புத்தகங்களுக்குள் வாழும் பூவை இவளின் கனவுகள் மெய்ப்படவேண்டும் என வாழ்த்தி விடைபெற்றேன்.**

## அன்பு...

★ அன்பைவெளிப்படுத்தும்எதையும்கொண்டுவாருங்கள்என்றுநான்குமாணவிகளை அனுப்பினார் ஆசிரியை.! திரும்பி வந்த ஒரு மாணவியின் கைகளில் மலர் இருந்தது..! இன்னொரு மாணவியிடம் வண்ணத்துப் பூச்சி இருந்தது..! மற்றொரு மாணவியிடம் ஒரு குஞ்சுப்பறவை இருந்தது..! முதலில் கிளம்பிப்போன மாணவியோ கடைசியில் வெறுங்கையோடு திரும்பி வந்தாள்..! ஏனென்று கேட்டபோது சொன்னாள்: நானும் மலரைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. செடியிலேயே இருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்.. வண்ணத்துப் பூச்சியைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. சுதந்திரமாய்ப் பறக்கட்டும் என்று விட்டுவிட்டேன்..! குஞ்சுப் பறவையைப் பார்த்தேன். தாய்ப்பறவை தேடுமென்று விட்டுவிட்டேன்...! அந்த மாணவியை அணைத்துக் கொண்ட ஆசிரியை சொன்னார், அன்பு என்றால் இது தான்'' ஒன்றுமே கொடுக்க வேண்டாம். எதையுமே பறிக்காமல் இருந்தால் அதுவே போதும்...! எதையும், யாரையும் காயப்படுத்தாமல் இருப்போமே...! நாம் உலகிற்கு எதையேனும் கொடுக்க வேண்டுமென நினைத்தால் அன்பைக் கொடுப்போம்...! ஏனெனில் உலகில் எங்கும் பரவிக் கிடப்பது அன்பு ஒன்று தான்...! ஆனால் உலகம் அதிகமாக ஏங்கிக் கிடப்பதும் அதே அன்புக்காகத்தான்...! அனைவரிடமும் அன்புடன் பழகுவோம்...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Children's Day

# பற்றுறுதி தளராத தாயக படைப்பாளர்கள்

து.திலக்

ஈழதேசத்தின் தனித்துவத்தையும், பெருமைமிகு வீரத்தையும், கலை,கலாசார,பண்பாட்டு விழுமியங்களையும். தன்னகத்தே சுமந்து போரியல்,சமூக, விழிப்புணர்வு, மற்றும் தேசிய ஒருமைப்பாடு, என்பவற்றை அணிகலனாகக் கொண்ட இலக்கியம் என்னும் பேரூடகம் போர்க்கிடப்பிற்கு முன்னரான காலப்பகுதிகளில் நேரிய நெடுந்தூர பயணத்தை செவ்வனே எட்டியிருந்ததென்பது ஒருகாலத்தின் கண்ணாடியாக இருக்கிறது.



அந்தக் காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடிகள், நவீனத்துவ வசதிகள் குன்றியிருந்ததும் ஒரு படைப்பாளன் தன் உணர்வுப் பிரவாகங்களை உரிமையுடன் எடுத்துச் சொல்லுகின்ற/ எடுத்துச்செல்லுகின்ற ஊடக வளர்ச்சிகள் குறைந்த காலப்பகுதியில் நிறைவான கலைச்சேவையினை போர்க்கால ஊடகங்கள் வாயிலாக ஆற்றியவர்களுக்குள் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய திருவாள்கை நா.யோகேந்திரநாதன் ஐயா அவர்களும், பேரன்பிற்கும், பெருமரியாதைக்குமுரிய களக்கவிஞன் திருவாள்கை வேலணையூர் சுரேஷ் அவர்களும் அடங்குவர்.

நா.யோகேந்திரன் ஐயாவின் உணர்வுக் கொப்பளிப்பாக அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட ''இடிபடும் கோட்டைகள்'' என்ற நூலும் வெளியீடும்... அதே போன்று வேலணையூர் சுரேஷ் அவர்களின் உணர்வின் வெளிப்பாடாக ''நேரமில்லா நேரம்''கவிதைத் தொகுப்பும். ஈழ இலக்கிய வரலாற்றில் நின்று ,நிலைத்து பேசப்படவேண்டிய, பேணப்பட வேண்டிய அரியவகைப் படைப்புக்களுள் ஒன்றாக சங்கமித்திருக்கின்றன.



இவ் இரண்டு படைப்பாளர்களும் நெருக்கடியான சூழல்களில் ஓய்வுறக்கமின்றி கிரவல் புழுதியை சுவாசவறையில் சேமித்தபடி கிளி/ அக்கராயன், ஸ்கந்தபுரம் மற்றும் வன்னிப்பெருநிலப்பரப்பின் மூலை முடுக்கெல்லாம் மிதிவண்டியை வலித்தபடியே கலைப்பயணத்தை தொடர்ந்ததை அந்த மண்ணில் வாழ்ந்த யாராலும் இலகுவில் மறந்துவிடவோ கடந்துபோகவோ முடியாது.



இவர்கள் தமிழுக்கும், தமிழ் அன்னைக்கும்,வீரவரலாற்றுச் சேனைக்கும் ஆற்றிய பங்கும், பணியும் என்றும் உலகத் தமிழ் இனம் அறிந்த வரலாறாகிறது.

மன அளவில் நொந்து ,உடல் அளவில் தளர்ந்து ,உரு மாறிய தேசத்தில் வாழ்ந்தாலும் எள்ளளவும் உறுதி தளராது இலக்கியச் சாயலில் உருக் குலையாது இன்னமும் ஈழ இலக்கிய வரலாற்றுக்கு அரும்பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடியவர்களுள் பன்முகப்படைப்பாளர் நா.யோகேந்திரநாதன் ஐயா அவர்களும், களக்கவிஞர் வேலணையூர் சுரேஷ் அவர்களும் நீண்ட காலங்கள் படைப்புகளோடு தமிழ் நல்லுலகில் பயணிக்க வேண்டு மென்று இலக்கியக் கரம்பற்றிநிற்பதோடு, அண்மையில் சிறப்பாக நடைபெற்ற அவர்களின் வெளியீடுகள் உலகெகும் பரந்து வாழ்கின்ற வாசகர்கள், இலக்கிய ஆர்வலர்கள், படைப்பாளர்கள், தமிழின சொந்தங்கள் யாவருக்கும் நற்பலன் நல்க வேண்டுமென்று நாமும் அன்புரிமையுடன் வாழ்துவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sirukathai




# உயிரைச் சிதைத்த உறவு

கயூரி புவிராசா

**பூவிதழை ஒத்த அந்தப் பஞ்சுவிரல்களைப்பற்றி இழுத்தது ஒரு முரட்டுக்கரம். நான்குசுவர்கள்மட்டுமே அங்கு. ஒருபக்கச்சுவரில்இருந்தகதவைத் தாழிட்ட பின், அவ்வுருவின் பார்வை அவளை நோக்கிப் பாய்ந்தது. அந்தப் பார்வையிலேயே ஐம்புலன்களும் அடங்கியது, அவளுக்கு. அப்பட்டமாய்ப் பயத்தைப் பிரதிபலித்தன அவள் விழிகள். அவள் உடம்பெங்கும் சிவப்பு வர்ணம் தீட்டி ஓவியம் வரைந்தது, அவன் இடுப்பிலிருந்த பெல்ட்!**

அம்மா...!அலறி விழித்தாள் கீதாஞ்சலி காலங்காத்தால என்ன கனவிது? அந்தத்திமிர் பிடிச்சவன் நிஜத்தில தான் உயிரை வாங்குறான் எண்டா,இப்பக் கனவிலையும் என்ர நிம்மதியைக் கெடுக்கிறானே! பாவி! ஏனடா.. உன்ன விரும்பினது பிழையா? நீ சொன்னதுக்கெல்லாம் மறு பேச்சில்லாம தலையாட்டுவனே... என்னை விட்டுட்டுப்போக உன்னாலை எப்பிடி முடிஞ்சது? நீதான் எல்லாமெண்டு நினைச்சனே கடவுளே!

அவள் அலறலை கேட்டு ஓடிவந்தாள் மலர்.

என்னாச்சுடி அக்கா? ஏனிப்ப அழுறாய்? சொல்லன்டி... என்றபடி அவள் முறைத்த முறைப்பில்,இல்லையடி...அவர்...அவர்... கனவு... மென்றுதுப்பினாள் கீதாஞ்சலி.

நீஎன்னடிநினைச்சுக்கொண்டிருக்காய்? அவன்தான் உன்னை வேண்டாம்எண்டு சொல்லிப்போட்டானே! பிறகும் ஏனடி நீயும் கஸ்ரப்பட்டு அம்மா,அப்பாவையும் ஆக்கினை செய்யிறாய்?கடிந்தாள், தங்கை.

அதையும்மீறி, அந்தக் குழந்தை முகத்தைத்திட்ட முடியவில்லை அவளால். அக்கா என்றபடி அணைத்துக்கொண்டாள்.

அவன்மீது கண்மண் தெரியாத கோபம் வந்தது மலருக்கு. அவன் வேறு யாரும் இல்லை, ஜீவன். ஒருகாலத்தில், என் அத்தான் சொன்னாச் சரிதான். என, அந்தளவு மரியாதை அவனுக்கு.

இப்ப என்னத்தை சொல்லுறது? அவனாலதானே அக்காக்கு இந்த நிலைமை? ஏன் மாறினவன்?

அவளுக்கு மட்டுமல்ல, யாருக்குமே விடை தெரியவில்லை.

எல்லாருக்கும் அவள் கீதா . அவனுக்கு மட்டும் குட்டிம்மா. கீதாம்மா எழும்பிட்டியா? பள்ளிக்குக் கிளம்பலையா? ரீயைக் குடிச்சுட்டுப்போய்க் குளி!

சின்னவள் வெளிக்கிட்டிட்டாளே? மலர்...டிபன் பொக்ஸ் எங்க வச்சனி?

அடுக்களைக்குள்ளிருந்து பறந்து வந்தது அம்மாவின் குரல்.

அம்மா... அக்காவை விடுங்கோ. அவள் ரீச்சர். நான் அப்பிடியே? கொஞ்சம் லேட் ஆனாலும் அந்த மேடம் அந்தக் குலை குலைக்கும். பத்தாததுக்கு ஒரு பிரிபெக்ற் (மாணவதலைவி) நீ.மற்றவைக்கு முன்னுதாரணமா இருக்கோணும்.என்று கழுத்தறுக்கும்.புலம்பியபடி சொக்சைத் தேடினாள் மலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ வாறன் அம்மா...கடகடவெனப் பல்தேய்த்துவிட்டு அமுதசுவடே தெரியா மல் விறாந்தைக்குவந்தாள் கீதாஞ்சலி.

அப்பா தோட்டத்துக்குப் போட்டாரோ அம்மா? ஓமம்மா. வெள்ளனவே போட்டார். இண்டைக்குச் சந்தைக்கு மரக்கறி கொண்டு போகவேணும் எண்டவர். என்ற மரகதம்,

நீவெளிக்கிடு!என்றுவிட்டு,அடுத்த வேலையைக் கவனிக்கப் போனார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி தான் இவர்களின் பூர்வீகம். விவசாயம் தான் தொழில்.அப்பாசர்வநாதன்தோட்டம்,வயல் என முழுநேர உழைப்பாளி. மரகதமும் தன் பங்குக்குச் சும்மா இருக்கவில்லை. பத்துக் கோழிகளும் இரண்டு பசுக்களும் வீட்டி லேயே வளர்க்கிறார். அதனால், பால், தயிர்,முட்டைஎன்றுகுறைவில்லாமல்இருக் கும். நிறைவான வருமானம் தான். சந்தோ சத்துக்குச் சாட்சியாக இரண்டு கண்களாய் பிள்ளைகள். மூத்தவள், இப்போதுதான் கொலிஜ் முடிச்சவள், ரீச்சர்.இளையவள், உயர்தர முதல்வருட கணிதப்பிரிவு மாணவி (பதினோராம் வகுப்பு)

ரீகப்பைகையில்பிடித்தபடிமுற்றத்திற்கு வந்தாள் கீதாஞ்சலி. வாசலில் அன்றலர்ந்த மலர்கள் லசாயத்து வரவேற்றன. புலர்ந்தும் புலராத அந்தக்காலை கூட அவள் மனக் காயங்களுக்கு மருந்தாகவில்லை. சுற்றிலும் பரவிய மல்லி வாசமும்தான்.

தூரத்தில் ஒலித்த பிள்ளையார் கோயில் மணியோசையில் கலைந்தவள், கிணற்றடி நோக்கி நடந்தாள். தன் எஜமானியின் வேதனை புரிந்ததுபோல ரைகரும் மௌனமாய் வாச லில் படுத்திருந்தது.

அதன்பின் பரபரவென்று தயாராகி, அம்மாவாறன்...எ ன்றபடி, பாக்கைத் தோளில் போட்டுவிட்டுச் சைக்கிளை எடுத் தாள், கீதாஞ்சலி.

பள்ளிக்கூடம் பக்கம் தானே? எனக்கு சைக்கிளே காணும் அப்பா.என, ஸ்கூட்டி எடுக்க விருந்த தந்தையையும் தடுத்துவிட் டாள்.

அவளது அந்தப் புரிந்துணர்வும், குடும் பத்தின் மீதான பாசமும், அமைதியான சுபாவமும், குழந்தைத்தனம் மாறா

முகமும்தான் அவனைக் காலடியில் விழுத்தியது.

ஜீவன்அவன்தான் அவளுயி ரில் கலந்தவன். ஒரேஊர்தான். இவளைவிட மூன்றுவயது பெரிய வன். ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன். தற்போது பேராதனைப் பல் கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரை யாளர்.

தமிழர்கள் அங்கு விரிவுரையாளராவ தென்றால் மிதமிஞ்சிய அறிவாற்றல் இருக்க வேண்டும். அவனோ, சரஸ்வதியின் முழுக் கடாட்சம் பெற்றவன். கல்விமட்டுமல்ல, கவித்துவத்தையும்அள்ளிக்கொடுத்திருந்தாள் அந்தக் கலைமகள்.

விழிகளாலேயே கவி படிப்பவன். அவள் உயர்தரம் கற்றபொழுதில்தான் பழக்கம். பக் கத்து வீடென்றாலும் அவனோடு பழகியது குறைவு. அவன் பார்வையிலேயே திமிர் பிடிச்சவன் என்று விலகிப்போவாள்.

அன்ரி என்று, அவன் தாய் கலாவின் மீது பிரியம். அவருக்குப் பொம்பிளைப் பிள்ளையில்லை. கீதாவும் மலரும்தான் உயிர். அவன் தந்தை ரங்கநாதனும் கலா வுக்குச் சளைத்தவர் இல்லை.

அஞ்சலிம்மாஎன்று கொள்ளைப்பிரியம். ஆனாலும்,கீதாஞ்சலிக்கு அவனைப் பார்க் கும் போதெல்லாம் இன்னதென்று தெரியாத உணர்வொன்று ஆக்கிரமிப்பதுண்டு.

அன்று, கீதாஞ்சலிக்கு உயர்தரப் பெறு பேறுகள் வந்திருந்தது. பல்கலைக்கழகத் திற்கு போதுமாயிருந்தது, கூடுதல் மகிழ்வு அவளுக்கு.

அன்ரி அன்ரி!என்று கத்தினபடி ஓடிவந் தாள் அவள்.

என்னடாம்மா? வாவா! எனக்குத் தெரியும், என்ரசெல்லம் கம்பஸ் போகு மெண்டு! என,உச்சிமோந்தார் கலா. ஓம் அன்ரி,மட்டக்களப்புத்தானே...

ஆனாலும், கொஞ்சம் பயமாஇருக்கு. யோசிப்பம். இந்துநாகரிகத்துக்குத்தான் கிடைச் சிருக்கு அன்ரி.பார்ப்போம். என்றபடி திரும் பியவள், சுவற்றில் சாய்ந்து கைகட்டிக் கொண்டு நின்ற ஜீவனைக்கண்டு திகைத் தாள்.

இவனெப்ப கம்பஸ்சாலவந்தவன்? ஐயோ! ஏன் இப்பிடிப்பாக்கிறான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரம் பார்த்து கலா கலா என்று ரங்கநாதன் கூப்பிடவும், நில்லம்மா ,மாமா தோட்டத்துக்க நிக்கிறார் தேத்தண்ணி குடுத்திட்டுவாறன்.என்றபடி விரைந்தார் அவர்.

அய்யோ!பிள்ளையாரப்பா! இவனிட்டயா நான் மாட்டோணும்? முருகா! என்றபடி விழித்தவளை, என்னமேடம்,என்னோட கதைக்கமாட்டியள்போல? கேட்டவன் குரலிலிருந்த கடினம், மருந்துக்கும் முகத்தில் இல்லை.

இல்லை அண்ணா என்று இழுத்தவளைக் கண்டு அதிர்வது ஜீவனின் முறையானது.

என்னடி அண்ணாவா? ஏன்டி, என்ர அப்பா உனக்குமாமா, அம்மா அன்ரி,நான் அண்ணாவாடி உனக்கு?

இல்லை அண் ஜீவன்...அவள் திணறியதும் நகைப்போடுபார்த்தவன்,

சரி,என்ன செய்யப்போறாய்? என்று ஆரம்பித்தான்.

ஏற்கனவே அவனைக் கண்டு தடுமாறி நின்றவளாச்சே! என்ன கேட்கிறான் என்று உண்மையிலேயே புரியவில்லை.

முழியை உருட்டிக் கொண்டு நிற்பதைத் தவிர என்ன செய்யலாம்?

அவனோ அதைக் கவனியாது, சொல்ல வந்ததைச் சொல்லிவிடும் வேகத்தில் தொடர்ந்தான்.

நான்சொல்றதக் கேப்பாய்தானேடா? அவன் வார்த்தைகளில் இருந்த நெருக்கம் அவளுள் என்னவோ செய்தது. தொடர்ந்து சொல்வதைக் கேட்க முனைந்தாள்.

உனக்குக் கம்பஸ் வேணாம்மா. மட்டக்களப்பு எல்லாம் சரிவராது. அதுவும் நீ பயந்த சுபாவம் வேற. ராக்கிங் பண்ணியே கொண்ணுடுவாங்கள். என்றவன், கொலிஜ்போ! மூன்று வருசம் தானே? வெளியவரும் போதே ரீச்சர்... அவன்படபடவென்று சொல்லிக்கொண்டே போகவும், சத்தியமாய் திடுக்கிட்டு விட்டாள் அவள்.

இப்போதுதானே பல்கலைக்கழகம் கிடைத்திருக்கு என்று மகிழ்ந்தேன்! என்ன இவர்? இத்தனை உரிமையாய் போகாதே என்கிறார்! இப்படித்தான் முதலில் எண்ணியது அவள் உள்ளம்.

இவர்மட்டும் பேராதனை போவாராம்.நான் போகக்கூடாதாம். சிணுங்கவும் செய்தது. ஆனாலும் மனதில் உள்ளதைச் சொல்லிவிட்டுத்தன்சம்மதத்திற்காகநம்பிக் கையோடு காத்து நின்றவனின் ஊடுருவும் பார்வை சட்டென்றுசரிஎனத் தலையசைக்க வைத்துவிட்டது.

மலர்ந்து விட்டான் அவன். விழிகள் பளிச்சிட, ம்ம்...ஏன்டி அந்தக் கண்ணை உருட்டுறாய்? வாயத்திறந்து பேசன். புட்டுக் கட்டியாவாயில வச்சிருக்காய்? சீண்டினான்.

உனக்கு என்னப்பாத்து என்ன பயம்டி? என்றவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை, அவனவள்.

இல்ல...நான் போகோணும். அம்மா தேடுவாமுணுமுணுத்தாள். அவனது சென்ட் மணம் வேறு அவள் நாசி தொட்டு ஏதேதோ செய்தது.

சரி,போ! ஒரே ஒருகேள்விக்கு மட்டும் பதில் சொல்லீட்டுப்போ!என்றான் அவன், அழுத்தமாக.

என்ன?என்று நிமிர்ந்தவளின் விழிபார்த்து, என்னைக் கல்யாணம் செய்யிறியா குட்டிம்மா? வெகுசாதாரணமாகக் கேட்டுவிட்டான்.

என்ன?என்று அதிர்ந்தவளின் விழிகள் தன்னாலே நீரைச்சொரிந்தது. அது ஆனந்தத்திலா அதிர்ச்சியிலா என்று அவளுக்கே தெரியவில்லை. அதைப் புரிந்தவன்போல, நெருங்கி, மிகமெதுவாக நெஞ்சோடு சாய்த்துக்கொண்டான் அவன்.

உன்னப்பாத்ததில இருந்து நான் உன்ன விரும்புறன். உனக்கும் என்னில விருப்பம் என்று நல்லாவே தெரியும். உன் படிப்பைக் குழப்பக்கூடாதெண்டுதான் பேசாமயிருந்தன்.

இனியும் பேசாமலிருந்தா, அந்தக் கிரு பாதாலியக் கட்டிக் கூட்டிக்கொண்டு போடுவான் போலக்கிடக்கு என்றான், ஆழ்ந்த குரலில்.

இதென்ன புதுக்கதை? என்று விழித்தவளை, நீயோசிக்காதடா! அவனுக்கு எவ்வளவு திமிரிருந்தா என்னுடயவளை விரும்புறன் என்று சொல்லியிருப்பான்? வந்த கோவத்துக்குக் கையைக்காலை உடைச்சிருப்பன், போனாபோகுதெண்டு விட்டனான். இன்னும் ரெண்டுவருசம்தானே? நீயும் படிச்சிடுவாய், நானும் பாஸவுட் பண்ணிடுவன். **தொடரும் .....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றை வார்த்தை

பா.கிஷோர்

இனியவன் ஒரு தெருவோர வியாபாரி. படிப்பு வாசனை இல்லாத அவன் பெரிய கடைகளில் இருந்து குறிப்பிட்ட தொகைக்கு புத்தகங்களை வாங்கி கையில் சுமந்தபடி பேரூந்துகளில் ஏறி இறங்கி விற்பனை செய்பவன். மறு நாள் முன்னய தொகையைக் கொடுத்துவிட்டு மீண்டும் புத்தகங்களை வாங்கிச் செல்வான். தினம் தினம் அன்றாட வருமானத்திற்காக கஸ்ரப்பட்டு இதனைச் செய்து வந்தான்.

ஒரு முதியவர் தினமும் அவன் பேரூந்தில் ஏறி இறங்குவதைக் கண்டார். இருப்பினும் அவனது முகத்தில் ஒருவித சலிப்பு இருப்பதை உணர்ந்த அவர், ஒருநாள் அவனை அழைத்து, முடிச்சாக முடிந்துவைக்கப்பட்டிருந்த நாணயம் ஒன்றை எடுத்து தம்பி இது, மன்னர் காலத்து நாணயம், இதை வைச்சிருக்கிறவங்களுக்கு பேரதிஸ்டம் வருமாம். நான் வயசான கட்டை,



இனி எனக்கு எதுக்கு, கோயிலும் குளமுமா என் வாழ்க்கை போகுது, தினமும் உன்னைப் பாக்கிறன், ரொம்ப கஸ்ரப்படுறாய், இதை வைச்சிரு எனக்கொடுத்தார்.

பக்தியுடன் அதனை வாங்கிக்கொண்ட அவன், அந்த நாணயத்தை தனது காசுப் பையில் பத்திரமாக வைத்துக்கொண்டான். அன்றிலிருந்து அவரைக் காணவே இல்லை, அவர் மகான் எனவும் தனக்காக வந்தவர் எனவும் நம்பினான் இனியவன்.

அன்று அவனது வருமானம் வழமையைவிட அதிகமாக இருந்தது. நாணயம் வந்த நேரம் தான் வருமானம் கூடியுள்ளது என எண்ணினான். அதன் பின்னர் அவனை ஒருவித உட்சாகம் தொற்றிக் கொண்டது.

நாளாக நாளாக வருமானம் பெருகியது, சொந்தமாய் ஒரு கடையை ஆரம்பித்த இனியவன், முதலாளியானான். கடையின் வருவாய் அதிகரிக்கவே வேறு பல கடைகளையும் ஆரம்பித்தான். அந்த ஊரின் செல்வந்தர்களில் இனியவனும் ஒருத்தனாய் மாறினான்.

அவ்வேளை, அவனது கடைக்கு முதியவர் ஒருவர் வந்திருந்தார். அவன் அவரை அடையாளம் காணவில்லை, முதியவரோ அவனருகில் வந்து, இனியவா, நல்லாயிருக்கியா? என்றார்.

உற்றுப் பார்த்து அவரை அடையாளம் கண்டுகொண்ட இனியவன் அவர் பாதங்களில் விழுந்து வணங்கி அந்த நாணயத்தின் அதிஸ்டம் என்னை முதலாளியாக்கிவிட்டது என்றான்.

மகனே! அந்த நாணயம் எங்கே? என்ற முதியவரிடம், இதோ என தனது பொக்கற்றில் இருந்து எடுத்துக் கொடுத்தான். அதனைப் பிரித்த முதியவர், இதோ பார், இதில் இருப்பது வெறும் ஐந்து ரூபாய் நாணயம், உழைக்கும் எண்ணம் கொண்ட உனக்குள் ஒரு சலிப்பு இருப்பதை உணர்ந்தேன், அதனால் தான் இதை உன்னிடம் கொடுத்தேன், நீ உயர்ந்ததற்கு காரணம், இந்த நாணயமல்ல, உன்னுடைய உழைப்பின் நாணயமே என்றார்.

தன்னுடைய உழைப்பே தனது வளர்ச்சியின் காரணம் என்பதை உணர்ந்துகொண்ட இனியவன் மகிழ்வோடு முதியவருக்கு நன்றி தெரிவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Children's Day

ஊடகமே என் சுவாசமானது

## நட்சத்திர இல்லத்தரசி

பா.ஜயிலா



**ஆளுமைப்பெண்களை அடையாளப்படுத்தும் எமது ஒளிஅரசியின் இம்மாத ஆளுமையாக மிளிர்பவர் ஊடக வரலாற்றில் நீண்ட அனுபவங்களைக்கொண்ட ஒரு பெண்ணாவார்.**

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் என்ற பெயர் 'ஒளி அரசி ' வாசகர்களுக்கு நன்கு பரிச்சயமான பெயராகும். இவரது ஆக்கங்கள் ஒளி அரசியை அடிக்கடி அலங்கரிக்கின்றன. எமது ஒளி அரசியின் ஆசிரிய பீட ஆலோசகர்களில் ஒருவரான இவர் இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் பங்காற்றி வருபவர். இலங்கை பத்திரிகைத்துறை வரலாற்றில் பத்திரிகைத்துறையையே தனது முதல் தொழிலாக தேர்ந்தெடுத்து அத்துறையிலேயே கால் பதித்து பத்திரிகைத்துறையில் வெள்ளி விழாவைக் கடந்து பொன்விழாவை நோக்கி தனது பயணத்தை தொடரும் ஒரேயொரு முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் என்ற பெருமைக்குரியவர்.

செய்திகளோடு மட்டுமே சங்கமிக்கும் பத்திரிகையாளர் மட்டுமல்ல இவர் ஒரு சிறந்த படைப்பிலக்கியவாதியும் கூட. அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் அதிகாரியாக பணிபுரிந்த இவர் அரச அங்கீகாரம் பெற்ற ஒரு மொழிபெயர்ப்பாளருமாவார். இலக்கிய அபிமானிகளுக்கு மூன்று நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இவர் மூன்று சிறுவர் நூல்களை சிங்கள மொழியிலும் மொழிபெயர்த்துள்ளார்.

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை 'மின்னும் தாரகைகள்' என்ற பெயரில் விரைவில் வெளியிடும் முயற்சியிலும் இவர் தற்சமயம் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். பல்துறை ஆளுமைமிக்க இவரை எமது ஒளிஅரசியின் இம்மாத 'நட்சத்திர இல்லத்தரசி'யாக நாம் மகுடம் சூட்டி மகிழ்கிறோம்.

**சகோதரி கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்களிடம் ஒளி அரசிக்காக நாம் கண்ட நேர்காணல் இதோ:**

**உங்களைப்பற்றிய அறிமுகம் எமது வாசகர்களுக்காக...?**

எழில் கொஞ்சும் மலைநாட்டில் கண்டி மாவட்டத்தில் ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதியிலுள்ள உடுதெனிய என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றூரே எனது பிறப்பிடாகும். பத்தர முல்லையை வசிப்பிடமாகக் கொண்டுள்ளேன். அல்ஹாஜ் எம்.எம் ரஷீத்;ஹாஜியானி உம்மு ஸல்மா ரஷீத் ஆகியோரின் தலை மகளாக பிறந்த எனக்கு ஐந்து சகோதரர்களும் ஒரேயொரு சகோதரியும் உள்ளனர். மற்றுமொரு சகோதரர் 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதின்று இறையடியெய்தி விட்டார். நாம் முற்றிலும் எதிர் பாராத வகையில் அந்த சகோதரர் எம்மை விட்டுப்பிரிந்தமை இன்றும் ஆறாத வடுவாக எம் உள்ளங்களில்.

கொழும்பை பிறப்பிடமாக்கொண்ட கவிஞர் என் நஜ்முல் ஹுசைனை வாழ்க்கைத் துணைவராகப்பெற்ற எனக்கு அன்புக்கு ஒரேயொரு மகள் சட்டத்தரணி நூருஸ் ஷப்னா சிராஜுத்தீன். இவர்கள் மூலம் ஆசைக்கொரு பேரனும் உள்ளனர்.

**உங்களின் ஊடகத்துறை பிரவேசம் பற்றி....?**

பத்திரிகைகளில் எனது ஆக்கங்கள் பிரசுரமாகிய கால கட்டத்தில் மிகவும் ஜனரஞ்சக பத்திரிகைகளான தினசரி பத்திரிகையான தினபதியிலும் வாராந்த பத்திரிகையான சிந்தாமணியிலும் பயிற்சிப்பத்திரிகையாளராக கடமை புரிய விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக விளம்பரங்கள் பிரசுரமாகியிருந்தன. அச்சமயம் எனது சகோதரான சட்டத்தரணி ரஷீத். எம்.இம்தியாஸ் இந்த இரண்டு பத்திரிகைகளிலும் ஹேவாஹெட்ட தொகுதியின் பிரதேச நிருபராவார். எனவே உடனே அவர் மூலமாக இந்த விண்ணப்பத்தை அனுப்பினேன்.

நேர்முகப்பரீட்சையை நடத்திய அப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியரும் பத்திரிகை உலக ஜாம்பவான் என்று போற்றப்படுபவருமான எஸ்.டி.சிவநாயகம் ஐயாவும் பிரதி ஆசிரியரான கே.கே. இரத்தினசிங்கம் ஐயாவும் எனது பத்திரிகைத்துறை ஆர்வத்தையும் ஆளுமைகளையும் புரிந்துக் கொண்டு என்னை பயிற்சிப்பத்திரிகையாளராக உடனே தெரிவு செய்து விட்டனர்.

கொழும்பில் எமது அருமை மாமி மௌலவியா மலீஹா சுபைர் வீட்டில் எனக்கு தங்குமிட வசதியும் ஏற்பாடு செய்து தங்க வைத்தார். அன்று எனக்கு அடைக்கலம் தந்த அந்த அன்புள்ளங்களை இங்கே நன்றியுடன் நினைவூட்ட விரும்புகிறேன்.

ஒரு முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் என்ற வகையில் நான் கடந்து வந்த பாதை காபட் பாதையல்ல அது கரடுமுரடான பாதை. கடினமான பாதையில் பயணித்தே அந்த நிறுவனம் மூடப்படும் வரை சிரேஷ்ட பத்திரிகையாளராகவும் உதவி ஆசிரியராகவும் கடமை புரிந்தேன். அந்நிறுவனம் மூடப்பட்ட பின்னர் நான் எனது பயணத்தில் சோர்ந்து போகவில்லை அதே ஆண்டில் கொழும்பு நாவலயிலுள்ள திறந்த கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை சான்றிதழ் பாடநெறியை மேற்கொண்டு சிறந்த முறையில் சித்தியடைந்தேன்.

அதைத்தொடந்து தொலைக்கல்வி நிறுவனத்தினூடாக நடத்தப்பட்ட வெகுசனத்தொடர்பு டிப்ளோமா பரீட்சையிலும் சித்தியடைந்தேன். கொழும்பு பல்கலைக் கழகத்தில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மொழிமூல பத்திரிகைத்துறை டிப்ளோமா பாடநெறியை அதிசிறந்த முறையில் பூர்த்தி செய்து டிப்ளோமா பட்டம் பெற்றேன். கணணித்துறையிலும் பல்வேறு பாடநெறிகளை மேற்கொண்டு சித்திடைந்தேன்.

இவ்வாறு எனது திறமைகளை நான் வளர்த்துக்கொண்டதன் பலனாக 1994ஆம் ஆண்டு அரசாங்க தகவல் திணைக்களத்தில் எனக்கு பிரசார உதவியராளராக நியமனம் கிடைத்தது. சுமார் ஆறாண்டு சேவையின் பின்னர் இதன்படி இத்திணைக்களத்தில் அரசாங்க தகவல் அதிகாரியாக (Information Officer) பதவி உயர்வு பெற்று சுமார் இருபது வருட சேவையின் பின்னர் ஓய்வு பெற்றேன். பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் எனது எழுத்துப்பணியிலிருந்து ஓய்வு பெறவில்லை. இன்றும் எழுதிக்கொண்டு தான் இருக்கிறேன்.

அத்தோடு ஒன்றை மாத்திரம் இங்கே நான் பதிவு செய்ய வேண்டும். எனது திருமணத்தின் பின்னர் எனது கணவரை அழைத்த எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை உலக தந்தையான சிவநாயகம் ஐயா அவர்கள் நண்பரே உங்கள் மனைவி ஊடகத் துறையிலும் எழுத்துத் துறையிலும் நன்கு ஜொலிப்பவர். இத்துறையில் அவருக்குசிறந்ததோர்எதிர்காலமுண்டு. எனவே அவரை தொடர்ந்தும் அலுவலகம் அனுப்பி வையுங்கள் என்று கூறிஆசியுரை பகர்ந்தார். அன்னாரின் எதிர்வுகூறலை இன்று நான்நன்றியுடன்நினைவுகூர்கிறேன். அன்று அன்னார் தந்த பயிற்சியும் ஊக்கமும் உற்சாகமும்தான்இன்றுநான்இத்துறையில்மிளிர்வதற்கு உந்து சக்தியாக இருக்கிறது என்பதை கூறிக்கொள்வதில் பெருமிதமடைகிறேன்.

அதனையடுத்து எனது இல்லறத்தில் மட்டுமல்ல இலக்கியத்திலும் எனக்கு பக்க பலமாக இருக்கும் எனது வாழ்க்கை துணைவரின் துணையை எண்ணி மகிழ்கிறேன். என் உயிரும் உரமும் எனது கணவர் தான். எனது எழுத்துப்பயணத்துக்கு உற்றதுணையாக இருக்கும் என்னவருக்கும் எனதுஎழுத்துலக வெற்றியில் கணிசமான பங்குண்டு.

**விரைவில்வெளிவரவுள்ளஉங்களது ஆய்வுநூல்பற்றிஅறியவிரும்புகிறோம்?**

நான்ஏற்கனவே எமது தினபதி சிந்தாமணி பத்திரிகைகளில் வெளியான மற்றும் வானொலியில் ஒலிபரப்பான எனது ஆக்கங்களை உள்ளடக்கியதாக 'பண்பாடும்பெண்' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டுள்ளேன். அதையடுத்து மற்றுமொரு நூலை வெளியிடும் எனது ஆசைகள் அனைத்தும் அலுவலக வேளைப்பளு காரணமாக முடங்கிப் போயின.

எனினும் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூலொன்றை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னரே என்னுள் துளிர் விட்டது. ஆனால் காலம் நேரம் எனக்கு சாதகமாக அமையவில்லை.

நூல்களை வெளியிடாவிட்டாலும் இலக்கியத்துக்கு தங்களின் முழுமையான பங்களிப்பைச் செய்துவருவோர் தனது பேனா வாகனமேறிவானொலியில் வலம் வந்தோர் என வகைப்படுத்தி மொத்தம் 125 பெண் எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களை இந்த ஆய்வு நூலில் இணைத்துள்ளேன்

எனவே சுமார் 100 பக்கங்களுடன் வெளியிடலாம் என்றெண்ணிய எனதிந்த ஆய்வு நூல் சுமார் 450 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இலங்கை இலக்கிய வரலாற்றில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய இவ்வாறான ஒருஆய்வுநூல்வெளிவருவது இதுவே முதற்தடவையாகும். இந்த நூலுக்கு இலங்கையின் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் சிறப்பான நீண்டதோர் அணிந்துரையைத் தந்துள்ளார். அவ்வாறே இந்தியபேராசிரியர்சேமுமுமுகம்மதலிஅவர்கள் இந்நூலுக்கு மதிப்புரை ஒன்றை தந்துள்ளார். அவ்வாறே மேலும் பல சான்றோரின் நல்லாசியுடன் இந்த நூல் வெளிவரவிருக்கிறது.

**இந்த ஆய்வு நூலில் நீங்கள் ஆவணப் படுத்தியுள்ள இலக்கிய கர்த்தாக்கள் உங்களின் இந்த சிரமங்களை நன்றிக் கடனோடு நோக்கினால் நன்று. அதுசரி இவ்வாறான ஒரு ஆய்வு நூலை வெளியிடும் எண்ணம் உங்களுக்கு ஏற்படக் காரணம்?**

2010ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் பெண்கள் அரங்கில் சமர்பிப்பதற்காக ' இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப்பங்களிப்பு' என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக்கட்டுரையினை எழுதினேன். இந்த கட்டுரைக்கான தகவல்களை பெறும் போதே என் மனதில் மற்றுமொரு ஆசை துளிர் விட்டது. இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றியும் ஒரு ஆய்வு நூலை எழுத வேண்டும் என்பதே அந்த ஆசையாகும்.

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி இலங்கையில் இதுவரை முழுமையான ஆய்வு நூல் ஒன்று வெளிவரவில்லை. இலைமறை காயாகவும் கனியாகவும் இருக்கும் இந்த எழுத்தாளர்களை வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும் என்பது எனது நீண்ட நாளைய ஆசையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களின் இந்த நூலுக்கு 'மின்னும் தாரகைகள்' என்று பெயர் வைத்துள்ளீர். அது பற்றி?**

இலக்கிய வானிலே மின்னும் தாரகைகளாக பிரகாசிக்கும் இந்த இலக்கிய தாரகைகளை ஒன்று சேர்க்கும் முன்னரே இந்த நூலுக்கு 'மின்னும் தாரகைகள்' என்று தான் பெயர் வைக்க வேண்டும் நான் தீர்மானித்து விட்டேன். இந்த தேடலின் போது நான் சந்தித்த பல பெண் இலக்கிய ஆளுமைகளைக் கண்டு உண்மையிலேயே நான் பிரமித்துப்போனேன். இந்த நூலில் உள்வாங்கப்பட்டுள்ள அனைவரிடத்திலும் ஒவ்வொரு திறமை இருப்பதை கண்டு நான் வியந்து போனேன். இவர்கள் எல்லாம் நம்நாட்டின் வளங்கள். புடம் போட்ட தங்கங்களாக மிளிரும் இவர்களை நான் 'மின்னும் தாரகைகள்' என பெயர் சூட்டியதில் பிழையில்லை என உணர்கிறேன். இவர்களில் சிலர் மின்னும் தாரகைகளாக மட்டுமல்ல சுடர் விடும் சூரியனாகவும் பிரகாசிக்கிறார்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன். இவர்கள் அனைவரையும் ஒரே அணியில் சேர்ப்பதற்கு அருள் புரிந்த அல்லாஹ்வுக்கும் ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளங்களுக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

**உங்களின் வேறு படைப்புகள் பற்றி?**

நான் எழுதி பத்திரிகைளில் பிரசுரமாகிய வானொலியில் ஒலிபரப்பாகிய கவிதைகள் பிறருக்காக நான் வடித்த கவிதைகள் போன்றவற்றை தொகுத்து 'பூஞ்செண்டு' என்ற பெயரிலான கவிதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டுள்ளேன். அத்தோடு எனது கணவரின் கவிதைகளை தொகுத்து 'நஜ்முல் ஹுஸைனின் நட்சத்திரக் கவிதைகள்' என்ற பெயரிலான தொகுப்பு நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளேன். பல்கலைக் கழக டிப்ளோமா பாடநெறிக்காக என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 'எயிட்ஸ் நோயும் பெண்களும்' என்ற மற்றுமொரு ஆய்வு நூலும் பிரசுரத்துக்கு தயாராக உள்ளது. அவ்வாறே எனது 'மின்னும் தாரகைகள்' ஆய்வு நூலையும் 'திலென தரு' என்ற பெயரில் சிங்களத்தில் வெளியிட உத்தேசித்துள்ளேன். இறைவன் நாடினால் அந்த நூலும் உங்கள் கரங்களில் தவழும்.

**உங்களது எழுத்துலக ஊடக பங்களிப்புகளுக்காக உங்களுக்குக் கிடைத்த கௌரவங்கள் பற்றி?**

கிடைத்த பட்டங்கள், விருதுகள் ஏராளம். அவற்றில் சில கலாசார அமைச்சினால் கலாபூசணம் அரச விருது சிறந்த எழுத்தாளர் விருது படைப்பாளர் விருது சர்வதேச மகளிர் தின விருது மாக்கான் மாக்கார் விருது பல் வேறு அமைப்புகளினால் தகவல் ஜோதி ஊடக நாயகி இலக்கிய தாரகை போன்ற பட்டங்கள்


இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை இலக்கிய வானிலே 'மின்னும் தாரகைகள்' என வெளிச்சம் காட்டி வெற்றியடைந்த சாதனை நாயகியாகியான இந்த இலக்கியத்தாரகையை நாமும் ஒளிஅரசியின் இம்மாத 'நட்சத்திர இல்லத்தரசி' யாக மகுடம் சூட்டி மகிழ்வதுடன் இவரது 'மின்னும் தாரகைகள்' நூல் வெளியீட்டு விழா ஒரு வெற்றி விழாவாக அமைய வாழ்த்தி விடை பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Children's Day





மனிதகுலம், இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் என்றைக்குமாக வாழ்வின் யதார்த்தங்களையும் அதன் இயல்புநிலை வழக்குகளையும் எடுத் தக்கூறியதனூடாக எந்த ஒரு காலத் திலும் தனிமனிதன் மற்றும் அவன் சார்ந்த கூட்டுசமூகமானது எவ்வா றெல்லாம் வாழவேண்டும் என்ற வழி யினை காட்டிச்சென்ற மகான்களில் ஒருவராக ஓஷோ விளங்குகின்றார்.

# ஓஷோ என்னும் சக்தி

பாலாஜினி
பளை.

இவர் பரிபூரணத்தவம் நிறைந்த குருவாவார். இருபதாம் நூற்றாண்டு செதுக்கிய சிறந்த சிற்பி களில் ஒருவராக காணப் படுகின்றார். இந்திய தேசத்தின் தலைவிதியை மாற்றிய மாமனிதர்கள் பத்துப்பேரில் இவரும் ஒரவர் என்று சண்டே மிட்டே என்ற இந்திய இதழ் மகுடம் சூட்டியுள்ளது.

கண்ணன், புத்தர் முதலிய தெய்வங்களின் தத்துவங்களின் அடிப்படையில் தன்னுடைய ஞானநிலையை உருவாக்கிக் கொண்டவர் இவர். இன்றைய நமது சமூகம், அரசியல் பிரச் சினைகளுக்கும், ஏராளமான சமூகப் பிரச்சினைகளுக்கும் விடை தேடிக்கொண்டிருக்கின்றது. அவ்வாறு தேடுபவர்களின் தாகத்தை தணிப்பவராக மகான் ஓஷோ விளங்குகிறார். இவர், மதம், தேசம், இனம், மொழி போன்ற பிரிவுகளை எதிர்ப்பவர். திருக்குறளைப்போல யாவருக்கும் பொதுவானவர். இன்றைய உலகத்தினை நெறிப்படுத்துவதற்கான அகமாற்று அறிவிய லையும் தியான அணுகுமுறையையும் தந்த ஒரு புரட்சியின் மறுவடிவம்தான் இந்த ஓஷோ.

அவரால் கூறப்பட்ட கருத்துக்களை நமது வாழ்க்கையில் நாம் பினபற்றினால் மனத இனத்தின் நடத்தைக்கோலத்தில் சிறப்பான ஒரு புரட்சி மலரும் என்பது நிச்சயம்.

ஓஷோவால் நூல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை, அவரது கருத்துக்கள் ஒலிநாடாக்களிலும் வீடியோகளிலும் பதிவாகி உள்ளன. இவைகளையே தற்போது நூல்களாக வெளியிடுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டினை உருவாக்கிய ஆயிரம் சிற்பிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஓஷோ என மகுடம் சூட்டியிருக்கிறது சண்டே டைம்ஸ் பத்திரிகை.

பொதுவாக மனஅழுத்தம் தான் இன்றைய மனிதர்களின் மிகப்பெரிய எதிரியாகவும் பிணியாகவும் காணப்படுகின்றது.

இப்படி உடலிலும் உள்ளத்திலும் அடுக்கடுக்காய் குவிந்துபோய்கிடக்கும் அன அழுத்தத்தினை வெளியேற்றுவதற்கான மிகச்சிறந்த முறையாக ஓஷோவின் ஆக்டிவ் தியான முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையானது தியானத்திற்கேற்ற குழப்பமில்லாத அமைதியான சமநிலையுடைய ஒரு மனநிலையை இலகுவாக அடைந்துகொள்ள உதவுகின்றது.

உலக வாழ்க்கை என்பது நிலையற்றது. ஆனால் அனுபவிக்கப்பட வேண்டியது, அனுபவித்தல் என்பது சரியான வழிமுறைகளில் அல்லது பூமிசார் உயிரினங்களுக்கு ஒதுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் அனுபவிக்கப்படவேண்டும் என்பதே இவரது தெளிவான கருத்தாகும்.

மனித இனம், பீடிக்கப்பட்டிருக்கின்ற கவலைகளில் இருந்தும் மீள முடியாத துன்பங்களில் இருந்தும் மீண்டு வருவதற்கான வழிமுறைகள் அவரிடம் தான் உள்ளது.

கோரேகாவோன் பார்க் ( koregaon park) எனும் பகுதியில் பசுமையான மரங்கள் சூழ்ந்த நாற்பது ஏக்கர் பசுமைப் பிரதேசத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது ஓஷோ கம்சூன் வளாகம். இங்கு வருகின்ற பார்வையாளர்கள் இந்தப்பகுதியிலேயே தங்கிச்செல்லும் வசதிகள் இல்லா விட்டாலும் அதற்கு அருகிலேயே நிறைய தங்குமிடங்கள் உள்ளன. நாள் வார மாதக்கணக்குகளில் இங்கு தங்கிச்செல்லும் வசதிகள் உள்ளன.

இங்கு பலதரப்பட்ட, மனதை இரம்மியமாக்கும் நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

ஓஷோ என்கின்ற அற்புதமான புனித ஆன்மாவை அடிப்படையாகக் கொண்டு உலகின் மக்கள் யாவரும் பயன்பெறக்கூடிய வகையில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தொடரினூடாக ஓஷோ தொடர்பிலான நம் வாழ்க்கையின் இயல்புகளையும் அவற்றின் அடிப்படைகளையும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இவரது வாசகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருத்தர் வாழ்விலும் அதிகளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியன. ஆபத்துக்களில் இருந்தும் ஆகாத வழிகளில் இருந்தும் விடுதலைபெற்று வாழவைக்கக் கூடியன.

அவரது வாழ்வில் நடந்த சுவாரஷ்யமான சம்பவங்களுடன் அவரது சொற்பொழிவில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவரால் வழங்கப்பட்ட பதில்களுடனும் உங்களுடன் தொடர்ந்து பயணிக்கவிரும்புகிறேன்.

இத்தொடரானது இனமதமொழி கடந்து அனைத்து வாசகர்களுக்கும் பயன்மிக்கதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. தொடர்ந்து பயணிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதியோர்களே எ





தமிழரசி
கிளிநொச்சி

மனித வாழ் நாளின் இறுதி ஆண்டுகளை முதுமை என்கிறோம். ஏறத்தாழ 60 வயதுக்கு மேற்பட்டோரை முதியவர் என்பர். இளம் பருவத்தில் இருந்து படிபடியாக மனிதர் முதுமைப் படுவர். இன்றுவரை, முதுமை, வாழ்வின் மாற்ற முடியா ஒரு பகுதியாகவே இருக்கின்றது.

முதுமைக்காலத்தை ஓய்வின் காலம் எனக் கருதுவதும் உண்டு. ஆடி ஓடி உழைத்த உடல், தான் சார்ந்த அனேகமான பணிகளில் இருந்து உடலுக்கு சற்று ஓய்வினை வழங்குதலே முதுமை என்பதாக உள்ளபோதும் அந்த முதுமையிலும் தளராது தற்துணிவோடு உழைத்து உரமேறும் மனிதர்கள் தான் எத்தனை எத்தனை தெரியுமா?

மனைவி, பிள்ளைகள், உறவுகள் என்ற பந்தங் களைக் காத்து வழிஅமைத்தபின் பேரப்பிள்ளை களுக்காவும் தம்மை வருத்தும் தாத்தாக்களும் பாட் டிகளும் எம் மத்தியில் உள்ளனரே. தவிர பிள்ளை களின் வருமானத்தில் தாம் வாழ்ந்துவிட நினைக் காத அவர்களுக்கு சுமையாகிவிடக்கூடாது என எண்ணுகின்ற மகோன்னதமான மனம் கொண் டவர்கள் எத்தனைபேர்?

அவர்கள் ஓயாது உழைக்கும் வியர்வைத் துளிகள் படர்ந்து தான் இந்த உலகம் பூத்துச் செழிக் கிறது. நிறைந்த நேசத்தினைக் கொண்டு தினம் தினம் உயிர்ப்பிக்கப்படுகின்றது அவர்களின் அன்பு. தாத்தாவும் பாட்டியும் எமது தலைமுறை யின் நாயகனும் நாயகியுமாய் விளங்குபவர்கள். அவர்கள் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் உறவுகளின் வேர்களையும் எம் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ரீதியான திருத்தல் சேவையுடன் தரம் -04 மாணவர்களின் (2019) பரீட்சைப் பெறுபேற்று அடைவை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை செயற்றிட்டம்

# சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள் - 2018

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்கள பத்திரிகையில் வெளிவந்த வினாத்தாள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு எமது ஆசிரியர் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டு இங்கு வெளியிடப்படுகின்றது.

இவ்வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச்செய்து இல 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி என்ற முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ்வினாத் தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு 10 நாட்களுக்குள் தபாலிடப்படும். (முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பபட்ட மேலதிக கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

## ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 02(ஒக்ரோபர்) தரம் 4

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2018

## தபால் மூல பரீட்சை செயற்றிட்டம்

**முழுப்பெயர்:** - ..........................................................................................

**பாடசாலை:** - ..........................................................................................

**வீட்டின் சரியான தபால் முகவரி** - ..........................................................

..........................................................................

**தொ.பே. இல.** ...................................... **பிறந்த திகதி.** ......................................

**வினாத்தாள் -I புள்ளிப் பதிவு**

**வினாத்தாள் -II புள்ளிப் பதிவு**

**மொத்தப்புள்ளிகள்**

### பாராட்டுப் பெறுவோர்

**கடந்த பரீட்சையில் 100 புள்ளிக்குமேல் பெற்று பாராட்டுப்பெறும் மாணவர் விபரங்கள் அறிவுக்களஞ்சியம் என்ற இணைப்புக் கையேட்டில் 09ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ளது.**

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

.......................... ..........................

**மேற்பார்வையாளர்** **பொறுப்பாசிரியர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 4 படிமுறை மாதிரி வினாத்தாள் 2018

வினாத்தாள் I நேரம் : 45 நிமிடங்கள்

★ **பின்வரும் உருக்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து மிகவும் வேறுபடுகின்றது அவ்வாறு வேறுபடும் உருவைத் தெரிந்து கோடிடுக.**

01) 1.

2.

3.


02) கீழே தரப்பட்டுள்ள பிராணிகளினல் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள மிகச் சரியான கூட்டம் எது ?

A.

B.

C.

D.


1. AC, BD 2. BC, AD 3. AB, CD

03)

| | |
|---|---|
| A - பென்குயின் | B - வாத்து |
| C - கிவி | D - கோழி |
| E - காகம் | F - கழுகு |

ஒத்த தன்மையுள்ள பிராணிகள் கூட்டமாக்கப்பட்டய விடையின் கீழ் கோடிடுக.

1. [B, C] [F, D] [A,F] 2. [E, F] [A, D] [B,C] 3. [A, B] [E, D] [C,F]

★ **கீழே A, B, C, D எனும் அடைப்பினை அவதானித்து 04 ஆம், 05 ஆம் வினாக்களிற்கு விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

| A | B | C | D |
|---|---|---|---|
| உளி<br>மண்வெட்டி<br>சீவுளி | மண்வெட்டி<br>கைமுள்<br>கூடை | உளி<br>சுத்தியல்<br>சீவுளி | தராசு<br>படிகள்<br>சாக்கு |

04) தச்சுத்தொழிலில் மட்டும் பாவிக்கப்படும் கருவி,
1. A 2. B 3. C

05) விவசாயத்தொழிலுக்கு மட்டும் பயன்படும் கருவி அடங்கியுள்ள அட்டவணை,
1. B 2. C 3. D

★ **06ஆம் 07ஆம் வினாக்களிற்கு வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை தெரிந்து கோடிடுக.**

06) நேரம் – கடிகாரம் எனின் திகதி -------
1. மாதம் 2. வருடம் 3. நாட்காட்டி

பக்கபுள்ளித்தொகை [ ]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07)** நீளம் - மீற்றர் எனின் திரவம் ..........................

1. சென்ரிமீற்றர் 2. லீற்றர் 3. கிலோகிராம்


★ **கீழே சில குறியீடுகளும் அவற்றிற்குரிய எழுத்துக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு கீழ் உள்ள வினாக்களுக்குரிய விடையினைத் தெரிந்து கோடிடுக.**







**08)**  ⇨ எனும் குறியீட்டிற்குரிய சொல் யாது?

1. அசுரம் 2. அப்பம் 3. கப்பம்

**09)** 'சக்கரம்' எனும் சொல்லுக்குரிய குறியீடு யாது?

1.  2.  3. 

★ **கீழ் உள்ள அடைப்புக்களை அவதானித்து 10 ஆம், 11 ஆம் வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து கோடிடுக.**

அ.  ஆ.  இ. 

**10)** வட்டங்களின் எண்ணிக்கை சமமாகவுள்ள அடைப்புக்கள் எவை?

1. அ, ஆ 2. அ, இ 3. ஆ, இ

**11)** முக்கோணங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவுள்ள அடைப்பு எது?

1. அ 2. ஆ 3. இ

★ **12 ஆம் 13 ஆம் வினாக்களிற்கு முதலில் தரப்பட்டுள்ள கூற்றுக்கு மிகப் பொருத்தமான பழமொழியினைத் தெரிந்து கோடிடுக.**

**12)** ''தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றி பெறலாம்''

01. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
02. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
03. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

**13)** ''ஒன்றை வைத்தே ஏனையவற்றை அறியலாம்''

01. எறும்பூரக் கற் குழியும்
02. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
03. ஆறிய கஞ்சி பழம் கஞ்சி

**14)** கீழ் உள்ள நிகழ்வுகளை சரியான முறையில் ஒழுங்கு படுத்தினால் அமையும் விடை யாது?

பக்கப்புள்ளித்தொகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A - பலத்த மழை பெய்தது
B - வெள்ளம் பாய்ந்தோடியது
C - குளிர் காற்று வீசியது
D - வானம் இருண்டது

1. CDBA  2. DCAB  3. DCBA

★ கீழே தரப்பட்டுள்ள உருக்களையும் பெறுமானங்களையும் அவதானிக்க.





15)  இவ்வுருவின் பெறுமானம் யாது?

1. 7  2. 8  3. 6

16)  இவ்வுருவின் பெறுமானம் யாது?

1. 7  2. 4  3. 6

★ கீழேயுள்ள இயந்திரப் பெட்டியில் ஓர் எண்ணை செலுத்தினால் 4ஆல் பெருக்கி வரும் விடையில் 3ஐ கழித்து விடையாகத் தரும்.





17) இவ் இயந்திரத்தில் 3ஐ செலுத்தினால் கிடைக்கும் விடை?

1. 12  2. 15  3. 9

18) 17ஐ விடையாகப் பெறுவதற்கு செலுத்த வேண்டிய எண்?

1. 5  2. 4  3. 6

19)  இவ்வுருவில் அவதானிக்கக்கூடிய சம அளவான முக்கோணிகள் எத்தனை?

1. 5  2. 3  3. 4

★ கீழேயுள்ள சொற் கோலத்திற்கு ஏற்ப அடுத்துவரும் சொற்களைத் தெரிந்து கோடிடுக.



20) பதவி ⟶ வித்து ⟶ தும்பு ..................

1. பதவி  2. புத்தி  3. புனிதம்

21) வரகு ⟶ குருவி ⟶ வித்து ..................

1. தும்பி  2. புற்று  3. வரகு

★ கீழேயுள்ள கோலத்தை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிந்து கோடிடுக.

22)  ............... 

01  02  03

பக்கபுள்ளித்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் - ..........................................

23)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ABC | BCA | CAB | ............. | CBA | ABC | CAB |
| | | | | 01 | 02 | 03 |

★ கீழுள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் கொண்டு 24 ஆம், 25 ஆம் வினாக்களிற்கு விடை தருக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 7 | 4 | 6 | 8 | 9 | 2 |
| R | S | Q | T | W | X | V | Y | U |

24) இலக்கத்தை ஏறுவரிசைப்படுத்திய பின்னர் நடுவில் உள்ள இலக்கத்தைச் சுற்றி வட்டமிட்டால் வட்டம் கைப்பற்றும் இலக்கம் யாது?

1. 4 2. 5 3. 6

25) மேலுள்ள பெட்டியில் இலக்கம் ஒன்பதை அடுத்துள்ள இலக்கத்திற்கு கீழ் உள்ள ஆங்கில எழுத்தின் கீழ் கோடிட்டால் கோட்டின் மீது இடம் பிடிக்கும் எழுத்து

1. Q 2. Y 3. U

26) நான் காலை 9மணிக்கு கோயிலுக்குச் சென்ற போது எனது நிழல் என்னைப் பின் தொடர்ந்தது எனவே நான் செல்லும் திசை யாது?

1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு

27) எனது வயது 10 எனின் தம்பியின் வயது என் வயதை விட இரண்டு குறைவாகவும் அண்ணாவின் வயது தம்பியின் வயதை போல் இரண்டு மடங்கு எனின், அண்ணாவின் வயது?

1. 20 2. 16 3. 18

★ **அபியை விட ஆதவன் நிறை கூடியவன். ஆதவனை விட முரளி நிறை குறைந்தவன். ஆனால் அபியை விட நிறை கூடியவன் இதன்படி,**

28) நிறை கூடியவர் யார்?

1. முரளி 2. ஆதவன் 3. அபி

29) நிறை குறைந்தவர் யார்?

1. முரளி 2. ஆதவன் 3. அபி

30) நான் மழை காலங்களில் இரவு வேளைகளில் சத்தமிடுவேன். நான் நீரிலும் நிலத்திலும் வாழ்வேன். நான் யார்?

1. ஆமை 2. தவளை 3. மீன்

31) தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோமன் இலக்கங்கள் அமைத்த சிறுவனுக்கு 30ஐ அமைத்திட 6 தீக்குச்சிகள் தேவைப்பட்டன. அவன் 28ஐ அமைத்திட எத்தனை தீக்குச்சிகள் தேவை?

1. 9 2. 15 3. 17

32) என்னிடம் உள்ள பேனாக்களில் இரண்டைத்தவிர எஞ்சியவை கறுப்புநிறம், இரண்டைத்தவிர எஞ்சியவை நீலநிறம், இரண்டைத்தவிர எஞ்சியவை சிவப்பு நிறம். எனவே என்னிடம் உள்ள பேனாக்களில் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?

1. 4 2. 5 3. 3

பக்கபுள்ளித்தொகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


33) 8 # 4 = 6 ★ 2 = 16 ⊕ 4 எனும் கணிப்புக் கோவையில் #, ★, ⊕ என்னும் குறியீடுகள் குறித்து நிற்கும் கணிப்புக்கள்.

1. +, x, -    2. x, +,-    3. -, x, +

34) மாகாணம், நாடு, கிராமம், மாவட்டம் என்பதைக் குறித்துக் காட்டப்பட்டுள்ள சரியான அடங்கல் படம் எது ?

1.



2.



3.



35) ஒரு துவிச்சக்கரவண்டி மணித்தியாலத்திற்கு 15 கிலோ மீற்றர் வேகத்திலும் ஒரு மோட்டார்சைக்கிள் மணித்தியாலத்திற்கு 45 கிலோ மீற்றர் வேகத்திலும் ஒரே இடத்திலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டன. இரண்டு மணித்தியாலங்களின் பின் அவை இரண்டும் எவ்வளவு தூர வித்தியாசத்தில் காணப்படும்.

1. 60km    2. 40km    3. 90km

★ **36 தொடக்கம் 38 வரையிலான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

A,B, C, D எனும் நால்வர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். A யைவிட 15 புள்ளிகள் கூடுதலாக B பெற்றார். D யை விட C 10 புள்ளிகள் குறைவாக பெற்றிருந்தார். A யும் C யும் சமமான புள்ளிகள் பெற்றிருந்தனர். இதன்படி

36) நால்வரிலும் அதிக புள்ளிகளைப் பெற்றவர் யார் ?

1. A    2. B    3. C

37) குறைவான புள்ளிகளைப் பெற்றவர்கள் யாவர் ?

1. AB    2. BC    3. AC

38) D என்பவர் 80 புள்ளிகள் பெற்றிருந்தாராயின் B என்பவர் பெற்ற புள்ளிகள் எவ்வளவு ?

1. 75    2. 80    3. 85

★ **பின்வரும் தகவல்களைக் கொண்டு 39, 40 ஆம் வினாக்களுக்கு விடை யைத் தெரிவு செய்க.**

| |
|---|
| 1 தீப்பெட்டி<br>1 மெழுகுதிரி |
| விலை ரூபா 9.00 |

| |
|---|
| 2 தீப்பெட்டி<br>3 மெழுகுதிரி |
| விலை ரூபா 23.50 |

39) தீப்பெட்டி ஒன்றின் விலை யாது ?

1. ரூபா 2.50    2. ரூபா 3.50    3. ரூபா 5.50

40) மெழுகுதிரி ஒன்றின் விலை யாது ?

1. ரூபா 2.50    2. ரூபா 3.50    3. ரூபா 5.50

பக்கபுள்ளித்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 4 படிமுறை மாதிரி வினாத்தாள் 2018

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01. பின்வரும் வினாக்களை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.**

> ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியிலே தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக்கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள் போல் போற்றுவது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் காணப்படும் நூல்களைக் கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்தி அவற்றால் மற்றையவர்களும் பயனடையச்செய்ய வேண்டும்.

01) ஒரு நாட்டின் பெருமை எதில் தங்கியுள்ளது ?

.............................................................................................................

02) மேலுள்ள பந்தியில் இருந்து ஒரு உவமானத்தை எழுதுக.

.............................................................................................................

03) தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக.

.............................................................................................................

04) ''பணி'' என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

.............................................................................................................

05) ''சிறுமை'' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.............................................................................................................

06) நூல்களை வாசிப்பதற்கு வைத்திருக்கும் இடம்.

.............................................................................................................

பக்கபுள்ளித்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1. பாதுகாத்தல் / எம்மை / வேண்டும் / நோய் / நாம் / வராமல்.

.................................................................................................................................

**03. பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

1. நீர் மேற்குமிழி போல - ...............................................................................

2. கல்லில் நாருரித்தல் - ...............................................................................

**04. சரியான சொல்லின் கீழ்க்கோடிடுக.**

1. பல்களைக்கழகம், பல்கலைக்களகம், பல்கலைக்கழகம், பழ்கலைக்கழகம்.

2. இகழ்ச்சி, இகழ்ட்சி, இகள்ச்சி, இகல்ச்சி

**05. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான குறியீட்டை இடுக.**

பிள்ளைகள் பள்ளிக்கு வந்தனர் பாடம் படித்தனர் பந்து விளையாடினர் வீடு சென்றனர்

★ **தனிச்சொல்லை எழுதுக.**

06. வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டவன் - ......................................

07. ''கடையில் பாவக்காய் வேண்டினேன்'' என்னும் வாக்கியத்தில் உள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.

.................................................................................................................................

08. இ.மி.ச என்பதன் விரிவை எழுதுக.

.................................................................................................................................

09. தீக்குளித்துச் சாகிறவன் காற்றும் குளித்துச் சாவான். அவன் யார்?

.................................................................................................................................

**10. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**

1. Clap your hands ...........................................................................

2. I want to write. ...........................................................................

**11. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

Mother is (cooking, reading, cutting) rice.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கபுள்ளித்தொகை

பெயர் - ........................................

**12. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. திங்கட்கிழமை - ................................ 2. நிறங்கள் - ................................

13. ‘புத்தகத்தைப் படியுங்கள்.’ என்பதன் சிங்களத்தை தமிழ் எழுத்தில் எழுதுக.

.......................................................................................................................

14. ‘‘அ(ப்)பி பாசலட்ட யமு’’ என்பதன் தமிழ்க்கருத்து யாது?

.......................................................................................................................

**15. பின்வரும் வினாக்களுக்குரிய விடையைக் கணித்து எழுதுக.**

1. பாடசாலை மு.ப. 7.50 இற்கு ஆரம்பித்து பி.ப. 2.05 இற்கு முடிவடைந்தது எனின், பாடசாலை நடைபெற்ற நேரம் எவ்வளவு?

.......................................................................................................................

2. முந்திய எண்    எண்    பிந்திய எண்

..................    3009    ..............

3. பாண் ஒன்றின் விலை ரூபா 14.50 எனின், 10 சோடி பாண்களின் விலை யாது?

.......................................................................................................................

4.  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

.......................................................................................................................

5. 1 கிலோ பருப்பின் விலை ரூபா 40 ஆகும். 2 கிலோ 200 கிராம் பருப்பின் விலை யாது?

.......................................................................................................................

6. செத்தல் மிளகாய் 750 கிராம் இன் விலை ரூபா 60 ஆகும். 1250 கிராம் செத்தல் மிளகாயின் விலை யாது?

.......................................................................................................................

7. 3km 50m இதனை மீற்றரில் எழுதுக.

.......................................................................................................................

பக்கபுள்ளித்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கமல் 346 முத்திரைகளைச் சேகரித்துள்ளான். ஒரு பக்கத்தில் 4 முத்திரைகளை ஒட்டினால் எல்லா முத்திரைகளையும் ஒட்ட எத்தனை பக்கங்கள் தேவைப்படும்.

.......................................................................................................................

9. மேரியின் நிறை 24 கிலோகிராம் அவளுடைய அப்பாவின் நிறை மேரியின் நிறையின் மூன்று மடங்காகும். மேரி அப்பாவைவிட எவ்வளவு நிறை குறைவு?

.......................................................................................................................

10. ரூபா18.50 பெறுமதியான 6 புத்தகங்கள் வாங்கிய பிறகு அனுசனிடம் ரூபா 89.00 இருந்தது. அனுசனிடம் முதலில் இருந்த பணம் எவ்வளவு?


.......................................................................................................................

**16. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. மரக்கறி வகைகளைச் சமைக்கும்போது போஷாக்கு இழப்பைக் குறைப்பதற்குப் பின்பற்ற வேண்டிய சமையல் முறை எது?

1. பொரித்தல்  2. வறுத்தல்

3. சுடுதல்  4. அரை அவியலாக அவித்தல்

2. 

இக்குறியீடு மூலம் காட்டப்படுவது?

1. அபாயம்.

2. ஆண்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

3. மாமிச உணவு

4. நிலக்கண்ணிவெடிகள் வைக்கப்பட்டுள்ளன.

3. மழையுடன் அதிக இடிமுழக்கம் உள்ள நேரத்தில் பாதுகாப்பிற்காக எம்மால் மேற்கொள்ளக் கூடிய சரியான நடவடிக்கை எது?

1. வீட்டிற்குள்ளே இருத்தல்.

2. பாதணிகளை அணிந்துகொண்டு தொலைக்காட்சி பார்த்தல்.

3. மின்குமிழ்களை அணைத்துவிடல்.

4. நிலத்துடன் அங்கங்கள் படாதிருத்தல்.

4. ஒருவரது ஆடையில் தீப்பற்றினால் அவரைக் காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகளில் ஒன்று பின்வருவனவற்றுள் எது?

பக்கபுள்ளித்தொகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தண்ணீர் விசுறுதல். பெயர் - ........................................

2. தடித்த போர்வையால் மூடி நிலத்தில் உருட்டுதல்.
4. துணியால் காற்றுப்பட விசுறுதல்.
3. உடனடியாக வைத்தியரிடம் கொண்டுபோதல்.

5. சமூக ஊடக வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது
1. தொலைக்காட்சி 2. வானொலி 3. பத்திரிகை 4. ஸ்மாட்போன்

6. இரவு நேரத்தில் பூக்கும் பூக்கள் வாசனை அதிகமாக இருப்பதற்குக் காரணம் யாது?
1. சூரிய ஒளி கிடைக்காமையால். 2. வண்டுகளைக் கவருவதற்கு.
3. காற்று வீசுவதால். 4. பனி அதிகம் என்பதால்.

7. 
ஓட்டப்பந்தயத்தில் இவ்வாறு நிலையிலிருப்பது,
1. ஆயத்தமாகு
2. குறிப்பிற்குச் செல்
3. முன்னுக்குச் செல்
4. ஓடு

8. காற்றினால் பரவும் வித்தைக்கொண்ட தாவரம் எது?
1. தென்னை 2. இலவம் பஞ்சு 3. மாங்காய் 4. துத்திரி

9. கலாவாவியைக் கட்டுவித்த அரசன் யார்?
1. துட்டகைமுனு 2. மகாசேனன் 3. தாதுசேனன் 4. பராக்கிரமபாகு

10. சிகிரியாவை கட்டுவித்த மன்னன் யார் ?
1. காசியப்பன் 2. தாதுசேனன் 3. மகாசேனன் 4. வசபன்

**17. பின்வரும் குறியீடுகளின் விளக்கத்தை எழுதுக.**

1. 
........................


2. 
........................

3. 
........................

**18. பின்வரும் பறவைகளின் பெயர்களை எழுதுக.**

1. 
........................

2. 
........................

3. 
........................

பக்கபுள்ளித்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பின்வரும் விளையாட்டுக்களின் பெயர்களை எழுதுக.

1.



2.



3.



.................................... .................................... ....................................

20. நீங்கள் பார்த்து இரசித்த ஒரு மிருககாட்சிசாலையில் கண்ட காட்சிகள் பற்றி ஐந்து சொற்களுக்கு குறையாது மூன்று வசனங்கள் எழுதுக.

1. ........................................................................................................................

........................................................................................................................

2. ........................................................................................................................

........................................................................................................................

3. ........................................................................................................................

........................................................................................................................

பக்கபுள்ளித்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கள் பொக்கிசம்



தாத்தா,பாட்டியின் கண்காணிப்பில் அக்கறையில் குழந்தைகள் வளருவதால் தப்பான செயல்களில் ஈடுபடமால் நேர்மையாக வளர்கின்றனர். தனிமையில் வளரும் குழந்தைகள் இதனை இழக்கும் பட்சத்திலேயே தவறான வழியில் செல்கின்றனர் என்ற பொதுவான கருத்து யாவரும் அறிந்ததே. ஆனால் தற்காலத்தில் முதியோர் இல்லங்கள் அவர்களைத் தத்தெடுத்துவிட்டதால் நம் குழந்தைகள் வேறொரு போக்கில் செல்லத் தொடங்குகின்றனர்.



தாத்தா, பாட்டியின் கற்பனைமிக்க கதைகளைக்கேட்டு வளரும் குழந்தைகளின் கற்பனைத் திறனும் இயல்பாக அதிகரிக்கிறது. கற்பனை வறட்சியற்ற ஒரு கனவுலகை அவர்களால் உருவாக்க முடியும், என்பது நிதர்சனம்.



தாத்தா, பாட்டியின் பராமரிப்பில் வளரும் குழந்தைகள் மிகவும் பாதுகப்பான சூழ்நிலையில், தைரியமான மன நிலையில் வளருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளை விட பாட்டி, தாத்தாவின் அனுபவமும், அறிவும் அதிகம் என்பதால் அவர்களிடம் வளரும் குழந்தைகளுக்கும் அத்தனையும் கிடைக்கிறது. ஆனால் இன்றைய காலத்தில் அதிக குழந்தைகள் இவ்வாறான அருமையான பொக்கிஷங்களை இழந்துவிடுகின்றனர். இந்த அவலத்தில் இருந்து எமது குழந்தைகளைக் காத்து தாத்தா பாட்டியின் அனுபவங்களோடு வழிநடத்துவோம், வளர்த்தெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Children's Day

இம்மாத மங்கை

# உங்கள் ஆரோக்கியம் உங்களிடமே

ஆரோக்கிய உணவுகள் என்பதே ஒருவகை மருத்துவம் தான். சாப்பிட்ட உணவுகள் சரியாக செரிமானம் அடைந்து பசித்து அடுத்த உணவைச் சாப்பிட்டால் மருத்துவம் என்ற ஒன்று தனியாகத் தேவையில்லை.

இன்றைய விஞ்ஞானம் சொல்லும் பல உண்மைகளை எமது முன்னோர்கள் மெய்ஞானம் மூலம் கண்டறிந்தார்கள். அதையே இன்றைய விஞ்ஞானம் ஆதாரத்துடன் விளக்குகின்றது. அதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

**எமது உணவில் சேர்க்கப்படும் மருத்துவ மூலிகைகள்**
**உணவில் இருக்கும் கார அமில தன்மையின் சமநிலை.**

எமது முன்னோர்கள் அறிவியலைத்தான் எளிதான முறையில் நடைமுறைப்படுத்தினார்கள். தாளிக்க, சுவைக்க என்று சேர்க்கப்பட்ட சேர்மானங்கள் எல்லாம் உடல் ஆரோக்கியத்தினை ஊக்குவிக்கும் மூலிகைகளே ஆகும். ஆங்கில மருத்துவம் கொடுக்கும் மருந்துகளைவிட அதிகமான எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கக்கூடியது எமது பாரம்பரிய சமையல் முறை.

**இத்தகையதொரு துறையை கையில் எடுத்து தனது வளர்ச்சியோடு சமூக வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு பயணிக்கும் ஒரு பெண்மணிதான் எமது ஒளிஅரசியின் இம்மாத மங்கையாக ஜொலிப்பவர், இவர் திருமதி ரஞ்சிதமலர் நந்தகுமார். சாந்திகம் அமைப்பின் செயலாளராக உள்ளவர்.**

வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் யாழ் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டதாரி. சமூகவியல் துறையில் பட்டம் பெற்று, பின்னர் உளவளத்துணை பட்டப்படிப்பை முடித்து, அத்துறையில் பல வருடங்களாக பணியாற்றியவர்.

ஒரு இனிய நண்பகல் பொழுதில் அவரோடு உரையாடிய விடயங்கள் எம் வாசகர்களின் நலனுக்காகவும் பிரசுரமாகிறது.




**உங்கள் கல்வித்துறை, மற்றும் ஆரம்ப தொழில் பற்றி கூறுங்கள்?**

'நான்' என்ற ஒரு உளவளத்துணை சஞ்சிகை வாசித்தபின் தான் உளவளத்துறையில் ஈடுபாடு எற்பட்டது. அது உள்ளம் சார்ந்தது என்பதால் தொடர்ந்து அத்துறையில் பணியாற்ற விரும்பினேன். உயர்தரம் முடித்ததுமே உளவளத்துறையில் பயிற்சிக்காக இணைந்துகொண்டேன். குடும்ப புனர்வாழ்வு நிலையம், சேவ் த சில்றன், சேவாலங்கா, கன்டிகப் இன்ரநஷனல் போன்ற நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள், மனவலுவிழந்த பெண்கள், அவர்களின் சமூக வாழ்வியல் முன்னேற்றங்கள் என்பன பற்றிய விடயங்களில் உளவளத் துணையாளராக பணியாற்றியுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்போது நீங்கள் முன்னெடுக்கும் ஆரோக்கிய உணவு விற்பனைச் செயற்றிட்டம் பற்றிக்கூறுங்கள்?**

Fettle Blooms என்பதுதான் எமது விற்பனை செயற்றிட்டத்தின் பெயர். மலரும் ஆரோக்கியம் என்பதே இதன் பொருள்.

**நீங்கள் இதனை ஆரம்பித்ததற்கான காரணம் என்னவென்று தெரிந்து கொள்ளலாமா?**

ஆம், இன்று நோய் என்பது எம்மை ஆட்டிப்படைக்கும் ஒன்றாக மாறிவிட்டது. உணவே மருந்து என்பது மாறி மருந்தே உணவாக மாறிய காலத்தில் உள்ளோம். மாறிவிட்ட எமது உணவுப் பழக்கவழக்கங்களும் இதற்கான முக்கிய காரணியாகும். என்னுடைய வாழ்வாதாரம் என்பதைத் தாண்டி சமூகத்திற்கு உதவவேண்டும் எனும் எண்ணமும் என்னிடம் அதிகம் இருந்தமையால் இவ்வாறான ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பித்தேன். உலகத்தின் சகல கழிவுகளும் இங்கு வருகிறது. குழந்தையின்மை மற்றும் நீரிழிவு, இரத்த ஆழுத்தம், புற்றுநோய் எனபவை எல்லாம் சிறார்களுக்கும் அதிகமாக வர ஆரம்பித்துள்ளது. ஆரோக்கிய உணவின் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனநினைக்கின்றேன். அந்த உந்துதலே இதன் அடிப்படை.

**மாறிவிட்ட உணவுப் பழக்கங்கள் பற்றி விரிவாகக் கூற முடியுமா?**

ஆம், எமது சமூகம் சுகமானது எதுவென்று தேடுகிகிறதேயொழிய ஆரோக்கியமானதை எண்ணுவதில்லை. எமது நாடு வெப்பவலய நாடு. நாம் உண்ணும் உணவுகள் அதற்கேற்ற வகையில் இருக்கவேண்டியது அவசியம். எமது முன்னோர் இத்தகைய நோய்கள் ஏதுமின்றி மிக ஆனந்தமாக வாழ்ந்தவர்கள். தானிய வகை உணவுகளை அதிகம் உட்கொண்டனர். நன்றாக உடலை வருத்தி உழைத்தனர். நோயற்ற வாழ்வை வாழ்ந்தனர். தற்போதைய காலத்தில் அவசரமும் அவசியமும் உடனடி உணவுகளை உண்ண வைக்கின்றது. பொரித்த உணவுகளை அதிகம் எடுத்துக்கொள்கின்றனர். அவற்றிலிருந்து மீண்டால் நிச்சயம் தேக ஆரோக்கியம் சாத்தியமாகும்.

நாம் முன்னோரின் உணவுப் பழக்கங்களில் அதிகமானவற்றை இழந்துவிட்டோம். தானியங்கள் நல்லெண்ணெய், நெய், சேதன விவசாய முறையிலான காய்கறிகள் போன்றவற்றை தவிர்த்து விட்டோம். கண்ணுக்கு அழகானதையும் பார்வைக்கு கவர்ச்சியானதையும் உண்ணத் தொடங்கியதன் விளைவு நோயாளர்களாகித் தவிக்கின்றோம்.

**பெற்றல் புளூம்ஸ் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பற்றி?**

நாங்கள் போசணை நிபுணர்களை எம்மிடம் வைத்துள்ளோம், சலரோகம், இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் உள்ளவர்கள், எம்மிடம் ஆலோசனை எடுத்துக்கொள்ள முடியும். தொடர்ச்சியான உணவு வழங்கல், மூலம் போசணை நிபுணரின் கண்காணிப்பு அவர்களுக்கு எப்போதும் கிடைக்கும்.

ஆரோக்கிய உணவுகளை வீட்டில் தயாரிப்பதற்கானதிட்டங்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதுடன் சிறப்பு நிகழ்வுகளில் பரிமாறும் உணவுகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளமுடியும். வாடிக்கையாளரின் கருத்துகளுக்கும் விருப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்றபோதிலும் அவை முற்கூட்டியே கூறப்படவேண்டும் எனபதை தெளிவாக கூறியுள்ளோம்.

யோகா, தியானம் போன்ற மனவளக் கலைகளையும் தேவையானவர்களுக்கு வழங்குகின்றோம்.

இல்லங்களுக்கோ வேலைத்தளங்களுக்கோ உரிய நேரத்தில் விநியோகம் செய்யும் வசதியும் உள்ளது.

**உங்களுடைய உணவுத்திட்டங்கள் பற்றி பகிர்ந்துகொள்ளுங்கள்?**

காலை உணவை அவரவர் விருப்பின் படியும், ஆரோக்கியமாகவும் தயாரிப்போம், மதிய உணவு அறுசுவையும் அடங்கியதாக மூலிகை சேர்ந்ததாக இயற்கை விவசாய காய்கறிகள் சேர்த்து தயாரித்து வழங்குகின்றோம்.

அது தவிர பழக்கலவையும் தயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றோம். உழுந்து கூட உடைத்த கோது நீக்காத உழுந்தையே பயன்படுத்துவோம். மரக்கறி எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்துவதில்லை. அதிக விலையிலேனும் இயன்றவரை இயற்கை முறையிலான காய்கறிகளையும் கீரைவகைகளையும் மட்டுமே சேர்த்துக்கொள்வோம். எமது உணவுத் தயாரிப்பு முற்றிலும் மண் பாண்டங்களில் மட்டுமே ஆக்கப்படுகின்றது.

நோயாளிகள், உடல் பலவீனமானவர்கள், மற்றும் உடல் எடையைக் குறைக்கவிரும்புபவர்களுக்கு விசேட தயாரிப்புகள் உள்ளன.

பொலித்தீன் பாவனையை தவிர்த்து வாழை இலை போன்றவற்றையே பொதி செய்யப் பயன்படுத்துகின்றோம்.

**இத்தகையதொரு திட்டத்தை உருவாக்கும் எண்ணம் எவ்வாறு ஏற்பட்டது?**

சென்ற ஆண்டில் எனது உளவளத்துணை வேலையை நான் விட்டுவிட்ட பின்னர், வீட்டில் இருந்தேன். அவ்வேளையில் என் மகளின் தூண்டுதல் தான் இவ்வாறான ஒரு எண்ணத்தைத் தந்தது. ''சமூகத்துடன் இணைந்தே உங்களது இத்தனை வருட பணியும் இருந்தது. இனியும் சமூகத்திற்காக ஏதாவது செய்யலாமே அம்மா'' என்றதுடன் இவ்வாறான ஆரோக்கியம் சார்ந்த செயற்பாட்டை முன்னெடுப்பது பற்றிய அடிப்படைக்கருத்தை தந்ததும் மகள் தான். தவிர எனது கணவர் தாதியச் சேவையில் இருப்பதால் அவருடைய ஆலோசனையும் இதுவாகவே இருந்தது. நானும் சமூகத்திற்கான மாபெரும் பலமாக இவ்விடயம் இருக்கும் என்பதால் இதனைக் கையில் எடுத்துள்ளேன்.

**உங்கள் எதிர்காலத்திட்டங்கள் பற்றி பகிரமுடியுமா?**

இச்சேவையை விரிவுபடுத்தவேண்டும், என்னைப்போன்று இந்த துறையை நேசிப்பவர்களை இணைத்து பாரியளவில் முன்னெடுப்பதன் மூலம் எமது மக்களின் நோய் வீரியத்தை குறைக்கவேண்டும் என்பதே எனது அவா.


புலம்பெயர் உறவுகளும் எம்முடன் தொடர்புகொண்டால் அவர்களின் பெற்றோர், உறவுகளின் ஆரோக்கியத்தினை எமது தொடர் கண்ணகாணிப்பில் எடுத்துக் கொள்வோம்.

நல்லதொரு செயற்றிட்டத்தின் மூலம் மக்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்த ஆரம்பித்துள்ள பெற்றல்புளும்ஸ் தனது சேவையை விரிவுபடுத்தி தொடரவேண்டும் என வாழ்த்திவிடைபெற்றோம்.

## 'மொக்க' ஜோக்ஸ்!

''உங்க பாட்டி, கதை சொன்னதும் தூங்கிடுவியா?''

''ம், எங்கப்பாவும், அம்மாவும் சண்டைய ஆரம்பிச்சதும் தான் தூங்குவேன்!''








''கொலையை பத்தி விசாரிக்க, நம்ம தலைவரை எதுக்கு போலீஸ் தேடி வந்துருக்கு?''

''எங்கேயும் சரியான துப்பு கிடைக்கலையாம்; இவர் நல்லா துப்புவார்னு கேள்விப்பட்டு வந்துருக்காங்களாம்!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வும் சோதிடமும்




சி.நற்குணலிங்கம்

ஆயகலைகளில் ஒன்றாக விளங்குவது சோதிடக் கலை. இதனைப்பற்றி சித்தர்களும் முனிவர்களும் எடுத்தியம்பியுள்ளனர். தமிழர் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாக சோதிடக்கலை விளங்குகின்றது. ஜாதகத்தில் நவக்கிரகங்களின் நிலையே எம்மை உயரத்திற்கும் அவலத்திற்கும் இட்டுச்செல்கின்றது. சோதிடம் உள்ளதை உள்ளபடி காட்டும் கண்ணாடி. ராமர் காடு சென்றதும் தருமர் சூதாடிச்தோற்றதும், சோதிடத்தின் பலாபலன்களே.

சோதிடம் என்பது கோள்களின்நகர்வுகளை அடிப் படையாகக் கொண்டு எதிர்காலத்தைக் கணிக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை ஆகும். உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்களில் கணிசமான தொகையினர் இதனை நம்புகின்றார்கள். சோதிடத்துக்கு எந்த விதமான அறிவியல் அடிப்படையும் இல்லை.

ஜோதிடம், வேதத்தின் ஐந்தாம் வேதாங்கமாக கருதப்படுகிறது. இது வேதங் களின்கண்களாக கருதப்படுகிறது. கோள்களும், வான் வெளியில் அவற்றின் நகர்வுகளும் உலகில் வாழும் எல்லா உயிரினங்கள் மீதும், அவற்றின் செயற்பாடுகளிலும், மற்றும் பல விதமான இயற்கை நிகழ்வுகளிலும் தாக்கத்தை உண்டாக்குகின்றன என்னும் கருத்துருவே சோதிட நூலின் அடிப்படையாகும்.

சோதிடம் என்ற வார்த்தையான என்ற கிரேக்கப் பெயர்ச்சொல்லிருந்து பிறந்ததாகும். இதற்குக்கிரேக்க மொழியில் நட்சத்திரங்களின் கணக்கு என்று பொருளாகும். இச்சொல்லானது நட்சத்திரக் கணிப்பு என்றாக மாற்றமடைந்தது.

குழந்தை பிறக்கும் நேரத்தினை கொண்டு அந்நேரத்தில் நவகிரகங்களின் நிலையை கணக்கிட்டு எழுதுவது ஜாதகம் எனப்படுகிறது. நவகிரகங்களின் நிலையைக் கொண்டு குழந்தையின் ராசியும், நட்சத்திரமும், இலக்கணமும் குறிக்கப்பெறுகின்றன.

இந்துக் காலக் கணிப்புமுறையால் உருவான பஞ்சாங்கம் என்ற கால அட்டவணைக் கொண்டு ஜாதகத்தின் பலன்கள் கணிக்கப்பெறுகின்றன. பஞ்சாங்கம் வாரம், திதி, கரணம், நட்சத்திரம், யோகம் என ஐந்து உறுப்புகளைக் கொண்டதாகும்.

பன்னிரண்டு ராசிகளும் ஒன்பது கிரகங்களும் இருபத்தேழு நட்சத்திரங்களும் சோதிடத்தின் அடிப்படை அம்சங்களாகும். கால்நடையாகச் சென்றவர், விண்கலத்தில் செல்வதும் மாளிகை வாழ் தனவந்தர் மண்குடிசையில் வாழ்வதும் சோதிடத்தின் மார்க்கமே ஆகும். ஒவ்வொருவரின் குணாதிசயங்கள், வாய்க்கப்பெறும் நல்ல காலம், வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், அதிலிருந்து எவ்வாறு மீளலாம் என்பதெல்லாம் சோதிடம் தருவதே.

நம் முன்னோர்கள் மிகுந்த அறிவாளிகள். வானவியலை கரைத்து குடித்தவர்கள். அதனால் தான் அவர்கள் உருவாக்கியுள்ள பஞ்சாங்கத்தைபயன்படுத்தி இன்றளவும் சூரிய கோள் மறைவு (கிரகரணம்),சந்திர கோள்மறைவு முதலானவற்றை துல்லியமாக கணித்து சொல்ல முடிகிறது.

நாளும் கோளும் நல்லன என்றாலும் சோதிடத்தின் ஆதிக்கம் எம்மை வழிநடத்துகிறது என்பதை உணர்ந்து நடப்பது காப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேசும் பெண்மை

# மாலைசூட காத்திருக்கும் மங்கையர்

கோபிகை

என்னதான் பெண்ணடிமைத்தனம் ஒழிந்துவிட்டது என்றும் ஆணுக்கு நிகராய் பெண்களும் உள்ளனர் என்றும் கூறப்பட்டாலும் பெண்கள் பல்வேறுபட்ட இன்னல்களையும் இடர்களையும் சந்திப்பது என்பது நாளாந்தம் கூடுகின்றதே தவிர குறையவில்லை. வீட்டு வன்முறைகளும் சமூக வன்முறைகளும் நிகழ்ந்த வண்ணமே தான் உள்ளன. ஆண்களைவிட சமூகம் பெண்களுக்கென சில வஞ்சகங்களை உண்டுபண்ணியே வைத்துள்ளது. அதில் ஒன்றுதான் கைம்பெண்களுக்கான மறுவிவாகம் என்பதும்.

இன்றைய காலத்தில், கடந்த யுத்தம் பரிசளித்த கைம்பெண்களின் எண்ணிக்கை அதிகம், ஆனால் அதில் எத்தனைபேர் மறுமணம் செய்தனர் என்றால் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இருக்கும். காரணம், பல பெண்களுக்கு மறுமணத்தில் விருப்பு இருந்தாலும் அவர்களை ஏற்றுக் கொள்ளும் பரந்த எண்ணம் ஆண்களுக்கு உண்டா என்பதே. மனைவியை இழந்த ஒரு தபுதாரனுக்கு பெண் தேடும்போது கூட திருமணமாகாத கன்னிப் பெண்ணாகவே தேடுவார்கள். அப்படியான பெண்ணையே தேடிப்பிடித்து விவாகமும் செய்துவைப்பார்கள். கணவனை இழந்தவளை திருமணம் செய்ய ஒரு தபுதாரன் கூட முன்வராத போது திருமணமாகாத இளைஞர்கள் முன்வரவேண்டும் என்றோ முன்வருவார்கள் என்றோ எதிர்பார்ப்பது முட்டாள்தனமான ஒன்றுதானே.

பெண்களின் எதிர்பார்ப்புகள் வரையறுக்கப்பட்டவை, ஒரு கைம்பெண் கணவனை இழந்தால் பின்னர் அவள் வாழக்கூடாதா? அவளுக்கென்று ஆசைகள் இருக்காதா? நிர்பந்தமான ஒரு சூழ்நிலைக்காக அவள் தனது எண்ணங்களையும் ஆசைகளையும் உள்ளத் திற்குள் புதைத்துக் கொள்கின்றாள். அவளது ஆசைகள் வார்த்தைகளாக வடிக்கப்பட்டாலே வித்தியாசமாய் பார்த்துவிடும் சமூகம், அவளுக்கும் மனசு உண்டு என்பதைப்பற்றியா சிந்திக்கப்போகின்றது.

வித்தகி ஒரு இளம் விதவை, தினம் தினம் தன் வாழ்க்கையை எண்ணி அவள் கண்ணீர் வடித்தபடிதான் வாழ்கின்றாள். திருமணம் செய்து மூன்று ஆண்டு களில் கணவனை எறிகணைக்கு பறிகொடுத்தவள் அவள், ஏழைக்குடும்பம், சகோதரர்கள் நால்வர் உண்டெனினும் அவர்கள் அவளைப்பற்றிச் சிந்திக்க நேரம் அற்றவர்கள், சிந்திக்க விரும்பாதவர்கள், முதல் திருமணங்களே சீதனக் கயிற்றில் நெரிக்கப்படும் காலத்தில் இரண்டாம் திருமணத்திற்கு அள்ளிக்கொடுக்க யாரால் முடியும் என்பதே அவர்களின் வாதமாக உள்ளது. மரக்கறி வியாபாரம் செய்யும் தாய், அவரால் என்ன முடிந்துவிடப்போகிறது. தன் ஒரே குழந்தையோடும் வலியோடும் நகர்கிறது அவளது வாழ்க்கை

வித்தகிகள் பலபேர் உண்டு, அவர்கள் விதியை மாற்ற முற்படும் மனிதநேயம் மிக்கவர்கள் யாருமுண்டோ?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










அன்பழகி கஜேந்திரா எழுதிய ''உனக்குள் நீ'' கவிதை நூல் வெளியீட்டு விழா. 04082018 சனிக்கிழமை காலை 9.30 ற்கு மன்னார் நகர மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கவிஞர்கள், படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், சமூக நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர். இவரது படைப்பின் பயணம் தொடர வாழ்த்துவதுடன் இந்நிகழ்விற்கு ஒளிஅரசி ஊடகஅனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரியும் எதிரியின் நண்பனும்

நல்ல வேளையாக நாம் இன்னமும் காட்டுவாசிகளாக இல்லை! இருந்தாலும் என்ன? எம்மைச்சுற்றி எதிரிகள் என்ற பெயரில் காட்டு மிருகங்கள் எம்மை ஒழித்துவிட கங்கணம் கட்டிக் கொண்டே தான் இருக்கின்றன!

யாராவது ஒருவர் தனக்கு எதிரிகள் எவரும் இல்லை என்று அடித்துக் கூறவும் நிரூபிக்கவும் முன்வருவாரா?

இல்லை. ஒரு பாடசாலைச் சிறுவனுக்கு அவனது வகுப்பில் எதிரிகள் உண்டு.

எந்த நாட்டினதும் ஜனாதிபதிக்கோ பிரதம மந்திரிக்கோ எதிரிகள் இல்லை என்று கூற முடியுமா?

சமூகத்தில் கீழ் நிலையில் இருக்கும் ஒருவருக்குக்கூட உன்னை நான் ஒழிக்கிறேனா இல்லையா பார் என்று சவால் விடும் எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அரசியல் வாதிகளுக்கும் பொருளாதார நிலையில் மிக மிக உயர் நிலையில் இருப்பவர்களுக்கும் ஏன் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்? எதிரிகள் இருப்பதனால்தான்.

வாழ்க்கையில் ஒவவொருவருக்குமே எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள் எனவே நாமும் எமது எதிரிகள் பற்றி விழிப்பாக இருப்பது அவசியம்.

எதிரிகளை எப்படி இனம் காணுவது? எமது எதிரிகள் தூர தேசத்தில் இருக்க மாட்டார்கள். எமக்கு அருகில் எம்மைச் சுற்றியே இருப்பார்கள்.

எமக்கு நேரும் கஷ்ட நஷ்டங்களை யிட்டு உள்ளூர மனம் மகிழ்வர்.

எமக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மெதுவே நழுவி விடுவார்கள்.

எம்மைப்பற்றி எவராவது குற்றம் கூறி விமர்சிக்கும் சந்தர்ப்பத்தில் மௌனமாக இருந்து அவதானிப்பர். எமக்கு எதிராக செயல் படுபவர்களை இனம் கண்டு அவர்களுடன் அதிகளவில் நட்பு பாராட்டுவர்.

வாழ்கையில் எமக்கு கஷ்டங்கள் நேரும் போதும் அல்லது நாம் எதற்காகவாவது தண்டிக்கப்படும் போதும் அவருக்கு அது வேண்டும் என்று கூறி நியாயப் படுத்துவர்.

அனைத்துக்கும் உச்சக்கட்டமாக எவரையாவது தூண்டி அல்லது தானே



நேரே முன் வந்து கெடுதல் உண்டு பண்ணுவர்.

எமக்கு எதிரிகள் உருவாகக் காரணம் என்ன என்பதை எம்மால் புரிந்து கொள்ளக் கூடுமாயின் பலர் எமது எதிரிகளாக மாறுவதை தவிர்க்க முடியும். அது பற்றி ஆராய்வோம்.

உண்மையைச் சொல்லப்போனால் இவன் ஏன் நல்லவனாக இருக்கிறான் என்ற அசூயை வயப்பட்டே சிலர் எமது எதிரிகளாகிவிடுகிறார்கள்.

உங்கள் அழகு, கம்பீரம், வகிக்கும் உயர் பதவி, செல்வாக்கு, பணபலம், ஆள்பலம் இவை பலருக்கு பகைமையை உண்டு பண்ணும்.

நீங்கள் ஒருவரிடம் உதவி பெறும் நிலையில் இருந்திருப்பீர்கள்.

இப்போ உங்கள் சுயகாலில் நிற்கும் அளவுக்கு முன்னேறி விட்டிருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போதுமே!

ஒருவருக்கு உங்களிடமிருந்து பெரும் தொகை பண உதவி தேவைப் படுகிறது.

உங்களால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை. உறவு முறிவதற்கு வேறு காரணம் வேண்டா!

நீங்கள் நியாயத்திற்கு புறம்பாக நடப் பவரல்ல. ஆனால் ஒருவர் சட்டத்திற்கு புறம்பாக உங்களிடம் ஒரு உதவியை நாடுகின்றார். நீங்கள் மறுப்பதை உங்கள் தவறாகவே அவர் கருதுவர்.

கௌரவமான உங்கள் குடும்பத்துடன் விவாக பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள ஒருவருக்கு விருப்பம். உங் களுக்கு அவர் விருப்பத்தை நிறை வேற்றும் படியான சந்தர்ப்ப சூழ்நிலை இல்லை. உறவே அறுந்து விடுமளவுக்கு பகை உண்டாகும்.

சரி, இனி உங்கள் எதிரிகளை நீங்கள் வெற்றி கொள்ள கடைப்பிடிக்கக் கூடிய உத்திகள் பற்றி ஆராய்வோம். துஷ்ட னைக்கண்டால் தூர விலகு என்று எம் மத்தியில் ஒரு பழ மொழி உண்டு.

எதிரியை வெல்வதற்கு மிக மிக சிறந்த வழி இதுவேயாகும்! எதிரி இயன்றவரை மறைந்திருந்தே செயல் பட முனைவான். அவனை நாம் இனம் கண்டு விட்டதை எவர் வாயிலா கவாவது அவனுக்கு தெரிவிக்க வேண்டும்.

எம்மைப்பற்றிய எந்த செய்தியும் அவனுக்குப் போகாதபடி தடுத்து விட வேண்டும்.

எம்மிலும் எமது முன்னேற்றத்திலும் ஆர்வமுள்ளவர்களுக்கு எமது எதிரிகள் யார் யார், என்ன காரணத்திற்காக அவர்கள் எமக்கு எதிராக திரும்பினர் என்பதை முற் கூட்டியே தெளிவு படுத்தி விட வேண்டும்.

எதிரிகள் அடாவடித்தனம் புரியுமள வுக்கு வளர்ந்து விட்டால் சட்ட நடவ டிக்கை எடுக்கப்போவதாக எச்சரிக்கலாம். அதற்கும் பணியாவிட்டால் சட்ட நடவடிக் கையை முன்னெடுத்தல் எந்த வகையிலும் தவறாகாது!

இவை யாவற்றுக்கும் மேலாக நீங்கள் பயனடையக் கூடிய ஒரு முக்கிய தகவலை தருகின்றேன்.

உங்கள் எதிரிக்கு பல நண்பர்கள் இருக்கலாம்.

அவர்களிலெவராவது உங்க ளுடனும் பழகிக் கொண்டிருக்கிறா ரென்றால் அவர் பற்றி மிக மிக அவதானத்துடன் இருங்கள்.

எதிரிக்கு எதிரி உங்கள் நண்பனாக இருக்கக்கூடும். ஆனால் எதிரிக்கு நண்பன் உங்கள் நண்பனாக இருக்க முடியா தல்லவா? நான் பண்டாரவளை பிரதி நீர்ப்பாசனபணிப்பாளர்பணிமனையில் கடமைபுரிந்து கொண்டிருந்த போது பாலசுந்தரம் என்பவர் நிர்வாக உத்தி யோகத்தராக இருந்தார். அவரது வயதிற் கேற்ப அனைவரையும் தனது பிள்ளை களாக கருதி அன்பு செலுத்தும் இயல் பினர்.

சுசாந்திக்கா என்ற இளம் யுவதி அவர் மேல் அன்பு பாராட்டி நடந்து கொண்டி ருந்தாள். அவளது விருப்ப பிரகாரம் அவளது ஊருக்கு இடமாற்றம் பெற அவர் உதவி செய்தார். இடமாற்ற கட் டளையும் வந்து விட்டது. அவளது விடு தியில் புதிதாக இரு இளைஞர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர்களை தனது அண்ணன்மார் என அறிமுகம் செய்தாள்.

அன்றைய தினம் நிர்வாக உத்தியோகத்தர் தனது மதிய உணவுக் காக ஹோட்டல் ஒன்றை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது சுசாந்திக்கா அவர் பின்னால் ஓடி வந்து அவரது கையில் ஒரு பண நோட்டை திணித்து விட்டாள். அவளை தொடர்ந்து வந்த இளைஞர்களில் ஒருவன் அவரது கையை கெட்டியாகப் பிடித்து பண நோட்டை வாங்கிக்கொண்டான்.

அந்த தாளில் இருந்த இலக்கம் அவர் களிடமிருந்த இலக் கத்துடன் ஒத்துப் போவதை அவருக்கு உறுதி செய்தபின் அவருக்கு விலங்கு மாட்டி கைது செய் தார்கள். அவர்கள் இலஞ்ச ஊழல் அதி காரிகள் என்று பின்னர் தெரிய வந்தது! எமது எதிரிகள் எந்த உருவிலும் இருப் பார்கள். நாம் தான் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்!

( வளரும் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கதைச்சுருக்கம் : சில வருடங்களாக லண்டனில் வசித்து வரும் துர்கா, திருமண வரவேற்பொன்றில் சயந்தன் என்பவனைச் சந்திக்கிறாள். குழந்தையோடு இருப்பவனிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ளவும் நினைக்கிறாள். அவனோ, துர்காவை எதிர்கொள்கிறான். ஆனாலும், ஒருவர் மற்றவருடன் கதைத்துக்கொள்ளும் சூழல் அவ்வளவாக அமையவில்லை. திருமண வரவேற்பிலிருந்து வீடு திரும்பும் துர்காவின் மனதில் அவளின் பாடசாலை நாட்கள்! அதில், சயந்தனும் வந்துபோகிறான். அவன்மனதிலும் அவள் நினைவுகள்தான். அதில், அவளை வார்த்தைகளால் நோகடித்துவிட்ட சந்தர்ப்பமும் வந்துபோகின்றது!

ரோசி கஜன்

# மெல்லிசையாய் வசமானாய்



என்வென்று சொல்லுவது? அடுத்தநாள் ஞாயிறு! இவனுக் குத் திருமணம் ஆகிவிட்டது என்றெண்ணி, இதுவரை தன்னுள் இருந்த இவனுருவை எப்பாடுபட்டாவது வெளியேற்றிட வேண்டும் எனும் முடிவோடு துர்கா கண்விழிக்க, இவனோ, தேடு தலின் விடையாக கண்டுகொண்டவளின் நினைவுகளோடு உறங்கி, அதே இதமான நினைவுகளோடுதான் கண்திறந்தான். ஞாயிற்றுக் கிழமையாச்சே! எழுந்ததும் அவளுக்கு அழைத்துக் கதைக்கவே மனம் பரபரத்தது. நேற்றிரவு நேரம் செல்லத்தூங்கப் போயிருப்பார்கள். இல்லையென்றாலும் ஞாயிறன்று விடிய வெள்ளன போன் பண்ணினால் நல்லாவா இருக்கும்? தனக்குள் புலம்பினான்.

பத்துமணிபோல எடுத்துக் கதைப்போம்! இறுதியாக இந்த முடிவுக்கு வந்து காத்திருந் தவனால் அது முடியாதுபோய்விட்டது. அதற்கு முதல் அழைத்த வேலையிடத்து நண்பன், தான் அவசரமாக ஊருக்குப் போவதாகச் சொல்லி இவன் உதவியைக் கோரி நின்றான்.

இந்தக்கிழமை முடித்தாக வேண்டிய ப்ரா ஜெக்ட் சயந்தன்! என்றதும் மறுக்கவும் முடிய வில்லை. அவன் வேலையே போதும்போது மென்ற அளவுக்கு இருக்கும்போது மேலதிக மாக ஒன்று! அந்தக் கிழமை முழுவதும் வேலைவேலையென்று நிறையவே திணறிப் போனான். அப்போதும், மனம் மட்டும் அவள் நினைவில் உழன்றது! அவனைப்போட்டு கண்டபடி திட்டித்தீர்த்துக்கொண்டிருந்தது. அதைச் சமாதானம் செய்யக்கூட நேரம் கிடைக்கவில்லை அவனுக்கு!

சில மணி நேரத்தூக்கம். அதிலும் அவள் பற்றிய நினைவுகளே, மறுநாளுக் கானஉத்வேகம்தருவதை மறைக்காது ஒப்புக்கொண்டது இவனுள்ளம்.

இப்படியிருக்கையில், அந்த வாரக்கடை சியில் கிடைத்த சொற்பநேரத்தில், அலுவல கத்தில் இருந்தபடியே துர்கா வீட்டுக்கு அழைத்தான்.

சில அழைப்புகளிலேயே ஹலோ!ஒலித் தது. அவள் எடுக்கமாட்டாளா? என்றிருந்த ஏக்கம் தொக்கி நிற்க, ஹலோ ஆன்ட்டியா? நான்சயந்தன். அன்றைக்கு கல்யாண வீட்டில் சந்தித்தோமே! அஞ்சனாவின் அண்ணா. என்ற அறிமுகத்தோடு சிறிது நேரம் அளவ ளாவிட்டு, துர்கா இல்லையா ஆன்ட்டி? என வினவினான், கம்பீரமாகவே!

துர்காவா? அவள் அம்மாவோடு தங்கச்சி வீட்ட போய்ட்டாள் தம்பி. நாளன்றைக்குத் தான் வருவாள். என்றதும், ஒஹ்! சற்றே யோசித் தவன், அவரிடமிருந்து அவளின் கைபேசி எண்ணை வாங்க நினைத்தான்.

முக்கியமான அலுவல் ஏதுமா தம்பி? விசா ரித்தார் அவளின் அன்னை. அப்படி யெல்லாம் இல்லை ஆன்ட்டி. இப்படி துர்காவைக் கண்டேன் என்று அஞ்னாவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல, அவளுக்குச் சரியான சந்தோசம். மொபைல் நம்பர் வாங்கித்தரச் சொன்னவள். அதுதான்! துர்காவோடு கதைக்கவேண்டும் என்றதுக்காக அதையும் இதையும் சொல்லிச் சமாளித்தான். இவளைச் சந்தித்ததைத்தான் அவன் யாரிடமும் சொல்லவில்லையே! பிறகெப்படி அஞ்சனாவுக்குத் தெரியவரும்? முதலில் துர்க்காவோடு கதைத்து அவளின் சம்மதத்தோடு வீட்டில் சொல்லவே விரும்பினான்.

ஒஹ்! அதுக்கென்ன! நம்பர் சொல்லுறேன் எழுதுங்கோ! என்று அவளின் கைபேசி எண்ணைக் கொடுத்த அவள் அன்னை, மேலும் சிறிதுநேரம் அளவளாவிவிட்டு வைத்தமறுகணம், அவன் விரல்கள் அவளின் கைபேசி எண்ணைத் தட்டியிருந்தன. ஆனாலும், அவள் எடுக்கவில்லை. இத்தனை நாட்களும் அவளைத்தேடித் திரிந்தவன் சந்தித்தும் கைவிட்டு விட்டானோ! ஏதோ, அவள் தொலைதூரமாக விலகிப்போனதாய் உணர்ந்தான் அவன்.

பச்! என்ன வேலை இருந்தாலும் அடுத்த நாளே எடுத்துக் கதைத்திருக்க வேணும். மனதில் முணுமுணுத்தவனை தாயிடமிருந்து வந்த அழைப்பு தன்பக்கம் இழுத்துக் கொண்டது.

சொல்லுங்கம்மா. என்ற மகனின் குரலில் சுரத்தில்லாததைக் கண்டுகொண்டார் அவன் தாய். என்னய்யா குரல் ஒரு மாதிரிக்கிடக்கு? நல்ல சுகமாகத்தானே இருக்கிறாய்? சுகத்துக்கு என்னமாகுறை? எப்பவும் போலத்தான் இருக்கிறன். மீண்டும் சுரத்தின்றி ஒலித்தது அவன் குரல். தம்பி! வீட்டில வேலையில ஒரு பிரச்சனையும் இல்லையே? அக்கறையும் கவலையுமாக ஒலித்த தாயின் குரலில் சுதாகரித்துக்கொண்டான் அவன்.

அப்படியெல்லாம் ஒன்றும் இல்லம்மா. இந்தக்கிழமை இரட்டிப்பு வேலை. இரண்டு பேர் செய்யிறதை ஒரு ஆளாகச் செய்ய வேண்டிய சூழ்நிலை! ஒஹ்! வேலை என்றால் அப்படி இப்படித்தான் இருக்கும். நீ உன் உடம்பைக் கவனித்துக் கொள்! நேரத்துக்குச் சாப்பிடு! தாய்க்கு மகன் எப்போதும் சிறியவன் தானே? அப்படியே அவன் தாயும் அறிவுரை சொன்னார். அதோடு நிறுத்தாது, தம்பி, ஒரு முக்கிய விஷயம் ராசா! மென்மையாக ஆரம்பித்தார்.

அதைச்சொல்லத் தான் நீ இன்னும் வீட்டுக்கு வந்திருக்கமாட்டாய் என்று தெரிந்தும் எடுத்தனான். சந்தோசத்தோடு ஒலித்தது அவர் குரல்.

சொல்லுங்கம்மா. அஞ்சு வீட்டாக்கள், அப்பா எல்லாரும் நல்லா இருக்கீனம்தானே? அஞ்சுவின் மாமிதான் கொஞ்சம் உடம்புக்கு முடியாம இருக்கிறார். ஹைபிரஷராம்.

மற்றும்படி, நாங்கஎல்லாரும் நல்லா இருக்கிறம் தம்பி. நான் சொல்ல வந்தது என்ன என்றால் ராசா... மெல்ல இழுத்தவர், நீலண்டனிலிருந்து வந்ததும் கல்யாணம் செய்வேன் என்றனி தானே?

திடீரென்று தாய் இப்படிக் கேட்கவும் ஒருகணம் திடுக்கிட்டு விட்டான் சயந்தன். மறு நிமிடமோ, இத்தனை நாட்களும் திருமணம் என்ற பேச்சை ஆரம்பத்ததுமே முற்றுப்புள்ளி வைத்த நான், இம்முறை, இப்படிச் சொன்னராசிதான் என் துர்காவைக் கண்ணில் காட்டியிருக்குப் போல! இப்படித்தான் மனதுள் எண்ணிக் கொண்டான். அப்போதும், அவளுக்கு எத்தனை தடவைகள் போன் பண்ணினேன். எடுக்கவில்லையே! ஆதங்கம் கலந்த எரிச்சலும் உருவானது.

அன்றைக்கு நான் அப்படியெல்லாம் கதைத்ததை இன்றைக்கும் நினைவில் வைத்து என்னைத் தவிர்க்கிறாளோ! என்ற ஐயமும் எழுந்தது. கல்யாணப் பேச்செடுத்ததும் இவன் இப்படித்தான் அமைதியாகி விடுவான். ஒருவித வருத்தத்தோடு முணுமுணுத்தார், அவன் தாய்.

தம்பி! என்ன சத்தமே இல்லை. ஓமென்று சொன்னாயல்லவா? மீண்டும், அழுத்திக் கேட்டார். அம்மா! என்ன நீங்க? நான் வர இன்னும் எட்டுமாதங்கள் கிடக்கு, தெரியுமா? அதனால, இதைப்பற்றிப் பிறகு கதைப்போமே! இன்னும் கொஞ்சவேலைகள் முடிக்க இருக்கம்மா.

வேலை எப்போ இல்லை, சொல்லுபார்ப்போம்! சொல்லவந்ததைச் சொல்லீட்டு வைக்கப்போறேன். அதுக்குள்ள உனக்கு அவசரம் என்ன? இப்போ அதட்டல்வந்தது.

அம்மா! அம்மாதான்டா! அம்மாவே தான். என்ன பெரிய எட்டுமாதங்கள்? ஏழரைச் சொச்சம். அதெல்லாம் பார்த்திருக்கப் பறந்திடும். அதனாலதான்... சற்றேநிதானித்தவர், நம்ம பக்கத்து வீட்டு மாலா தன்ர மகனுக்கு பெண் பார்க்கிறா தெரியுமோ? உன்னை விட நாலு வயது சின்னப்பெடியன். போகிற போக்கில் மகனுக்கு ஒரு குட்டு! தரகரிட்ட ஜாதகம் கொடுக்க என்னையும் வரச்சொல்லிக் கூடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனனான். அப்போ, தற்செயலாக ஒரு பெண்ணின் ஜாதகமும் போட்டோவும் பார்த்தேன் தம்பி! மீண்டும் நிறுத்தி, இவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணினார்.

ஓஹ்! அப்படியா? சந்தோசமம்மா! மாலா அன்ரிக்கு, போன கையோடு மருமகள் கிடைச்சிட்டா என்று சொல்லுங்கோ,பேச்சை முடிக்கவிரும்பினான் அவன்.

மாலாவுக்கா? நான் என்ன சொல்ல வாறன், நீ என்ன விளங்கிக்கொள்கிறாய்? மாலாவுக்கு இல்லை, எனக்கு மருமகள் கிடைச்சிட்டா என்று சொல்லு! இத்தனை நாளும் எத்தனை பெண்பார்த்தும் நீ எல்லாத்தையும் உப்புச்சப்பில்லாத காரணங்கள் சொல்லிதட்டிக்கழிச்சுவிட்டாய்! இந்தமுறை அதுக்கு நான் விடப்போவதில்லை, நினைவில் வைத்திரு! இந்தப் பெண்ணை எனக்கு நல்லாப் பிடிச்சிட்டுது, வீட்டில எல்லோருக்கும்தான். அழுத்தமாகச் சொன்னவர்,

உன் சம்மதம் கிடைத்தால் பெண் வீட்டில் கதைக்கலாம் தம்பி. மென்மையும் கெஞ்சலும் ஒட்டிக்கொண்டது.

இப்பவே ஆயத்தங்கள் செய்தால்தான் நீ வந்தபிறகு கல்யாணம் செய்யச் சரியாக இருக்கும்யா. என்ன போட்டோ அனுப்புறேன் பார்க்கிறாயா?

தாய் கதைத்தவற்றை இவ்வளவு நேரம் கேட்டதே பெரியவேலை என்கிற மாதிரி, அம்மா! சற்றே அழுத்தமாக அழைத்தவன், அங்கஒருபெண்ணும்பார்க்கவேணாம்மா! பிறகு உங்களோடு கதைக்கிறேன். பை! அவருக்கும் மேலாக அழுத்தமாகச் சொல்லி அழைப்பையும் துண்டித்து விட்டான்.

கையிலிருந்த தொலைபேசியைப் பார்த்தபடிஅமர்ந்திருந்தவனுக்கு, தாய்மனம்சுணங்கித் தன்னைத் திட்டுவார் என்பது தெரிந்திருந்தாலும் அவரின் அவசரத்துக்கு எதையும் செய்யமுடியவில்லையே! ஆயாசமாகச் சாய்ந்தவன், மறுநொடி, தொலைபேசியை எடுத்து இலக்கங்களைத் தட்டினான்.

தொடரும்......

## அறிந்து கொள்வோம்

வினோஜ்குமார்

- இங்கு யாரும் தாழ்ந்தவர்கள் அல்ல நீங்களே உங்களை அவ்வாறு கருதுவதும் முறையுமல்ல
- உள்ளமது உடைந்து விட்டால் உங்களை அழிக்க பெரு வெள்ளமொன்று தேவையில்லை
- சிறு துளியொன்றே போதும் உங்களை சின்னாபின்னமாக சிதைத்திட
- நீங்களும் கிடைக்காத ஒரு அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருப்பவராக இருக்காலாம். இல்லையேல் கிடைத்த அன்பை நிலைக்க வைப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பவராக இருக்கலாம்
- உறவுகளால் உதறிவிடப்பட்ட பாதையோர யாசகனாய் இருக்காலாம். இல்லையேல் உறவுகளை உதறிவிட்ட பண நேசகனாகவும் இருக்கலாம்
- காலங்கள் பல கடந்தும் வளர்ந்து கொண்டே செல்லும் இமயம் போன்ற வன்மையானவராய் இருக்கலாம்
- இல்லையேல் இளம் சூட்டிற்கே இயற்கை எய்யும் பனித்துளியை போல் மென்மையனாவராகவும் இருக்கலாம்
- எல்ரோராலும் ரசிக்கப்படும் ஒளித் துகிலை உடுத்திக் கொண்ட பௌர்ணமி இரவாகவும் இருக்கலாம்
- இல்லையேல் எவருமே ரசிக்காத ஒளித் துகிலை தொலைத்த அமாவாசை இரவாகவும் இருக்கலாம்
- ஆனால் நீங்கள் யாருக்கும் தொந்தரவானர் அல்ல உங்களை தொந்தரவென கருதுபவர்களுக்கு எங்கோ உங்களைவிட ஓர் சிறந்த ஆறுதல் கிடைத்து விட்டதென விலகிச் செல்லுங்கள்

ஏனெனில் நீங்கள் வேறொருவருக்காக அனுப்பி வைக்கப்பட்ட ஆறுதல் ஔடதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரும் மார்க்கும்



இவருக்கு தமிழ் பேசவோ எழுதவோ தெரியாது, எமது தமிழ்பெருங்கிழவி ஔவை பற்றியோ அவர் அருளிய ஆத்திசூடி பற்றியோ இவர் அறிய வாய்ப்பே இல்லை. ஆனாலும் இவர் தனது வாழ்க்கையில் அடைந்திருக்கும் வெற்றிக்கும் உயரத்திற்கும் காரணம் ஆத்திசூடி சொல்லும் நல்விதிகள் ஐந்தை நேர்மையுடன் கடைப்பிடித்ததே ஆகும்.

யார் இவர் என்று நீங்கள் முனகுவது தெரிகிறது. உலகின் இளம் பில்லியனர்களில் ஒருவரும் உலகின் முதலாவது சமூகவலைத்தளமான முகநூலின் நிறுவுனருமான மார்க் ஸுக்கர் பெர்க். இவரது வெற்றியை தீர்மானித்த ஔவையின் ஐந்து விதிகளையும் பாத்துவிடலாம்.

நியூயோர்க் அருகிலுள்ள டாப்ஸ்பெரி என்ற சிறுநகரத்தில் அமைந்துள்ள பல்மருத்துவமனையின் மருத்துவரான எட்வர்டு தனது மருத்துவமனையில் கணினிகளை நிறுவினார். அப்போது அவரது மகன் தத்தி நடக்கும் பருவத்தில் இருந்தான். சிறு பிராயத்திலேயே கணினியின் ஸ்பரிசத்தோடு வளர்ந்தான் சிறுவன் மார்க். பத்து வயதில் அவன் கணினியை கேட்டு அடம்பிடிக்க வாங்கிக்கொடுத்தனர் பெற்றோர். வளரும் பயிரை முளையிலே தெரிந்தது. படம் வரைந்து வர்ணம் தீட்டி படம் பார்த்து அலுத்துப்போனது அவனுக்கு.

**கோபிகை** ✍




''அப்பாஇது அலுத்துவிட்டது'' என்றான், அவ்வேளை புரோக்கிராமிங் புத்தகம் ஒன்றை விளையாட்டாய் தூக்கிக்கொடுத்தார் தந்தை. மார்க் அதில் லயித்தான். அதனைப்புரிந்து சிறுசிறு புரோக்கிராம்களை எழுத ஆரம்பித்தான்.

அந்த விளையாட்டு அவனுக்கு பிடித்திருந்தது. மகனின் ஆர்வத்தை கண்டுகொண்ட தந்தை பக்கத்தில் நடந்த புரோக்கிராமிங் வகுப்பிற்கு அனுப்பினார்.

சிலநாளில் ''அப்பா உங்க கணினியையும் வரவேற்பில் இருக்கிற கணினியையும் ஒரே வலைத்தளத்தில் கொண்டுவாங்கப்பா'' என்றான் மார்க். மாக்கின் சொற்படியே செய்தார் எட்வர்ட். வைத்தியரும் வரவேற்பாளரும் தகவல் பரிமாறிக்கொள்ளும்படி புதிய சாட் புரோக்கிராம் எழுதி அசத்தினான் மார்க். இன்றைக்கு உலகையே முகநூலால் இணைத்திருக்கும் மார்க் நிகழ்த்திய முதல் சாட் அது.

வீடியோ கேம்களில் மூழ்கிக்கிடக்கும் பதின்ம வயதில் மார்க் தன்னைப்போன்ற புரோக்கிராம் ஆர்வமுள்ளவர்களுடன் இணைந்து புதிய கேம்ஸ்களை உருவாக்கினான். அதற்காக புரோக்கிராம்தான் வாழ்க்கை என அவன் அப்போதே முடிவெடுக்கவில்லை. அது என்னவோ செம்புலப்பெயர் நீர்போல அனுடன் கலந்திருந்தது இத்திறனும்.

பள்ளி இறுதி ஆண்டில் ஒரு புரஜெக்ட் செய்யவேண்டும். மார்க்கும் நண்பர் அடமும் சேர்ந்து ஸினாப்ஸ் என்ற புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியூசிக் பிளேயரை உருவாக்கினார்கள்.

கணினியை உபயோகிப்பவர் எந்த வகையான பாடல்களை விரும்பி கேட்கின்றார்கள் என அவர்களின் ரசனையை ஸினாப்ஸ் மோப்பம் பிடித்துக்கொள்ளும். ஏற்கனவே இருக்கும் பாடல்கள் புதிதாகச் சேர்க்கும் பாடல்கள், எல்லாவற்றிலும் இருந்து அவருக்குப்பிடித்த மாதிரியான பாடல்களை தானே தேர்ந்தெடுத்து ப்ளே லிஸ்ட் ஒன்றை உருவாக்கி ஒலிக்கச்செய்யும். பள்ளி அளவில் ஸினாப்ஸ் புகழ் பெற மார்க்கும் அடமும் அதை இணையத்தில் இலவசமாக உலவவிட்டார்கள். பயன்படுத்தியோர் பாராட்டிக் குவித்தனர்.

பள்ளிச்சிறார்களின் அபாரதிறன் எட்டுத்திக்கும் எட்டியது. மைக்ரோசொப்ட் முதல் மியூசிக்மேட்ச் வரை சிறிய பெரிய நிறுவனங்களின் பார்வை இருவரையும் எட்டியது. மார்க் சற்றே மிரளத்தான் செய்தார். ஐயோ, அதுக்குள்ளயா? நான் மேலே படிக்க வேண்டும் என நழுவினார். சரி, ஒரு மில்லியன் டொலர் தர்றோம், அந்த ஸினாப்ஸை எங்களுக்கே வித்திடுங்களேன் என்றனர். மைக்ரோசொப்ட் இரண்டு மில்லியன் டொலர் தருவதாகவும் அழைத்தது. ஆனால் அங்கே மூன்று வருடம் பணிபுரியவேண்டும் என்ற நிபந்தனையுடன். மைக்ரோசொப்டில் வேலை என்பது மிகச்சிறந்த வெகுமதி என்றாலும் மார்க்கின் மனமோ அப்படியென்றால் என் கல்லூரி கனவுகள் என கேள்விகேட்டது. தன்னை குழந்தை தொழிலாளியாக்க விரும்பாத மார்க் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தார்.

அங்கே ஒவ்வொரு செமஸ்டரின் ஆரம்பத்திலும் மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்குரிய பாடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தங்கள் நண்பர்கள் காதலிக்க விரும்புபவர்கள் தேர்ந்தெடுக்கும் பாடத்தை அறிந்தால் தாங்களும் அதனையே பற்றி விடலாம் அல்லவா? அதனைத் தொகுத்துச்சொல்லும் பொதுவான இணையத்தளம் ஒன்றும் இருக்கவில்லை. மாணவர்கள் தவித்தனர். அவ்வேளைதான் மார்க், 2003ம் ஆண்டு கோர்ஸ் மேட்ச் என்ற இணையத்தளத்தை உடனடியாக உருவாக்கினார். அது அமோக வரவேற்பை பெற்றது. அதனை உருவாக்க எவ்வித தரவுத்தளமும் மார்க்கிடம் கிடையாது. மாணவர்கள் தளத்தினுள் நுழைந்து தமது விபரங்களை தாங்களே பதிவுசெய்து கொண்டனர். கோர்ஸ் மேட்சின் இந்த வகை தான் முகநூலின் அடித்தளமும் கூட.

மார்க், முகநூலை நிறுவுவதற்கு பல ஆண்டுகள் முன்னரே அங்கே ஒரு முகநூல் புழக்கத்தில் இருந்தது. அந்த பல்கலைக்கழக மாணவர்களின் சுயவிபரங்களும் புகைப்படங்களும் அச்சடிக்கப்பட்ட தொகுப்பு. இணைய வசதி வந்தபின் அவை டிஜிற்றல் வடிவில் கிடைத்தன. ஆனால் அதில் ஒரு சிக்கல் இருந்தது, அந்தந்த துறை சார்ந்தவர்கள் தவிர வேறு யாரும் அதனைப் பார்க்கமுடியாது. பாதுகாப்பு, கடவுச்சீட்டு போன்றவை

## கோதாட்டு ஒழி.

மஞ்சள் வெயில் கவிந்த ஒரு மங்கலான பொழுதில் மார்க்கின் மூளையில் வித்தியாசமான ஒரு சிந்தனை பொறிதட்டியது, ஆம், பல்கலைக்கழகத்திலேயே அழகான ஆண் யார்? அழகான பெண் யார்? என்பதை கண்டு பிடிக்கும் புரோக்கிராம். வலைப்பின்னல் மூலம் அனைத்து துறையின் தகவல்களையும் திருடினார். ஃபேஷ்மேஷ் என்றொரு புரோக்கிராம் உருவாக்கினார். இரண்டு பெண்களின் புகைப்படத்தை ஒப்பிட்டு யார் அழகானவர் எனத் தேர்ந்தெடுத்தால் தேர்ந்தெடுக்கப்படாத படம் மறைந்து அடுத்த படம் தோன்றும். இப்படியே வாக்களித்துக்கொண்டே செல்லலாம். மார்க்க இதனை இணையத்தில் ஏற்றிய சில மணி நேரத்திலேயேமாணவர்கள் அதனை மொய்க்கத் தொடங்கினர். வாக்குகள் ஏறஏற ஹவாட்டின் இணைய இணைப்பு நெரிசல் கண்டது, மார்க்கும் பஷ்மேஷிற்கு முழுக்குப்போட்டார். அவ்வேளை தனக்குள் முடிவெடுத்தார், குற்றமான விளையாட்டைச் செய்யாதே. இது ஔவையின் முதலாவது நல்வழி. கோதாட்டு ஒழி.

**தொடரும்..........**

நன்றி விகடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடி அடர்த்தியாக வளர !



கூந்தல் நீண்டால் குடும்பத்திற்கு ஆகாது ஊரிலே சொல்லக்கேட்கும் பழமொழி இது. ஆனாலும் பெண்களின் அழகில் முக்கிய பங்கு வகிப்பது கூந்தல். கூந்தல் நீளமாக அடர்த்தியாக இருந்தால் எப்படிப்பட்ட பெண்ணும் அழகு தேவதைதான்.

இன்றைய அவசர உலகில் பெண்களுக்கு கூந்தலை பராமரிக்க போதிய நேரம் கிடைப்பதில்லை. அதன் விளைவு பிளவுபட்ட அடர்த்தி குறைந்த கூந்தல். அது மட்டுமல்லாது இன்றைய பெண்கள் முடியை கலர் செய்வது, ரீபொன்டிங், கேர்லிங் என பல வகைகளில் தமது முடியை அலங்கரித்துக் கொள்கின்றனர். சக்தி வாய்ந்த இரசாயனங்களை தலை முடிசகளுக்கு பயன் படுத்துவதால் கூந்தல் விரைவாக சேதமடைகிறது.

மேலும் நமது சுற்றுப்புறச் சுழலில் உள்ள மாசுக்களால் கூந்தல் பாதிப்படைகின்றது. அது போன்ற பாதிப்பை வேலைக்குச் செல்லும் பெண்களே அதிகளவில் சந்திக்க நேரிடுகிறது. தலை முடி அடர்த்தி குறைவாக இருக்கிறதே என இனி கவலைப்பட தேவையில்லை. தலையில் முடி அடர்த்தியாக வளர உங்களுக்கு சில குறிப்புக்கள்:

★ ஐந்து இதழ்கள் உள்ள செம்பருத்தி பூவை அரைத்து நல்லெண்ணையில் காய்ச்சி, வடிகட்டிய பின் தலைக்குத் தேய்த்தால் தலை முடி அடர்த்தியாக வளரும்.

★ முடி செழித்து வளர வாரம் ஒருமுறை வெண்ணெய்யை தலைக்குத் தடவி ஒருமணி நேரம் கழித்து கழுவி வந்தால் முடி நன்றாக வளரும்.

★ செம்பருத்தம் இலையை அரைத்து தலையில் தடவி அரைமணி நேரம் ஊறிய பின் தலையை சீயக்காய் அல்லது ஷாம்பூ போட்டு அலசவும். கூந்தல் அடர்த்தியாக வளரும்.


★ கறிவேப்பிலை, சின்ன வெங்காயம்4, இரண்டையும் நன்றாக அரைத்து அத்துடன் தயிர் சேர்த்து தலைக்கு தேய்த்து முழுகினால் கூந்தல் நல்ல கருமையான நிறத்துடன் வளரும்.

★ கடுக்காய், செம்பருத்தம் பூ, நெல்லிக்காய் ஆகியவைகளை சம அளவு எடுத்து தேங்காய் எண்ணெயில் காச்சி கூந்தலில் தடவினால் முடி நன்றாக வளரும்.

★ வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளித்தால் தலை முடி செழித்து வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொடுங்கள் கிடைக்கும்

'செம்புலப் பெயல் நீர் போலஅன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே' என்கிறது குறுந் தொகை. இதன் பொருள், இல்லறத்தில் பாசம், பிரியம், பண்பு அன்புடன் உள்ளங்கள் கலக்க வேண்டும். அதாவது செம்மண்ணில் பெய்த நீர்போல. இல்லறத்தின் ஆன்மா கணவன் மனைவிக்குள் வலுவான நீடித்த பிணைப்புக்கு பலமான அஸ்திவாரம் அன்பும், பாசமும் மட்டுமே. எவ்வளவோ செல்வமும், சுதந்திரமும் இருந்தாலும் இல்வாழ்க்கையில் பண்பும், பயனும் பெற அன்பும் அறனும் வேண்டும். இல்லறம் வெற்றி பெறுவதில்தான் வாழ்க்கையின் வெற்றி அடங்கி உள்ளது.

மணவாழ்வில் சுயநலம் குறுக்கிட்டால் வெற்றி வாய்ப்புகள் குறையும். கணவனும், மனைவியும் உண்மை உள்ளவர்களாக இருப்பதே இல்லறத்தின் உயிர்நாடி. உண்மையும், அன்பும் கொண்டு ஒருவருக்காக ஒருவர் வாழும் பொழுதுதான் இல்லறம் நிச்சயமாக இனிக்கும். பிணைந்து ஒன்றிய அவர்களின் அன்பே வாழ்வின் வெற்றிக்கான ஏணிப்படிகள்.

நட்சத்திர ஜன்னலில் வானம் எட்டிப் பார்க்குது
சிறகை விரித்துப் பறப்போம் நம் உறவில் உலகை அளப்போம்
விளையாடலாம் நிலாவிலே நிழல் மூழ்குமோ தண்ணீரிலே
வானைப் புரட்டிப்போடு புது வாழ்வின் கீதம் பாடு

சித்திரங்களைப் பாடச்சொல்லலாம்
தென்றலை அஞ்சல் ஒன்று போடச்சொல்லலாம்
புத்தகங்களில் முத்தெடுக்கலாம்
பொன்னாடை இமயத்துக்குப் போட்டுவிடலாம்
பூமிக்குப் பொட்டு வைத்து பார்க்கலாம் பார்க்கலாம்
பூவுக்கும் ஆடை தைத்துப் போடலாமா
சூரியத் தேரை மண்ணில் ஓட்டலாம் ஓட்டலாம்
சொர்கத்தின் புகைப்படத்தைக் காட்டலாமா
வானம்பாடி வாழ்விலே
வருந்தி அழுவதில்லை வணங்கி விழுவதில்லை

**திருமதி சந்தியா சந்தோஷ்**


சங்கீதப்புறா நெஞ்சில் பறக்கும்
சந்தோஷ முல்லை இங்கே வீட்டில் முளைக்கும்
சந்தனமழை நம்மை நனைக்கும்
பூந்தென்றல் பாதை சொல்ல வந்து அழைக்கும்
சிட்டுக்குச் சிறகடிக்கச் சொல்லித்தந்தாரடி, யாரடி
மீனுக்கு நீச்சல் கற்றுத் தந்ததாரோ
மேகத்தில் வீடு கட்டி வாழலாம் வாழலாம்
மின்னலில் கூரை பின்னிப் போடலாமா
ஓங்கும் உந்தன் கைகளால்
வானைப் புரட்டிப்போடு புது வாழ்வின் கீதம் பாடு

இனிமையும் மகிழ்வும் கொண்ட இல்லறவாழ்வில் இப்படித்தான் புதுமைகள் பூத்துக்கிடக்கும். இவ்வாறு எப்போதும் சந்தோச வானில் பறந்துகொண்டவர்கள் தான் ஆதவனும் அஞ்சலியும். பெற்றவர்கள் உற்றவர்கள் உறவினர் நண்பர்கள் என அனைவரது ஆசியுடனும் ஆரம்பமானது இவர்களின் இனிய இல்லறம். எப்போதும் தான், தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌந்தர்யம், தனது சௌகர்யம் என வாழப்பழகியவள் அஞ்சலி, கல்யாணம் செய்திட்டும் இப்பிடியே உன்னுடைய சுகங்களை மட்டுமே பாத்திட்டிரு,கட்டினவன் விட்டுட்டுப் போயிடுவான் என உறவினர்களில் உள்ள அவளது வயதுப் பெண்கள் கூட கேலி செய்வதுண்டு.

அப்போதெல்லாம் அவள் துடுக்காகச் சொல்வாள், ''எனக்குப்பிறகு தான் என்னால யாரையுமே நேசிக்கமுடியும், அப்படியே இருந்தாலும் அவங்களே என்னை ரொம்ப நேசிக்கிறமாதிரி பண்ணிடுவேன்'' என்பாள்.



அவளுக்கு கல்யாணம் ஆனது, பார்த்ததும் அவளுக்கு ஆதவனைப் பிடித்துவிட்டது. வீட்டவர்கள் பேசி நல்ல நாளில் திருமணமும் இனிதே நடந்தேறியது. அவளுக்குப் புரியாமலே அவளிடம் பல மாற்றங்கள் உண்டானது, கணவனுக்காக பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றையும் செய்தாள். அவன் வரும் வரை சாப்பிடாது பார்த்துக் கொண்டிருக்கும் அவளைப் பார்த்து அவளது சகோதரியும் மைத்துனியும் கேலி செய்வதுண்டு. அவள் அதைப்பற்றி எதையும் கண்டுகொள்வதில்லை. அவளுக்கு சிந்தனை முழுவதும் கணவனின் இதத்திலேயே இருக்கும்.

காலையில் எழுந்தது முதல் அவனது தேவைகள் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொள்ளுவதுடன் அவனுக்கு பிடித்தவைகளை மட்டுமே சமைக்கவேண்டும் என்பதில் கவனமாக இருப்பாள். அவன் அணிய வேண்டிய ஆடைகளைக்கூட தானே தெரிவு செய்துவிட்டு, இது உங்களுக்கு எடுப்பா இருக்கும், போடுறீங்களா என்பாள். பாசம் கொட்டும் மனைவியின் வார்த்தைகளில் மறுப்புசொல்ல யாருக்குத்தான் முடியும்? ஆதவன் மட்டும் என்ன விதிவிலக்கா?

சாப்பாட்டு விசயத்தில் அவள் காட்டுவது அதீத அக்கறையே. அதிலும் வீட்டில் பலபேர் இருந்தபோதும் அவனுக்காக செய்வதை தானே செய்துவைத்துவிடுவாள். வெளியே சாப்பிடவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தால் கூட ஆதவன் சாப்பிடாது வந்துவிடுவான். அலுவலகத்திற்கு கொண்டுசெல்லும் உணவு அதிகமாக இருந்தால் கூட அவனால் கொட்டிவிடமுடிவதில்லை.

''இன்றைக்கு சாப்பாடு கூட'' என்பான் ஆதவன்.

''மதியநேரம் பசிக்கும் என வைத்தேன், அதற்கென்ன,மீதியைக் கொட்டுவதுதானே'' என்பாள் அஞ்சலி.

''சாப்பாடு மட்டுமென்றால் கொட்டிவிடலாம், நீ அன்பையும் சேர்த்து கட்டிக் கொடுத்திருக்கிறாய், எப்படி கொட்டுவது '' என்பான் கணவன்.

நாணத்தோடு கர்வமாக புன்னகைப்பாள் மனைவி.

சில நேரங்களில் கணவனே, எனக்காக ரொம்பவும் பாக்கிறாய், உன்னையும் பார்த்துக் கொள் என்றாலும் அவள் கேட்பதில்லை. ஆதவனின் எண்ணங்கள் அவளுக்காகவே சுற்றவேண்டும் என்பதில் அவள் தீவிரமாக இருந்தாள். அதற்கான வழியாக அவள் கண்டுகொண்டது தான் இந்த ஆக்ரோசமான அன்பு காட்டல். அன்பைக் காட்டி அன்பை பெறுவதில் தவறென்ன இருக்கறது என்றது அவளது மனம். அந்த உத்தியை வலுவாய் அவள் பற்றிக்கொண்டாள். அவளது இல்லறம் செழிக்க அந்த எண்ணமே உரமானது.

ஆம்! அன்பு காட்டி அன்பை பெறுதல் என்பது இன்பத்தை தரவல்ல ஒன்றுதானே. அன்பு காட்டி அன்பை பெறுவது என்பது இல்லாது அன்பு காட்டவேண்டும் என்பது மட்டுமே எதிர்பார்ப்பாக இருப்பதும் இன்றைய காலத்தில் பல திருமணங்களில் தோல்விக்கு காரணமாக அமையலாம். அன்பு காட் அன்பை பெறுவோம், இது அனைவருக்கும் பொருந்தும் என்றாலும் இல்லறத்திற்கு அதிகமாய் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பிரசவம்



''கன்னி கழித்து
புதியது புனைந்து...
பத்துத் திங்கள்
சுமந்ததை ஈன்றிட...
இருகோள் மோதும்...
புயலது வீசும்...
பூமியின் நடுக்கம்
அறைதனில் கேட்கும்...

வயிறு ரசித்து...
வயிறு ரசித்து...
இத்தனை காலமும்
வயிறு ரசித்து...
பெண்மகள் வேண்டும்
என்பான் அவனும்...
ஆண்மகன் வேண்டும்
என்பாள் அவளும்...

ந[illegible]ம் கனிந்திட...
[illegible] மறைந்திட...
பல பல கற்பனை
நினைவினில் வளர்ந்திட...
கால்தனை ஊன்றியே
உதைப்பும் எழுந்திட...
சிசுவின் வருகையும்
சேதிகள் சொல்லிட...

விழிகளும் பிதிங்கிட...
அழுகுரல் ஓங்கிட...
நொடி நொடி தாய்மையும்
அழகாய் பேசிட
முகமதில் முத்தாய்
வியர்வைகள் பூத்திட...
தீயாய் வேதனை
உடல்தனை வாட்டிட...

அழகாய்.. இதமாய்..
குமிழ்நிலை மொட்டாய்...
பிற சக உயிரும்
பிரசவம் வந்திட
புதுவுயிர் அங்கே
ஜனனமும் எடுத்திட...

உறவின் கொடியை
அறுப்பாரங்கே...
மழலையை தன்னுடல்
சேர்ப்பாள் அங்கே...
கண்மடல் திறவா
பிஞ்சினைக் கெஞ்சி
விரல்களை இதமாய்
ரசிப்பாளங்கே...

அழுகுரல் ரசிப்பாள்...
அணைத்திட
நினைப்பாள்...
முத்தம் மாரிமழையெனப்
பொழிவாள்...
நெளியும்.. வளையும்..
சினுங்கிடும் உயிரை
மார்பில்சாய்த்து
குருதி பகிர்வாள்...


சொந்தம் சூழ்ந்தே
வளைப்பாரங்கே...
ஈன்றதைக் கண்டு
வியப்பாரங்கே...
அப்பன் தோற்றம்...
தாயின் மூக்கு...
கதைபல பேசியே
மகிழ்வாரங்கே...''

-வியன்சீர் கவிஞர் ராகுல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டிசம்



M.டிவனியா (B.B.A)
அறிவிப்பாளர்



**ஆட்டிசம்
இது நோயுமல்ல...
இது குறைபாடுமல்ல....**

★★★★★★★★★★★★★★

இருபதிற்கும் அதிகமானவர்கள் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனாலும், இது குறித்த சரியான புள்ளிவிபரங்கள்இல்லை. பெற்றோர் தொடங்கி மருத்துவர்கள் வரைக்கும் ஆட்டிசம் குறித்த விழிப்புணர்வு போதிய அளவு இல்லை. மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் நிலை மோசமாக உள்ளது.

ஆட்டிசம் என்பது மூளை, தகவல்களைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் திறனைத் தடுப்பது. அதாவது பார்த்தல், கேட்டல் என உணரும் விஷயங்களைச் சரியாகப் பயன்படுத்த முடியாமல், மனிதர்களின் நடவடிக்கைகள் மாறிப்போவதே ஆட்டிசம் எனப்படும்.

ஆட்டிசம் என்பது ஒரு குறைபாடுதானே ஒழிய, நோயல்ல. இதைச் சரியான காலத்தில் அடையாளம் காணாவிட்டால், குழந்தைகளின் எதிர்காலம் வீணாகிவிடும். இந்தக் குறைபாட்டைச் சீக்கிரமாகக் கண்டறிவதன் மூலம் குழந்தைகளிடம் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியும். இவ்வகைக் குறைபாடுள்ள குழந்தைகள் அதீத புத்திசாலியாக இருக்கவும் வாய்ப்புண்டு. புத்திசாலித்தனத்துக்கும் இக்குறைபாட்டுக்கும் தொடர்பில்லை.

## ஆட்டிசம் அறிகுறிகள்

★ எவருடனும் சேராமல் ஒதுங்கி இருப்பது.கண்களைப் பார்த்துப் பேசுவதைத் தவிர்ப்பது.

★ தனது விருப்பத்தைக் குறிக்க ஆட்காட்டி விரலைப் பயன்படுத்திச் சுட்டிக் காட்டாமல் இருப்பது.

★ சில செயல்களை சரியாகச் செய்ய முடிந்தாலும் சமூகப் புரிதல்கள் இல்லாமலிருப்பது.

★ பயம், ஆபத்து போன்றவற்றை உணராமல் இருப்பது.

★ பாவனை விளையாட்டுக்கள் இல்லாமல் இருப்பது.

★ வித்தியாசமான நடவடிக்கைகளை, ஒரே மாதிரியாக திரும்பத் திரும்ப செய்வது.

★ தனது தேவைகளை உணர்த்த, பெரியவர்களின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று காட்டுவது.

★ காரணமில்லாமல் அழுகை, சோகம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது.

★ வலியை உணராமல் இருப்பது.

★ வித்தியாசமான நடவடிக்கைகள் கைகளைத் தட்டுவது, குதிப்பது போல எதையாவது செய்துகொண்டிருப்பது.

★ வழக்கமான கற்பித்தல் முறைகளில் ஈடுபாடு இல்லாமை.

★ சில வேளைகளில் தொடப்படுவதையோ, அணைக்கப்படுவதையோ விரும்பாமல் இருப்பது.

★ தினப்படி செயல்பாடுகளில் மாற்றமில்லாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது. மாற்றங்களை அசவுகரியமாக உணருவது.

★ பொருளற்ற சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்வது.

★ பொருட்களைச் சுற்றிவிட்டு ரசிப்பது அதற்குள்ளேயே மூழ்கிப் போவது.

★ எதையும் கண்டுகொள்ளாமல் இருப்பது.

★ தன்னந்தனியே சிரித்துக்கொள்வது.

★ சுற்றக்கூடிய பொருட்களின் மீது ஆர்வமாய் இருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சக வயதுடைய குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை எவரிடமும் ஒட்டாமல் பெருங்கூட்டத்தில் தனித்து இருப்பது.

1943ல் டாக்டர் லியோ கானர் (Dr. Leo Kanner) என்பவர்தான் ஆட்டிசம் என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தினார். அவர் தனது பாசமான தொடர்பைச் சிதைக்கும் ஆட்டிசம் (Autistic Disturbances of Affective Contact) என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டார். அதில்தான் உலகில் முதன் முதலாக ஆட்டிச பாதிப்புடைய குழந்தைகளின் பிரச்சினைகள் பேசப்பட்டன.

அஸ்பெர்ஜர் சிண்ட்ரோம் (Asperger syndrome) பெரும்பாலும் பதின்ம வயதுகளிலேயே இக்குறைபாடு கண்டறியப்படுகிறது. இக்குறைபாடுள்ள குழந்தைகளுக்குப் பேசுவதிலும் புரிந்துகொள்ளும் திறனிலும் எந்தக் குறைபாடும் இருக்காது. சொல்லப்போனால் இக்குறைபாடுள்ள குழந்தைகளில் பெரும்பாலானவர்கள் சராசரிக்கும் மேம்பட்ட அறிவுத் திறனைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

அவர்களுடைய பிரச்சினையே, மற்றவர்களோடு கலந்து பழகமுடியாமல் இருப்பது தான். எனவே, வளர வளரத்தான் இந்த பிரச்சினையைக் கண்டுபிடிக்க முடியும். உலகில் மிகவும் பிரபலமாக இருந்த பல பேர் இக்குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குறைபாட்டை சூகீக் சிண்ட்ரோம் (Geek Syndrome) அல்லது சூலிட்டில் புரொபசர் சிண்ட்ரோம் (Little Professor Syndrome) என்றும் கூறுவதுண்டு.

ரெட் சிண்ட்ரோம் (Rett syndrome) இது பெண் குழந்தைகளுக்கு மட்டுமே ஏற்படக்கூடிய ஒரு பிரச்சினை. தலை வளர்ச்சி மிகவும் மெதுவாக இருப்பது, கைகளை முழுமையாகப் பயன்படுத்த முடியாமலிருப்பது போன்றவை இதன் அடையாளங்கள். இது பெரும்பாலும் மரபணு மூலமாகக் கடத்தப்படுகிறது. மேலும் சூரெட் மட்டுமே ஆட்டிசம் தொடர்பான குறைபாடுகளில் மருத்துவ ரீதியாக சோதித்துக் கண்டறிய முடிவதாக உள்ளது.

சி.டி.டி (Childhood Disintegrative Disorder) இவ்வகைக் குறைபாடு உள்ள குழந்தைகள் மற்ற ஆட்டிசக் குறைபாடுகளைப் போலின்றி, குறிப்பிட்ட வயதுவரை இயல்பான குழந்தைகள் போலவே பேசவும், மற்றவர்களோடு பழகவும் செய்வார்கள். திடீரென இவர்கள் பேச்சுத் திறன், பழகும் திறன் ஆகியவற்றை இழந்து ஆட்டிச நிலைக்கு உள்ளாவார்கள்.

ஆட்டிச பாதிப்புடைய பலரும் சில நேரங்களில் மூர்க்கமாக நடந்துகொள்வது உண்டு. இது அவர்களுடைய பயம் அல்லது எரிச்சல் காரணமாகவோ, உடல் ரீதியான சில சிக்கல்களாலோ ஏற்படுவது மட்டுமே. ஆட்டிசத்தின் காரணமாக அவர்கள் குரூரமான வன்முறைகளில் ஈடுபடுவது சாத்தியமற்ற ஒன்று.

ஆட்டிசமுடைய ஒரு சிலர், ஏதேனும் சில துறைகளில் அபாரமான ஞானம் உடையவர்களாக இருப்பது உண்மையே. ஆனால், அதற்காக ஆட்டிச பாதிப்புக்குள்ளான எல்லோருமே ஏதேனும் ஒரு துறையில் சிறப்பாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆட்டிச பாதிப்புக்குள்ளான ஒரு சிலரால் பேச முடியாமலும், சைகைகளால் மட்டுமே தொடர்புகொள்ள முடிவதாக இருப்பதும் நிஜமே.

எப்படி மனித உடலுக்குச் சர்க்கரை குறைபாடு வந்தாலோ, ரத்தக் கொதிப்பு வந்தாலோ 100 சதவீதம் குணப்படுத்த முடியாதோ, அதுபோலத்தான் ஆட்டிசமும். ஆனாலும் ஆட்டிச பாதிப்புக்கு உள்ளானவர்களைத் தொடர் பயிற்சியின் மூலம் ஓரளவுக்குச் சீரான நிலைக்குக் கொண்டுவர முடியும்.

## இயல்பும் பிறழ்வும்

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் மூளையுடன் கொண்டுள்ள புறத் தொடர்பு, அதனால் உணரப்படுவதை புத்தி என்று சொல்லலாம். எந்தவொரு பொருளையும் அல்லது விஷயத்தையும் மூளை உணர்வது கண், மூக்கு, வாய், காது, சருமம் ஆகிய புலன்களின் வழியே அவை தரும் அடிப்படைத் தகவல்களைப் பரிசீலிப்பதன் மூலம்தான். அத்தகவல்களின் அடிப்படையில்தான் நாம் மேற்கொண்டு சிந்தித்து, உணர்வுபூர்வமாகவும் உடல் மூலமாகவும் எதிர்வினையாற்றுகிறோம். சாதாரணமாக இவையெல்லாம் அனிச்சையாகவே நடக்கும் என்பதால், நாம் இவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை.

## என்ன பிரச்சினை?

ஆட்டிச பாதிப்பு கொண்டவர்களுக்கு இந்த சூசென்சரி உணர்வு சார்ந்த தகவல்களைப் பெறுவதிலும் அவற்றைப் பகுப்பாய்வு செய்து புரிந்துகொள்வதிலும் நிறைய சிக்கல்கள் உண்டு. அச்சிக்கலில் மாட்டியவர்கள், மிகுந்த மனப் பதற்றத்தையும், அழுத்தத்தையும் உணர்வார்கள். ஒரு சில ஆட்டிசம் பாதித்த குழந்தைகள் உடல் ரீதியிலான வலியையும் உணர்வதுண்டு. இது அவர்களின் நடத்தையை உடனடியாக பாதிக்கும்.

இக்குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமானபிரச்சினைகேட்பதில்ஏற்படுவதுதான். ஏனெனில், சத்தங்களைஉள்வாங்காதபோது மனிதனின் தகவல் தொடர்புத்திறன் மோசமாக பாதிக்கப்படுகிறது. ஒலிகள் மிகைப்



படுத்தப்பட்டும் கேட்கலாம். அல்லது குழப்பமாகவும், தெளிவில்லாமலும் கேட்கலாம்.

## உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்

உங்கள்குழந்தை ஆட்டிசத்தால்பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதில் அவமானகரமான விஷயம் எதுவும் இல்லை. எனவே, இந்த உண்மையை மறைக்க வேண்டியதில்லை. உறவினர்களிடமும் நண்பர்கள் வட்டத்திலும் குழந்தை ஆட்டிசத்தால் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது என்று சொல்லி விட்டால், தேவையற்ற தயக்கங்களைக் களைய முடியும்.

நம் குழந்தையை மற்ற சாதாரணக் குழந்தைகளுடன் ஒப்பிட்டு மனம் சோர்வுறவும் தேவையில்லை. நம் குழந்தை எதையெல்லாம் செய்யவில்லை என்று யோசித்து சோர்வுறாமல், குழந்தையின் சின்னச் சின்ன செயல்களையும் வெற்றியையும் கூட கொண்டாடப் பழகுங்கள்.

## மனந்தளராமல் செயல்படுங்கள்

ஆட்டிச பாதிப்பு என்பது வரையறுக்கப்பட முடியாதது. எனவே, எந்தக் கட்டத்திலும் இதற்கு மேல் நம் குழந்தைக்கு வளர்ச்சி இருக்காது என்ற முடிவுக்கு வந்துவிட வேண்டாம். வாழ்நாளின் ஏதேனும் ஒரு கணத்தில் அக்குழந்தைகள் எதையேனும் சாதிக்க முடியும். எனவே, மனதைத் தளர விடாமல் தொடர்ந்து கற்க அவர்களை ஊக்குவியுங்கள்.

பல்வேறு வாய்ப்புகளை அவர்களுக்குத் தொடர்ந்து அளியுங்கள். இசை, நடனம், ஓவியம், புதிர்களைஅடுக்குதல், ஸ்கேட்டிங் என எல்லா வகை வகுப்புகளையும் மெல்ல மெல்ல அறிமுகப்படுத்துங்கள். அக்குழந்தைக்குள் ஒளிந்திருக்கும் ஏதேனும் ஒரு திறனை நீங்கள் அறிய நேரிடலாம். அது குழந்தையின் வாழ்வில் திருப்புமுனையைஏற்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விகளே வெற்றிகளைப் பரிசளிக்கிறது





நேர்காணல் து.திலக்(கிரி)
சுவிற்சர்லாந்து

இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்று பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, பணியவைக்கின்ற ஓர் அருஞ் சாதனம் இசை. இசையின் பிரவாகங்கள் பலவுண்டு. தமிழர்களின் இசை வாழ்வியலோடு, உணர்வோடு கலந்தது. பிறந்தது முதல் மறையும் வரை ஒவ்வொரு அங்கத்திலும் இசையை வைத்து தங்கள் வாழ்க்கை முறையை பிணைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள். பாடல்களை மெய் மறந்து கேட்கும்போது மனிதன் கவலையை மறக்கிறான். உற்சாகம் பீறிட்டு வரு கிறது. இசை எனும் கடலுக்குள் தன்னை மூழ்கடித்துக் கொள்கின்றான்.

இன்று இசைக்குள் மூழ்கி முத்தெடுக்கும் பல மொட்டுக்களைக் காணமுடிகின்றது. அந்த வரிசை யில், இசையில் முத்தெடுத்த ஒரு இசைமொட்டே சுவிஸ் நாட்டில் வசிக்கும் மிதுல்லா சிவானந்தராசா. இவர் ஐபிசியின் தங்கக்குரல் தேடல் நிகழ்வில் முதலிடம் பெற்று இசைமுத்தாக அடையாளப் படுத்தப்பட்டவர். அவருடனான பகிர்தல் எம் வாச கர்களுக்காக .

தனது இசைப்பயணம் பெற்றோரால் தான் வழியமைக்கப்பட்டதாக கூறுகின்றார். பெற்றோர் இசைஆர்வம் மிக்கவர்கள் என் பதால்இவரது ஆறாவதுவயதில்இசைமீதான இவரது பிடிப்பை உணர்ந்து அவரை ஒரு இசை ஆசானிடம் கற்றலுக்காக சேர்த்தனர். ஆனாலும் அது நின்று போக அத்துடன் அவ ரது பாதையை நிறுத்திவிடாது வேறொரு ஆசான்மூலம்அவரது பாதையைஅமைத்துக் கொடுத்தனர். புலம்பெயர் தேசத்தில் எமது கலைகளை வளர்ப்பதற்கான முன்னெடுப் புகள் பலவற்றை சில அமைப்புகள் மேற் கொள்கின்றனர். அவர்களுக்கு எமது வாழ்த் துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறுவயதில் அதிக போட்டிகளில் பங்கு பற்றியிருந்தபோதும் தான் அதிக மாக தோல்விகளையே தழுவியுள் ளதாக கூறும் இவர் அந்த தோல்விகளில், தான், துவண்டுபோனதில்லை எனவும் அதி லிருந்து பாடங்களைத்தான் கற்றுக்கொண் டேன் எனவும் கூறுகின்றார். தங்கத் தமிழ்குரல் தேடல் போட்டியின் ஒவ்வொரு தருணங்களும் பல பாடங்களையும் நல்ல பண்புகள் பலவற்றையும் கற்றுத்தந்ததாக கூறும் இவர், முதல் மேடை ஒரு நாட்டார் பாடல் பாடியதாக அமைந்ததாக பகிர்ந் துள்ளார்.

தனது இசைப்பயணத்தில், இப்போட்டி மறக்கமுடியாதபல அனுபங்களையும்மகிழ்ச் சியையும் தந்ததாகவும் சிறந்த அறிவிப் பாளரான அப்துல்ஹமீட் அவர்களுடனான பொழுதுகள் பல வழிகாட்டல்களைத் தந்த தாகவும் அவரிடம் இருந்து பல விடயங் களைக் கற்றுக்கொண்டதாகவும் மனம் கனிந்து கூறினார் மிதுல்லா. அந்தப் போட்டியில் பங்குபற்றிய அனைவரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி தோல்வியைத்தாண்டி சிறந்த முறையில் செயற்படவேண்டும் என்பதையே முன்னிலையில் கொண்டிருந்ததாகவும் அந்த மேடை தனக்கு வெற்றியை மட்டுமன்றி நிறைய பாடங்களைக் கற்றுத் தந்தது என்றும் நடுவர்கள் முழுத்திறனையும் வெளிப்படுத்த உதவினர் என்றும் நெகிழ்வுடன் பகிர்ந்தார். வர்ண ராமேஸ்வரன் அவர்களும் ஏனைய நடுவர்களும் அதிகளவில் ஆலோசனைகளையும் வழிப்படுத்தல்களையும் வழங்கினார்கள் எனவும் கூறியுள்ளார்.

தனது தனித்துவமான பாடல்கள் வரிசையில் தான் அதிகமான பாடல்களைப் பாடியதாகவும் அனேகமானவை தந்தையுடன் இணைந்தே பாடியது எனவும் கூறுகின்றார். தற்போது தனது இசைப்பயணம் தென்னிந்திய சினிமாவை நோக்கி நகர்வதாகவும், டிக் டிக் படத்தில் இமான்சேரின் இசையில் ஒரு பாடலைப் பாடியிருந்தேன். பல தோல்விகளைச் சந்தித்தவள் என்பதால் எனக்கு மேடைப்பயம் என்பது மிகக் குறைவு. இருப்பினும் அங்கே எனக்கு என் உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுத்து என்னிடமும் விடயங்களைப் பகிர்ந்து கொண்டு செய்தமை குறிப்பிட்டே ஆக வேண்டிய விடயம் என்றார்.

இது வரை அதிகமானவர்கள் எனக்கு அனுசரணை வழங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் என்றார். அத்தோடு அவர் பாடிய டிக்டிக் படப் பாடலையும் எம்மோடு பகிர்ந்துகொண்டார். எந்த ஒரு திறமையையும் கையில் எடுக்கும் போது, அது மனதிற்கு பிடித்த துறையாக உள்ளதாக இருக்கவேண்டும் என்றவர் ஒரு போட்டியில் வெற்றியீட்டும் போது அதில் எமது முழுமையான திறமையும் வெளிப்படவேண்டும். அப்போதுதான் அது மனதிற்கு ஆத்மதிருப்தி தருவதாக இருக்கும். எவ்வளவு தோல்விகளைச் சந்திக்கின்றோமோ அவ்வளவிற்கு வெற்றிகள் காத்துக் கிடக்கின்றன என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. இது என்னுடைய அனுபவமாகவும் உள்ளது என்றார்.

என் மனதிற்கு பிடித்த இந்த துறையையே எனது இலட்சியமாக எடுத்தபோது எனக்கு ஆதவளித்த பெற்றோருக்கு எனது நன்றிகள். , என் தங்கைதான் ரம்மியா சிவானந்தராசா. எனது வழிகாட்டி, அவருக்கும் எனது நன்றிகள் , நாங்கள் இருவரும்



ஒருத்தருக்கொருத்தர் கற்றுக்கொடுப்போம், எனதுகுரு ஆறுமுகம் சரஸ்வதி, மற்றும் எங்களோடு எப்போதும் இணைந்து பயணிக்கும் எனது சித்தப்பா, தட்டிக் கொடுத்தவர்கள், எனது தவறுகளை சுட்டிக் காட்டியவர்கள், முக்கியமாக இமான்சேர், என்னை அடையாளப்படுத்திய ஐபிசி தமிழ் அனைவருக்கும் என்றும் எனது நன்றிகள் இருக்கும், என்றவர் இந்த வாய்ப்பினைத் தந்த ஒளிஅரசிக்கும் தனது நன்றிகளைக் கூறிக்கொண்டார். அவருடைய இசைப் பயணம் தொடர வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெற்றோம்.

கடந்த காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி, இனி வருங்காலத்திலும் சரி இசையால் தான் பெரும் மாற்றங்களை காண முடியும். இசை கலைஞர்கள் அந்த மரபுகளை மாற்றாமல், நெறி முறைப்படி, இசையோடும் உணர்வோடும், வலியுறுத்தி செயற்பட்டு வந்தால் இசையை யாராலும், எந்த தளத்திலும் அசைக்க முடியாது. இசையாலும் உலகை ஆழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# வளையலின் ஓசை



நம் முன்னோர்கள் சொல்லித்தந்த ஒவ்வொரு செயல்களும் ஆயிரம் அர்த்தங்கள் நிறைந்தவை. அவை எமது நலன்களுக்கானவை. அந்த வரிசையில் கையில் வளையல் அணிவதன்சிறப்பு பற்றி அறிந்துகொள்வோம்.

வளையல்கள் ஒன்றோடு ஒன்று உரசும் போது ஏற்படும் ஒலி, நமக்குள் உடன்பாடான எண்ணங்களை உண்டு பண்ணிக்கொண்டே இருக்கும். நமது எண்ணங்கள் தெளிவு பெறும். மூளையின் செயற்பாடுகள் சுறுசுறுப்பாகும். நாடி நரம்பில் படும்படி அணியப்படும் வளையல், மேலும் கீழுமாக அசைவுறப் பெறுவதால் ஒரு சின்ன சூடு உண்டாகும். இது உடலின் ரத்த ஓட்டத்தையும், இதயத் துடிப்பையும் சீராக வைத்திருக்கும்.

வட்ட வடிவ வளையல் அணிவதே சிறந்தது. இதனால் எப்போதும் ஒரு சந்தோஷ மனநிலையிலேயே இருப்போம். தொடர்ந்து குலுங்கக் குலுங்க வளையல் அணிபவர்களுக்கு, ரத்த அழுத்தம் வராது. சீரற்ற மாதவிடாய் ஏற்படாமலிருக்கும்.

தங்கம், வெள்ளி, கண்ணாடி மற்றும் பித்தளை வளையல்கள் அணிவது பரிந்துரைக்கத்தக்கவை. பருமனான உடல்வாகு கொண்டவர்கள் செம்பு வளையல்கள் அணியலாம். உடலில் தேவையில்லாத கொழுப்பை கரைக்க அது உதவும். பித்தளை வளையல் கனமாக இருக்கும். அதனால், கைகளில் இருக்கும் அழுத்தப் புள்ளிக்கு நல்லது.

சிப்பி, கிளிஞ்சல் வளையல் கள் அணிந்தால், வாயுத்தொல்லையில் இருந்து நிவாரணம் கிடைக்கும். பிளாஸ்டிக் வளையல்கள் அணிவதால் பயனேதும் இல்லை

கர்ப்பம் தரித்த நாளில் இருந்தே பெண்கள் தங்க வளையல் அணிவது நல்லது. தங்கம், ஒரு சிறந்த எதிர்ப்புசக்தியாகச் செயற்படும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். வயிற்றில் இருக்கும் குழந்தையும் நல்ல மூளைச் செயற்பாட்டுடன் வளரும். பின், வளைகாப்பு நாளில் இருந்து கண்ணாடி வளையல் அணிந்துகொள்ளலாம்.

குழந்தைக்கு வளையல் குலுங்கும் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும், இது, கர்ப்பப்பைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும். குழந்தையின் மூளை சுறுசுறுப்புடன் இருக்கும். பிரசவத்துக்குப் பின் ஏதாவது ஒரு வகை வளையல் கண்டிப்பாக அணிய வேண்டும் என்றார்.

மணிக்கட்டில் இருந்து கைமூட்டு வரை, சின்னதில் இருந்து பெரிதாக வளையல் அணிவது சிறப்பு. தளர்வாக வளையல்கள் அணிய வேண்டாம். கையில் ஒட்டி உரசிக்கொண்டே இருப்பதுபோல, சின்ன வளையல்களாக அணியலாம். பச்சை மற்றும் சிவப்பு நிற வளையல்களைத்தான் சடங்கு, திருமணம், வளைகாப்பு என சுப நிகழ்ச்சிகளில் அதிகம் பயன்படுத்துவார்கள். குணம் பெற உதவும் சக்தி பச்சை நிறத்துக்கு உள்ளது என்பதால்தான் மருத்துவமனைகளில் பச்சை நிறத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

ஊதா வளையல்கள், முடிவெடுக்கும் திறனை அதிகரிக்க செய்யும். பேப்பிள் வளையல்கள், சுய சுதந்திர எண்ணத்தை அதிகரிக்கும். மஞ்சள் நிற வளையல்கள், உடன்பாட்டு எண்ணத்தைக் கொடுக்கும். கறுப்பு நிற வளையல்கள், மன தைரியத்தை அதிகரிக்கும். தங்கம் மற்றும் வெள்ளி வளையல்கள், எதிர்மறை எண்ணங்கள் நம்மை அண்ட விடாது!

**என்ன வாசகிகளே! இனி அனைவரும் வளையல் கடையை வலம் வருவோமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Children's Day

# மனமே கலங்காதே

திருமதி. தேவா மாதவன்

மன அழுத்தம் என்பது தமக்குத்தாமே தேடிக்கொள்ளும் ஓர் இதயவலி. 27 வகையாக இதயவலிகள் உண்டு என ஓர் பிரபல மனநல வைத்தியர் கூறியுள்ளார். பெண்ணானவள் தனது குடும்பத்திற்காக எவ்வளவு தான் பாடுபட்டாலும் கணவரால் அலட்சியப்படுத்தப்படும் போதும் உறவுகளால் நிந்திக்கப்படும் போதும் தாங்கொணா வேதனை அடைகிறாள். நாளடைவில் இதனை நினைத்து தன் மீதே வெறுப்படைகிறாள். விளைவாக தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்கிறாள்.

சில சமயம் தன்னைப் புரிந்துகொள்ளாதவர்களை விட்டு நிரந்தரமாக விலகிப் போய்விடவும் நினைக்கிறாள். அது போலவே ஆண்களும். இத்தகைய மனநிலையில் வாழும் ஆண்களுக்கோ பெண்களுக்கோ ஒரு உண்மையான உத்தமமான பண்புகள் கொண்ட உயர்ந்த மனித ஜீவனின் அன்பும் ஆதரவும் கிட்டும் போது மனஅழுத்தங்கள் குறையலாம். குழப்பங்கள் தீரலாம்.

மனதை எப்போதும் அமைதியாக வைத்துக்கொள்ளவேண்டும். இதற்கு தியானம், யோகாசனம், பிராணயாமம் போன்ற பயிற்சிகள் உதவுகின்றன. எழுத்து, வாசிப்பு, இசை என்பவைகளும் பெருமளவு மனச்சுமையைக் குறைக்கின்றன. மனம் அமைதி அடையுமானால் உடலும் ஆரோக்கியம் பெறுகிறது. இது மட்டுமல்லாது, நமது மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு ஒரு நல்ல நட்பு, பெருந்தன்மை, பொறுப்பு, சகிப்புத்தன்மை, ஆற்றல் மிக்க மனிதாபிமானம் மிகுந்த ஒரு உயர்ந்த உள்ளத்தைக்கொண்ட ஜீவனிடம் தனது மனச்சுமையை, குறைகளை, வேதனைகளைக்கூறி ஆறுதலடையும் வாய்ப்புகள் கிட்டினால் இறுக்கங்கள் தளர்வடையலாம். சுமைகள் குறையலாம். மற்றும் நம் முன்னோர்களின் மனோத்துவ வழிமுறைகளும் அற்புதமானவையே. உதாரணத்திற்கு ஒரு கதை கூறுகின்றேன்.

மன்னர் கிருஷ்ண தேவராயர் மகள் எப்போதும் கவலையுடன் இருந்தாள். மன்னரால் காரணம் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆகவே மன்னர் தெனாலிராமனை நாடினார். தெனாலிராமனும் காரணத்தைக் கண்டபிடிப்பதாக கூறி மன்னர் மகளிடம் தனியாக விசாரித்ததில் இளவரசிக்கு பனித்துளிமாலை வேண்டும் எனக்கேட்டு அதிர்ச்சியுற்றார். தமது சமயோசித புத்தியால் சமாளிக்க நினைத்தார். அதன்படி மறுநாள், விடியற்காலை, இளவரசியை அழைத்துக்கொண்டு தோட்டத்துப்பக்கமாக வந்தார். தனது பையில் இருந்து ஒரு பட்டுநூலை எடுத்துக்கொண்டார். நாமிருவரும் சேர்ந்து இந்தப்பணியைச் செய்தால்தான் விரைவாக முடிக்கமுடியும். அதனால் பனித்துளியை எடுத்துக்கொடுப்பது உன் வேலை கோர்ப்பது என் வேலை என்றார். இதற்குச் சம்மதித்த இளவரசி, பலமுறை முயற்சித்து தோற்றுவிடவும் மனம் சோர்ந்தார். அதனைக்கண்ட தெனாலிராமன், கவலைப்படாதீர்கள் இளவரசியாரே, உங்கள் கழுத்தை அலங்கரிக்கும் பாக்கியம் இந்தப் பனித்துளிகளுக்கு இல்லை, இந்த அழகு முத்துமாலையை அணிந்துகொள்ளுங்கள், எனக்கூறி வேறு விலை உயர்ந்த முத்துமாலையைக் கொடுத்தார். தனக்கு கிடைக்கவில்லை என ஏங்குவதைக் காட்டிலும் தன்னிடம் வருவதற்கு அதற்குத் தகுதியில்லை என்ற உணர்வை இளவரசிக்கு ஏற்படுத்தினார். இது போன்ற உபாயங்கள் கூட மனஅழுத்தத்தை குறைக்கலாம் எனக்கூறப்படுகின்றது.

நன்றி : டொக்ரர் வேதகிரி கணேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகநூலை தளமாகக்கொண்டு எழுத ஆரம்பித்த பலர் அடுத்த கட்ட இலக்கிய பாய்ச்சலாக தமது படைப் புகளை பிரசவித்து வருகின்றனர். அந்த வெற்றிப் பாதை யில் தானும் இணைந்திருக் கிறார் நிவேதா நிவேதிகா. எறும்பூரும் பாதைகள் எனும் சிறப்பான பெயரினைத் தேர்ந்தெடுத்து அழகாக கவி கோர்த்து நூலாகப் பிரச வித்திருக்கிறார். இலக்கிய ஆளுமைகள் இலக்கிய ஆர் வலர்கள் என பலதரப்பினரும் இந்நிகழ்வில் கலந் திருந்தனர். பெரும்பான்மையாக முகநூல் உறவுகள் நிகழ் வில் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நல்ல பல கருத்துக்களையும் நிறைய உறவுகளைச் சந் திக்கும் தருணங்களையும் தந்திருந்தது எறும்பூரும் பாதைகள் நூல் வெளியீடு, இவரது படைப்புலக பயணம் பல வெற்றிகளோடு தொடர ஒளிஅரசியும் வாழ்த்தி நிற்கின்றாள்.








கலாபூசணம் கா.தவபாலன் எழுதிய 'குரலற்ற மனிதர்கள்' நாவல் வெளியீட்டு விழா குரும்ப சிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் 09.09.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு ஆரம்பமானது. ஈழத்துப் படைப்பிலக்கிய பயணத்தில் நாவல்களின் பங்கு பாரிய ஒன்றுதான். யாழ்ப்பாணத்தின் குரும்பசிட்டி என்பது கலை, இலக்கியத்தின் முக்கிய தளம். அந்த மண்ணில் இருந்து குரலற்ற மனிதர்கள் பிரசவமாகியிருப்பது சிறப்பான ஒரு விடயமாகும். படைப்பாளர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என திரண்டிருந்த சபையில் செவிக்கும் மனதிற்கும் இன்பம் தந்த பல உரைகளும் இடம்பெற்றமை பாராட்டிற்குரியதாகும். இவரின் இப்பயணம் மேலும் சிறந்து வளர ஒளிஅரசியின் நிறைந்த வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். (நன்றி - யோ.புரட்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org